# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 270 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 06, திங்கட்கிழமை 22.08.2016



வாசனா சம்பத
சுப்பர் ஃபிப்டி
இன்றைய சீட்டிழுப்பில்
3 எண்கள் பொருந்தி
ரூ.50,000 ஐ
வென்றிடுங்கள்!
SUPER FIFTY
NATIONAL LOTTERIES BOARD


## பிள்ளையானின் கட்சி ஆதரவாளர்கள் கைது

### காணாமற்போனோர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் என்கிறது பொலிஸ்

அம்பாறை, ஓகஸ்ட் 22

கடத்தல் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதியின் ஆதரவாளர்கள் என்று அறியப்பட்ட மூவர் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

திருக்கோவில் பிரதேசத்தில் வைத்து, அம்பாறை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரே இவர்களை நேற்று அதிகாலை கைது செய்தனர்.

திருக்கோவில் பிரதேசத்தில் காணாமற்போனவர்களின் உறவுகள், தமது உறவினர்கள் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டமை தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

அத்துடன் நல்லிணக்க செயலணியின் கருத்தறியும் அமர்வில் தெரிவித்திருந்தனர். >> 24ஆம் பக்கம்

## சங்குவேலிக் கொலையுடன் தொடர்புடையவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஓக. 22

மானிப்பாய் - சங்குவேலியில் இலக்குமாறி இளம் குடும்பத் தலைவர் ஒருவர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில், அதனுடன் தொடர்புடையவர் என்று அடையாளப்படுத்தப்படும் ஒருவரைக் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாள் வெட்டுக் குழுக்களைக் கண்டறியவென நியமிக்கப்பட்ட பொலிஸ் சிறப்புக் குழு குறித்த நபரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கைதானவர் 25 வயதுடையவர். எனினும் அவ்வாறு கைது செய்யப்பட்டவர், தான் வாளால் வெட்டவில்லை என்றும், ஆனால் வெட்டியவர்களுடன் சென்றிருந்ததாக விசாரணையில் தெரிவித்ததாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. ஆனால் அது பற்றிய முழுமையான விவரங்களைப் பொலிஸாரிடமிருந்து பெறமுடியவில்லை.

சங்குவேலியில் ஒருவரை வாளால் வெட்டுவதற்காக இலக்கு வைத்து சன்னா என்பவர் தலைமையிலான குழு, தமது இலக்கை மாறி குடும்பத்தலைவர் ஒருவரையே வெட்டிக் கொன்றதாக யாழ்.பிராந்திய >> 24ஆம் பக்கம்



## ஏழுமலையானை தரிசித்தார் மைத்திரி

சென்னை, ஓக. 22

இந்தியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரி ல சிறிசேன, திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு நேற்றுக் குடும்பத்துடன் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

விமானம் மூலம் பெங்களூருக்குச் சென்ற ஜனாதிபதி, பின்னர் அங்கிருந்து காரில் சித்தூர், திருப்பதி வழியாக இரவு 8.30 மணிக்கு திருமலைக்குச் சென்றார்.

ஆந்திர வனத்துறை அமைச்சர் கோபாலகிருஸ்ணா ரெட்டி மற்றும் தேவஸ்தான அதிகாரிகள், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், அரசியற் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வரவேற்பளித்தனர்.

இதைத் தொடர்ந்து, நேற்று அதிகாலை 2.15 மணிக்கு கோயிலுக்குச் சென்ற >> 24ஆம் பக்கம்

### குடாநாட்டில் குற்றங்களைத் தடுக்க

## பறக்கும் பொலிஸ் படையணி உருவாக்கவேண்டும்

### யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ். குடாநாட்டில் திடீரென ஒரு கிழமையில் வாள்வெட்டு, கொலை, கொலை முயற்சி, கொள்ளை, திருட்டு என்பன இடம்பெற்றுள்ளன. இந்த நிலமையை வளர விடக் கூடாது. இதனைக் கட்டுப்படுத்த பறக்கும் பொலிஸ் படையணியை உருவாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் உயரதிகாரிகளுக்குப் பணித்தார் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தலில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளதாவது:

நல்லூர் ஆலயத்தின் முக்கிய உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. புலம்பெயர் தமிழர்கள் உட்பட, ஒரு >> 24ஆம் பக்கம்

## வடமாகாண முதலீட்டாளர் சம்மேளனம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 22

முதலீட்டாளர்கள் சம்மேளன ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இளையோர்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அடிப்படையாக தொழில் முயற்சிகளை உருவாக்கும் நோக்குடனும், முதலீட்டாளர்களை வடக்கு மாகாணத்திற்குப் பொருத்தமான முதலீட்டுத் துறைகளுடன் இணைக்கும் நோக்குடனும் முதலீட்டாளர்கள் சம்மேளனம் ஆரம்பிக்கப்படுகிறது.

முதலீட்டுச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய தொழில் முனைவோர் அபிவிருத்தி அதிகார சபை, வங்கிகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, பனை அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களும் மற்றும் >> 24ஆம் பக்கம்

## ரூ. 7000 மில்லியன் நிதியில் பருத்தித்துறையில் மீன்பிடித் துறைமுகம்

### யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் அமைச்சர் அமரவீர

யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கையிலேயே மிகப்பெரிய மீன்பிடித் துறைமுகம் பருத்தித்துறையில் அமைக்கப்படவுள்ளது. அதற்கென 7 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர. வடபகுதி மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயவென 2 நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் மீனவர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்ததாவது: >> 24ஆம் பக்கம்

## பெரிய வெங்காயத்துக்கு 15 ரூபாவால் வரி அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 22

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்தது.

இதன்படி கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு கிலோ >> 24ஆம் பக்கம்

## வடக்கு மீள்குடியேற்றம் குறித்து கொழும்பில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கின் மீள் குடியேற்றம் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் இன்றைய தினம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று காலை இடம்பெறவுள்ளதாகச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டதையடுத்து, வடக்கின் 5 மாவட்டச் செயலாளர்களும் கூட்டத்துக்காக கொழும்பு சென்றுள்ளனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி யாழ். குடாநாட்டில் இடம்பெறவுள்ள போதைப் பொருள் தடுப்பு தொடர்பான கலந்துரையாடலில் பங்கு கொள்வதற்காக ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தருவார் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் யாழ்.நகரில் இடம்பெற்ற நத்தார் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி, ஆறு மாத காலத்தில் >> 24ஆம் பக்கம்

### மயிலிட்டி துறைமுக விடுவிப்புத் தொடர்பில்

## அமைச்சர் அமரவீர மௌனம்; மீனவர்கள் ஏமாற்றம், கவலை

யாழ்ப்பாணம், ஓக.22

மயிலிட்டித் துறைமுகம் விடுவிப்புத் தொடர்பில் சாதகமான பதிலை மீன்பிடித்துறை அமைச்சர் அறிவிப்பார் என எதிர்பார்த்திருந்த மயிலிட்டிப் பகுதி மீனவர்கள் ஏமாற்றமும் கவலையும் அடைந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மீனவ அமைப்பின் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்தார். இதன்போது மயிலிட்டித் துறைமுக விடுவிப்பு தொடர்பில் அமைச்சர் மௌனம் காத்தார். இதனால் கூட்டத்தில் பங்கு கொண்ட மீனவர் பிரதிநிதிகள் கவலை வெளியிட்டனர்.

இந்தக் கூட்டத்தின் நிறைவில் அமைச்சரிடம் மயிலிட்டித் துறைமுகம் தொடர்பில் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.

மயிலிட்டி துறைமுகம் தொடர்பாக மீனவர்களால் பல வேண்டு >> 24ஆம் பக்கம்

## போர்க்குற்ற விசாரணை செய்யத் தவறினால் ஆபத்து

### ஜனாதிபதிக்கு பரிந்துரைத்தார் பரணகம

*போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான சில குற்றச்சாட்டுக்கள் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்களுக்கு முரணாக இருக்கின்றன. நம்பகமான உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்ளத் தவறினால், ஐ.நா.வின் நேரடித் தலையீட்டுக்கு வழிவகுக்கக் கூடும். இவ்வாறு ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ள அறிக்கையில் பரிந்துரைத்தது காணாமற்போனோர் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழு.*

(விரிவு பக்கம் 11)

## கிளிநொச்சியில் இன்று பேரணி

யாழ்ப்பாணம், ஓக. 22

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய வளாகத்தில் புத்த விகாரை அமைப்பது பௌத்தர்கள் இல்லாத இடங்களில் திட்டமிட்டு பௌத்த சின்னங்களை அமைப்பது உள்ளிட்ட செயற்பாடுகளைக் >> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தென்னிலங்கை மீனவர் வடக்கில் அத்துமீறும் பிரச்சினைக்கு ஜனாதிபதியே தீர்வு வழங்குவார்

## யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் அமைச்சர் மகிந்த அமரவீர

வடக்குக் கட்றபரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறித் தொழிலில் ஈடுபடுவதால் வடக்கு மீனவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பில் மாவட்டச் செயலர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர் வரும் வியாழக்கிழமை அமைச்சு ஆராயும். அதன் பின்னர் ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்படும். ஜனாதிபதியே இந்தப் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவார்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர.

வடக்கின் மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பில் நேரில் ஆராய்வதற்கு இரண்டு நாள் பயணமாக அமைச்சர் நேற்று யாழப்பாணத்துக்கு வந்தார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது, மீனவர்கள் முன்வைத்த பிரச்சினைக்குப் பதிலளிக்கும்போது அவர் தெரிவித்ததாவது:

உள்ளூர் இழுவைப் படகுகள் அனைத்தும் எதிர்வரும் செப்ரெம்பர் 25ஆம் திகதியுடன் தடை செய்யப்படும். கடலட்டைத் தொழிலை உடனடியாகத் தடை செய்ய முடியாத போதும், கரையில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திற்குள் தொழில் புரிவது எதிர்காலத்திலும் நிரூபிக்கப்பட்டால், அவர்களின் அனுமதி சட்ட ரீதியாக நீக்கப்படும்.

வடக்கில் 12 இடங்களில் கடலட்டைத் தொழில் இடம்பெறுகின்றன. இவற்றின் உரிமையாளர்களில் ஒருவர்கூட சிங்களவர் கிடையாது. அனைத்தும் முஸ்லிம்களும், தமிழர்களுமே உள்ளனர். எனினும் கடலட்டைத் தொழில் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளதனால், இந்தியாவில் இருந்து வரும் மீனவர்கள் கூட எமது பகுதிக்குள்ளேயே சட்டவிரோதமாகக் கடலட்டையைப் பிடித்து எம்மவர்களிடமே விற்றுவிட்டும் செல்கின்றனர்.

இதன் காரணத்தினால் இந்தத் தொழிலை இலங்கையிலும் தடை செய்வது தொடர்பில் ஆராயப்படுகிறது. இதன் முதல்கட்டமாக கடலட்டை ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். அத்துடன் தற்காலிகமாக இரண்டு வருடத்துக்குத் தடை செய்வது குறித்தும் ஆராயப்படுகின்றது.

வடக்கு மீனவர்களின் மற்றுமோர் முக்கிய பிரச்சினையான தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் வடக்கின் 4 மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் இடம்பெற்ற கூட்டங்களின் பரிந்துரைகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றை எதிர்வரும் செப்ரெம்பர் 25ஆம் திகதி அமைச்சில் இடம்பெறும் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும். அதன்பின்னர் ஜனாதிபதியிடம் பரிந்துரைகள் முன்வைக்கப்படும். ஜனாதிபதியே இதற்கு ஒரு தீர்வை வழங்குவார்.

இதேபோன்ற இந்திய மீனவர்களின் அத்துமீறல் விடயத்தில் அவர்களிடம் இருந்து கைப்பற்றிய 130 படகுகள் மீளவிடுவிக்காமல் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவர்களின் வலைகளைக் கூட மீள வழங்கவில்லை. இந்த விடயத்தில் எமது மீனவர்களின் நலனையே நாம் முதன்மையாகக்கருதுகின்றோம். இந்தியமீனவர்கள்எமதுவளத்தை சுருட்டுவதை நான் நேரடியாகப் பார்வையிட்டுள்ளேன்.

இந்திய மீனவர்கள் விடயத்தில் தமிழ்நாடு அரசியல் வாதிகளும் தலையிடுகின்றமையினால் நாம் கவனமாகவே உள்ளோம். இந்திய அயலுறவு அமைச்சின் ஊடாக பேசியுள்ளோம். தொடர்ந்தும் பேசவுள்ளோம். இந்த விடயத்திற்கு விரைந்து தீர்வு காணுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். அதற்காக செப்ரெம்பர் மாதம் இந்திய அமைச்சர்களுடன் பேசவுள்ளோம். அதனைத் தொடர்ந்து இந்தியாவின் மீனவர் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவினர் இங்கு வரவுள்ளனர். வடக்கு மீனவர்கள் கடலிற்குச் செல்லும் சமயம் இரு இயந்திரங்களை கொண்டு செல்ல அனுமதி கோரப்பட்டது. அந்த வகையில் படகில் மொத்தமாக 40 குதிரை வலுவிற்கும் குறைந்த இயந்திரமே இருக்க முடியும் . 9.9 குதிரை வலுவை உடைய இரு இயந்திரங்கள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகின்றது. கரை வலைத் தொழிலில் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது - என்றார். (வ -10)

# அனுமதிப்பத்திரமின்றி கள் விற்ற நால்வர் காவலூரில் கைது

யாழ்ப்பாணம், ஓக. 22

அனுமதிப் பத்திரம் முடிவடைந்த நிலையிலும், கள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கள்ளுத் தவறணையின் விற்பனையாளர்கள் நால்வர் சந்தேகத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதிகளில் உள்ள கள்ளுத் தவறணைகளை திடீர் சோதனைக்கு உட்படுத்திய போது மதுவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் முடிவுற்றமை கண்டு பிடிக்கப்பட்டது. கள் விற்பனை நிலையங்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (வ-5-107)

# 5எஸ் திட்டத்தினுள் வருகிறது

## சுழிபுரம் பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஓக. 22

வலி.மேற்கு பிரதேச சபை 5 எஸ் திட்டத்தின் கீழ் முற்று முழுதாக உள்வாங்கப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டது.

இதற்கான ஆரம்ப கட்ட கூட்டம் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ச.குணவதி தலைமையில் இடம்பெற்றது.

இதில் வலி.மேற்கு பிரதேச செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி அதிகாரியான க. புஜங்கன் இந்த அலுவலகத்தை எவ்வாறு குறுகிய மூன்று மாத காலப்பகுதிக்குள் உள்வாங்குவது தொடர்பாக கருத்தமர்வுகளை மின் ஒளியூட்டல் வசதியூடாக விளக்கமளித்தார்.

இதன்போது செயலாளர் இந்தத் திட்டத்தை உடன் நடத்த ஏனைய விளக்கக் கூட்டங்களை தொடர்ந்து நடத்துமாறும், குறுகிய காலத்தில் இந்தத் திட்டத்தை நடத்த சபை அலுவலர்கள், ஊழியர்களின் முழு ஒத்துழைப்பு பெற்றுத்தரப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்தத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க வேள்ட் விசன் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் உதவிபெறப்படும் என வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.குணவதி தெரிவித்தார். (வ-50)

# சிவாஜிலிங்கத்தின் கோரிக்கைக்கு மீனவர் பிரதிநிதிகள் கண்டனம்

உள்ளூர் இழுவைப் படகைத் தடை செய்தாலும் குடாப் பரப்பில் தொழில் புரியும் இழுவைப் படகுகளுக்குச் சிறிது கால அவகாசம் வழங்குங்கள் என வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியாக கலந்துகொண்ட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடற்றொழில் அமைச்சரிடம் கோரியமையை கடுமையாகக் கண்டித்தனர் வடக்கு மீனவ சமாசப் பிரநிதிகள் .

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற நடுவண் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரசிங்கவுடனான கலந்துரையாடலின் போதே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட மீனவ அமைப்புக்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்திய இழுவைப் படகினால் எமது பகுதியில் பெரியளவில் அழிவுகள் இடம்பெறுவதோடு, உள்ளூர் இழுவைப்படகினாலும் இழப்புக்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டினர். அத்துடன் இந்திய இழுவைப் படகை முற்றாகத் தடுப்பதற்கு இலங்கையில் இழுவைப்படகின் தொழிலை முற்றாகத் தடை செய்யவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கடற்றொழில் அமைச்சர், இதேபோன்ற கோரிக்கை அனைத்துப் பிரதேசத்திலும் பலமாக எழுவதனால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதியுடன் இழுவைப் படகைத் தடைசெய்வதாகத் தெரிவித்தார்.

இவற்றைச் செவிமடுத்திருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூட்டம் நிறைவுறும்போது, இழுவைப் படகைத் தடைசெய்தாலும் குடாப்பரப்பு மீனவர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறு கோரிக்கை விடுத்தமையை அடுத்து கூட்டத்தில் கலந்து கொண்ட மீனவ அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, நேரடியாகவே பெயர்கூறி தமது அதிருப்தியையும் வெளியிட்டு வாக்குக்காக அரசியல் புரியாதீர்கள் என உரத்துக் குரல் எழுப்பியமையால் இந்த விடயத்திற்குப் பதிலளிக்காது அமைச்சர் கூட்டத்தை முடித்துக் கொண்டார். (வ-10)

# திருட்டு மின்சாரம் பெற்றவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 22

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவர் நேற்றிரவு சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பிலிருந்து வருகை தந்த மின்சார சபையின் உயர் அதிகாரிகளும், சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-107)



காரைநகர் கோட்டப் பாடசாலை மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ற்ரன் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை எழுதியபின் மகிழ்ச்சியுடன் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியேறியபோது (வ-250)

# 4 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா மன்னாரில் சிக்கியது



மன்னார், ஓக. 22

4 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா போதைப் பொதிகளை நேற்று மீட்டதாக மன்னார் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்தது. அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் பிரதான வீதி, சுவாமித் தோட்டம் பகுதியில் வைத்து இவை மீட்கப்பட்டன.

கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, அங்கு சென்ற பொலிஸ் குழுவினர் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் தலைமன்னார் சுவாமித் தோட்டம் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை மறித்துச் சோதனையிட்டபோது, அவர்களிடம் 2 பொதிகளைக்கொண்ட 4 கிலோ 50 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அதனைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உதயகுமாரசிங்கம் ஹெசிகன் தெரிவித்தார். (வ-4,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீனவர் பிரச்சினையை தீர்ப்பதற்கு என்ன செய்தீர்கள்?

## மீன்பிடித்துறை அமைச்சரிடம் கேட்டார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா

யாழ்ப்பாணம், ஓக. 22

போருக்கு ஒரு முடிவு கட்டியாகி விட்டது. சிறந்த வளம் கொண்ட வடக்குக் கடல் வளத்தின் கடற்றொழிலாளர் பிரச்சினை மட்டும் அவ்வாறே தொடர்கின்றது. ஆனால் அமைச்சர்கள் யாழ். வந்தோம் சீநோர் பாத்தோம் காரைநகர் சென்றோம் என ஊடக அறிக்கை விடுகின்றனர். இவ்வாறு மீன்பிடித்துறை அமைச்சர் முன்னிலையில் கடிந்து கொண்டார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் .

வடக்கின் மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பில் நேரில் ஆராயும் நோக்கில் இரண்டு நாள் பயணமாக கடற்றொழில் அமைச்சர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார். கடற்றொழில் அமைச்சர் தலைமையில் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் மீனவர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய றோலர்கள் இலங்கைக் கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம்வரையில் வருகின்றனர். தென்பகுதி மீனவர்கள் முல்லைத்தீவு முதல் பருத்தித்துறை வரைக்கும் வருகின்றனர். வடபகுதிக் கடல்வளங்கள் இவ்வாறே கொள்ளையிடப்படுகின்றன.

இவற்றிற்கும் அப்பால் என்ன செய்தோம் எனச் சிந்திக்க வேண்டும். இந்த அரசால் கூட மீனவர்களிற்கு எந்த வரப்பிரசாதமும் வழங்கப்படவில்லை. கடந்த அரசில் மாலையைப் போட்டு வரப் பிரசாதங்களைப் பெற்றவர்களே, இந்த அரசிலும் மாலையை போட்டு வரப்பிரசாதங்களைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றனர். உண்மையில் இவ்வாறான கூட்டங்களைச் சுண்டிக்குளம், தாளையடி போன்ற பிரதேசங்களில் நடத்தியிருக்கவேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதியில் வாழும் மீனவர் படும் பாடு புரிந்திருக்கும். இனியாவது நெடுந்தீவு, தொண்டமானாறுப் பகுதிகளிற்கு அமைச்சர் செல்ல வேண்டும். தெற்கில் கிராமம் கிராமமாகச் செல்லும் அமைச்சர்கள் இங்கு மட்டும் நகருடன் திரும்புகின்றனர்.

பூநகரி மற்றும் சாவல்கட்டுப் பகுதிகளில் உள்ள மீனவர்களை ஆயுதக் குழுவின் அனுசரணை அதிகாரிகள் மோத விடுகின்றனர். இவர்களின் ஒற்றுமையை சீர் குலைக்க முயல்கின்றனர். இது மட்டுமன்றி குடாநாட்டிலும் கிளிநொச்சியிலும் சில மீனவர்கள் கடற்படை மற்றும் பொலிஸாரின் செல்வாக்கைப் பயன்படுத்துகின்றனர். இதற்கும் அப்பால் சமாசத் தலைவர்கள் இனவாதத்தைத் தூண்டுகின்றனர். இவர்கள் கடந்த அரசில் நேரடியாகவே தேர்தலில் போட்டியிட்டவர்கள்–என்றார்.

(வ-4,101)

# சங்கிலி அறுக்கும் இருவர் பொலிஸாரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக. 22

புன்னாலைக்கட்டுவனில் சங்கிலியைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 2 பேரை நேற்றுக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டதோடு, விசாரணை மூலமாக, மற்றையவர் பெண் ஒருவருடன் யாழ்.நகர திரையரங்கில் படம் பார்த்துவிட்டு கொழும்புக்குத் தப்பிச் செல்லவிருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண் அவரின் இரகசியக் காதலி என்று கூறப்படுவதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதி மட்டுமன்றி ஏனைய பொலிஸ் பிரிவுகளிலும் அண்மைக் காலமாக வீதியால் செல்லும் பெண்களின் நகைகள் அறுத்தெடுக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இறுதியாக புன்னாலைக்கட்டுவனில் வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. அது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன் போது சுன்னாகம் கந்தரோடை விளக்கடிப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் மருதனார்மடம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 2 பவுண் நிறையுடைய சங்கிலியையும் அவரிடமிருந்து மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் இரண்டாவது சந்தேக நபர் தொடர்பில் தகவல் கிடைக்கபெற்றது. அவரையே திரையரங்கிலிருந்து புறப்படும்போது பெண்ணுடன் கைது செய்யப்பட்டார். அவர் ஏற்கனவே திருமணமானவர் என்றும் பொலிஸார் கூறினர்.

அந்தப் பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு, அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இரு சந்தேக நபர்களும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-4,107)

# ‘சூழலியல் விவசாயத்தை நோக்கி’ கண்காட்சி இன்று நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 22

‘சூழலியல் விவசாயத்தை நோக்கி’ என்னும் தொனிப்பொருளிலான கண்காட்சி இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு, நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகிறது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வடக்கில் தற்போது முன்னெடுக்கப் பட்டுவரும் விவசாயம் அதிக அளவிற்கு செயற்கை உரங்களையும் செயற்கைப் பீடைக் கொல்லிகளையும் பயன்படுத்தும் செறிவு வேளாண்மை ஆகும். இந்த இரசாயனங்கள் உணவின் மூலம் உடலை அடைந்து கேடுகளை விளைவிப்பதோடு, நிலத்தடி நீரையும் மாசுபடுத்தி வருகிறது. இவற்றைத் தடுப்பதற்கு நஞ்சுகளைப் பயன்படுத்தாத உணவு உற்பத்தி முறையை நோக்கி நாம் மீளவும் நகர வேண்டி உள்ளது.

இது தொடர்பாகப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி விவசாய இரசாயனங்களுக்கு மாற்றீடாக சேதனப் பசளைகள் மற்றும் இயற்கை முறையிலான பீடைக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே ‘சூழலியல் விவசாயத்தை நோக்கி’ என்னும் தொனிப்பொருளில் வடக்கு விவசாய அமைச்சு ஒவ்வொரு வருடமும் கண்காட்சியை நடத்திவருகிறது.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் காட்சிக் கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நடுகைப் பொருள்கள், சுதேச உணவுப்பொருள்கள் மற்றும் இயற்கைப் பழரசமென் பானங் கள் ஆகியவற்றின் விற்பனை மையங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கண்காட்சியில் பார் வையாளர்களிடையே விவசாயம் தொடர்பான வினாக்கள் கேட்கப்பட்டு சரியாக விடையளிப்போருக்குப் பயன்தரும் மரக் கன்றுகளும் தினமும் பரிசாக வழங்கப்பட உள்ளன.

இன்று ஆரம்பமாகும் கண்காட்சி எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தினமும் பி.ப. 2 மணியில் இருந்து இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது. சிறப்பு திருவிழா நாள்களான தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவனத் திருவிழா நாள்களில் காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணிவரையும் நடைபெறும் – என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-5)



# அமைச்சர் ரிசாத் பயணித்த வானூர்தி மன்னாரில் இடம்மாறித் தரையிறக்கம்

## விமானியின் கவனயீனமே காரணமெனத் தெரிவிப்பு

மன்னார், ஓக. 22

மன்னாரில் முஸ்லிம்களுக்கு என நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்விற்கு வருகைதந்த அமைச்சர் ரிசாத் பதியூதீன் உள்ளிட்ட விருந்தினர்கள் பயணித்த உலங்கு வானூர்தி விமானியின் கவனயீனம் காரணமாக இடம் மாறித்தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலங்கு வானூர்தி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் தரையிறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் உலங்கு வானூர்தி மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் இடம்மாறித் தரை இறக்கப்பட்டது. அதனால் அங்கு பாதுகாப்பை மேற்கொள்ள பொலிஸார் விரைந்தனர். குறித்த உலங்கு வானூர்தியில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் அரபு நாட்டவர்கள் பயணித்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு கிராமத்தில் சவுதி நாட்டு தனவந்தர்களின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட 50 வீடுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இதன் போது குறித்த வீடுகளை அமைப்பதற்கு நிதி வழங்கிய சவுதி நாட்டின் தனவந்தர்கள் கலந்து கொண்டு 50 வீடுகளையும் திறந்து வைத்தனர்.

(வ-4,56)

# போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பதவி விலக அவகாசம் மீள நீடிப்பு

கொழும்பு, ஓக. 22

சுய விருப்பின் அடிப்படையில் சேவையிலிருந்து விலகுவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம், சேவை அடிப்படையில் பதவி விலகுவதற்கு எதிர்வரும் 26ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் 2 ஆயிரத்து 900 பேர் மாத்திரமே தங்களின் பதவி விலகல் கடிதங்களை முன்வைத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமல் சிறிவர்தன குறிப்பிட்டார்.

சேவை அடிப்படையில், சுய விருப்பின் பேரில் பதவி விலக விருந்த 8 ஆயிரம் பேருக்கு ஓய்வு வழங்க அரசு தீர்மானித்தது.

தற்போது கிடைத்துள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில், அவர்களுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் இழப்பீட்டைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாக இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(வ-5)

Galaxy Star
வெற்றி வாரம் 085
திகதி 21.08.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 18 26 27 52
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 37,36,260/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 21.08.2016
வெற்றி வாரம் 2020
ஊதா
மகரம்
வெற்றி இலக்கங்கள்
14 39 44 46
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 48,28,940 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கான திரிபோசா மாவின் பாவனையை அதிகரிக்க நடவடிக்கை

## மேலதிகமாக 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோசா மா பாவனையை வருட இறுதிக்குள் 100 சதவீதமாக அதிகரிப்பதற்கு இலங்கை திரிபோசா சங்கம் தீர்மானித்துள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்த தாவது:

குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோசாவின் பாவனையை அதிகரிக்க 750 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. குழந்தைகளிடத்தில் திரிபோசா பாவனை கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்திருந்தமையே நாடு முழுவதும் பல குழந்தைகளின் வளர்ச்சி உள்ளிட்ட சிறு பராய நோய்களுக்கு காரணமாக அமைந்தது என்று சுகாதார அமைச்சின் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. எனவே குழந்தைகளுக்கான அறிவு மற்றும் குழந்தைகளின் வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கும் நோக்குடனேயே இந்தத் திட்டம் இலங்கை திரிபோசா சங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த காலங்களில் குழந்தைகளுக்கு 250 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் 17 இலட்சம் திரிபோசா பைக்கெட்டுக்கள் நாடு முழுவதும் மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டிருந்தன. மேலதிகமாக 750 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் 35 இலட்சம் திரிபோசா பைக்கெட்டுக்கள் இந்த வருட இறுதிக்குள் வழங்கப்பட உள்ளன - என்றார். (வ-5)

## பிரஜைகள் குழுவுக்கான கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஓக.22

யாழ்.மாவட்ட பிரஜைகள் குழுவொன்றை அமைப்பதற்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போதைய மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு சேவையாற்ற பிரஜைகள் குழு அவசியமானது என்பதை உணர்ந்து மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பிரஜைகள் குழு உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் கடந்த வாரம் யாழ். மாவட்ட சர்வோதய காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தற்காலிகத் தலைவராக ம.கிஷோர் அன்ரன் தெரிசெய்யப்பட்டு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

யாழ். மாவட்டம் சார்ந்த புத்தி ஜீவிகள், மதத்தலைவர்கள், சமூக நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-135)

## போயா தினத்தில் சாராயம் விற்றவர் சிக்கினார்

தென்மராட்சி, ஓக. 22

போயா தினத்தன்று சிவில் உடையில் சென்ற மதுவரி நிலைய அலுவலருக்கு வீட்டில் வைத்து சாராயம் விற்பனை செய்தவர் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் கைது செய்யப்பட்டார். விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் கைதடி மத்தி குமரநகரில் நடந்துள்ளது.

கைதடியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலையடுத்து, அங்கு சிவில் உடையில் சென்ற மதுவரி நிலைய அலுவலர், குறித்த வீட்டில் விசாரித்துள்ளார். அவருக்குச் சாராயம் விற்பனை செய்தபோது மறைந்திருந்த மதுவரி நிலைய அலுவலர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்ததுடன் அங்கிருந்த சாராயப் போத்தல்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற-9)


### கேள்விப்பத்திரம் கோரல்

யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கியின் சமாசம்
கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல்,
நிலம் குத்தகைக்கு வழங்குதல்

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள 09 அரை நிரந்தர கட்டடக் கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக்கடைத்தொகுதிகளுக்கு அருகிலுள்ள நிலத்துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு கடைத்தொகுதிகளைப் பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "கடைத்தொகுதிக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 05.09.2016 ஆம் திகதிக்கு முன் **தலைவர், யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர்சபையின் முடிவே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**
**யாழ்ப்பாணம்.**
22.08.2016

(சி.25007)"(13.18)

### கருகம்பனை நாச்சிமார் கோயில் பொதுக்கூட்டம்

**இராஜ ராஜேஸ்வரி (நாக இராஜேஸ்வரி, நாச்சிமார்) அம்பாள் அடியார்களே!**

ஆயைத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்க இருப்பதனால் பழைய முக்கிய ஆவணங்கள், பழைய உறுப்பினர்கள் இல்லாது இருப்பதனால் பின்வரும் விடயங்களுக்காக 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றிலில் பொதுக்கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளோம்.

கட்டட உபயகாரர், திருவிழா உபயகாரர் மற்றும் காணி நன்கொடை வழங்கியவர்கள் பற்றிய தகவல்கள் ஆயைத்தின் பெயர் தொடர்பான ஆலோசனைகள் போன்ற விடயங்களுக்காக அம்பாள் அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**கருகம்பனை, கீரிமலை** — **நாக இராஜேஸ்வரி அம்பாள் திருப்பணிச் சபையினர்**


# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு

முல்லைத்தீவு, ஓக.22

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் சில கிராமங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள முத்துவிநாயகபுரம், கூழாமுறிப்பு ஆகிய கிராமங்களை அண்டிய பகுதிகளிலேயே பல கிணறுகளில் நீர் வற்றியுள்ளது. அன்றாட பாவனைக்குக் கூட தண்ணீர் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. தற்போது கடும் வெப்பமான காலநிலை காணப்படுவதால் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதென அந்தப் பிரதேச மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் குறித்த கிராமங்களில் கோடை காலங்களில் கடந்த காலங்களிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதேபோன்று இந்த ஆண்டும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

தண்ணீர் தட்டுப்பாடு குறித்து இதுவரையில் எவரும் எமக்கு எந்தவிதமான முறைப்பாடோ அல்லது எழுத்துமூலமான தகவல்களோ வழங்கவில்லை. முறைப்பாடு கிடைப்பதில் சந்தர்ப்பத்தில் உடன் நேரில் பார்வையிடுவதோடு நீர்விநியோகம் மேற்கொள்வதற்குரிய ஆயத்த நிலையிலேயே உள்ளோம் - என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.(ற-101)

## இளைஞனைக் கத்தியால் வெட்டியவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 22

சுன்னாகம் - கல்லாக்கட்டுவனில் இளைஞனைக் கத்தியால் வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கத்திக் குத்தில் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்தவர் என்றும், குத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கத்தி மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். தனிப்பட்ட பகையே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. (ற-107)


### தேவை

கோண்டாவிலில் இயங்கும் ஹாட்வெயார் கடை ஒன்றிற்கு வேலை தெரிந்த, மற்றும் பழகவிரும்புவோர் தேவை.

தொடர்பு.0772528957

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1985இல் பிறந்த கிரகபாவம் 42 உடைய Software Eng. மணமகனுக்கு தகுதியான மணமகள் தேவை.

021 221 6395, 077 559 4191

### வீடு வளவு விற்பனைக்கு உண்டு

மீசாலை வடக்கு,வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் உடன் குடியமரக் கூடிய நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு வீடு வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
நவம்- 077 6474639
தவம்- 077 5977210

### வேலையாள்கள் தேவை

கைதடிச் சந்தியிலுள்ள ஆரியபவன் சைவ உணவகத்துக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.

* தேநீர் தயாரிப்பவர் ( Tea Maker )
* உணவு பரிமாறுபவர் ( Supplier )

தகுதியானவர்கள் நேரடியாகவோ அல்லது [illegible] இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.


## தெய்வீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெறுகின்றன.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள 15 ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் 'இந்திரனுக்கு விநாயகர் அருளிய வாழ்வு' எனும் தலைப்பில் ஆசிரியர் நி.பாபுதரனின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும்.

நல்லூர்துர்க்காதேவி மணிமண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

நல்லை ஆதீனமண்டபத்தில்மொடேர்ண் பன்னாட்டு இந்து ஆகம கலை, கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை நடைபெறும். (ற-ரி)

## தாதியர் பட்டப்படிப்பை தனியார் மயமாக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 22

தாதியர் பட்டப்படிப்பை தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது. அதற்குத் தேவையான ஒப்பந்தம் அரசின் ஊடாக கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும், அதில் உள்ளடங்கியுள்ள அம்சங்கள் தொடர்பில தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச பல்கலைக்கழகத்தில் தாதியர் பட்டப்படிப்பு வழங்கப்படும் நிலையில், அதனைத் தனியார்மயப்படுத்துவதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியுடன் துர்நடத்தை; மாமன் கைது

யாழ்ப்பாணம், ஓக. 22
ஊகாவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியை துர்நடத்தைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் சிறுமியின் நெருங்கிய உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர் குறித்த சிறுமிக்கு மாமன் உறவு முறையானவர் என்றும், 50 வயதுடையவர் என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
குறித்த நபர் சிறுமியிடம் தொடுகை ரீதியான துர்நடத்தை புரிந்தார் என்றும், அதை அவதானித்த தாய் பலமுறை எச்சரித்தும் பயனளிக்காததால் பொலிஸில் முறையிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-107)

## ஆசன அமைப்பாளர் பதவியிலிருந்து பந்துல விலகவுள்ளார்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஹோமாகம ஆசன அமைப்பாளர் பதவியில் இருந்து விலகவுள்ளேன் என்று பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
மாத்தறை மாவட்ட ஆசன அமைப்பாளர் பதவியில் இருந்து விலகப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவும் அறிவித்துள்ளார். (ற-4)

# இந்திய சேவையாளரை இலங்கையில் ஊக்குவிப்பது எட்காவின் நோக்கமல்ல

## இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, ஓக. 22
எட்கா என்றழைக்கப்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்துகொள்ளப்படுமானால் இந்தியா தனது சேவை வழங்கும் நபர்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் என்று அச்சம் கொள்ளத்தேவையில்லை. தகவல் தொழில்நுட்பத் துறையிலும் கப்பல் கட்டும் தொழிலிலும் துறைசார் நிபுணர்களை அனுப்பும் நோக்கத்தை மட்டுமே இந்தியா கொண்டிருக்கிறது.
இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
இருநாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும்தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதற்கான அதிகாரபூர்வ பேச்சு ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது. இந்த வருட முடிவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இது தொடர்பாக இலங்கை வந்திருந்த இந்திய வர்த்தக அமைச்சின் இணைப்பு செயலாளர் பூப்பிந்தர்சிங் பல்லா தலைமையிலான நான்குபேர் கொண்ட உயர்மட்டக் குழுவினர் இரண்டு தடவைகள் கொழும்பில் பேச்சு நடத்தியிருந்தார்கள். இந்த ஒப்பந்தம் தொடர்பான முதற் கூட்டம் இது என்பதால் அதன் விரிவான முக்கிய விடயங்களை குறிப்பாக எந்தெந்த விடயங்களை உள்ளடக்க வேண்டும். எந்தெந்த அம்சங்களை தவிர்க்க வேண்டும் என்பது பற்றியே அவர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.
மாறிவரும் பொருளாதார நிலமைகளுக்கேற்பவும் ஏற்கனவே 2000ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்துவரும் இந்தியா, இலங்கை சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் மூலம் கிடைத்துள்ள அனுபவங்களின் வாயிலாகவும் ஏற்பட்டுள்ள தமது கவலைகள் மற்றும் தேவைகள் பற்றியும் இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர்.
இலங்கையின் போருக்குப் பின்னரான பொருளாதார அபிவிருத்தியில் தெரிவு செய்யப்பட்ட சில பிரிவுகளில் பங்குகொண்டு செயலாற்றுவதற்கான பொறிமுறையாக எட்காவை இந்தியா பார்க்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவின் உற்பத்தித்துறையின் இந்தியாவில் செய்யப்பட்டது என்ற பெயரில் பிரதமர் மோடியால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பைப் பயன்படுத்தி இந்திய விநியோக சங்கிலி அமைப்பில் பங்குகொள்வதற்கு அது விரும்புகின்றது.
எட்கா நடைமுறைக்கு வரும் போது இந்திய உற்பத்தியாளர்களால் இலங்கையில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து தங்கள் உற்பத்திகளை பாகிஸ்தான், சீனா மற்றும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும். மேற்படி நாடுகளுடன் இலங்கை ஏற்கனவே சுதந்திரவர்த்தகஉடன்படிக்கைகளை கொண்டிருக்கிறது அல்லது இனி செய்துகொள்ளும் உத்தேசத்தில் இருக்கிறது என்று இலங்கையின் மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் சரியாகப் பயன்படுத்தப்படுமானால்பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தக செலவினங்களை வெகுவாகக் குறைக்க முடியும்.
இந்திய சேவையாளர்களுக்கு தொழில் வழங்குவதற்காக இலங்கையைப் பயன்படுத்துவது அல்ல எட்காவின் நோக்கம் என்று வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் காலப்போக்கில் இந்தியா இந்தத்திட்டத்தின் மூலம் இந்திய சேவையாளர்களை இலங்கையில் கொண்டுவந்து குவித்துவிடும் என்பதாக இலங்கை தொழில்சார் துறையினர் மத்தியில் பீதியொன்று ஆழமாகப் பதிந்துள்ளது. இருந்தாலும் இந்திய தொழில்சார் துறையினருக்கு இலங்கை தன் வாயில் கதவைத் திறந்து விடப்போவதில்லையென்று இலங்கை அரசு உறுதியளித் துள்ளது. இந்தியாவும் கூட நிபுணர்களும், உயர் மட்ட பயிற்சியுமுள்ளவர்களும் தேவைப்படும் தொழில்களுக்கு மட்டுமே குறிப்பாக கப்பல் கட்டுதல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொழில்சார் நிபுணர்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
எதுவானாலும் இந்தியா இலங்கை மீது எதனையும் திணிக்கும் நோக்கம் கொண்டிருக்கவில்லை. இலங்கையின் தேவைகள் மற்றும் முக்கியத்துவமானவைகளை மட்டுமே இந்தியா கருத்திற்கொள்ளும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இரு தடவைகள் உறுதியளித்திருக்கின்றார்.
(ப)

# ஆணைக் குழுக்கள் மூலம் எதுவுமே தமிழர்களுக்கு நடக்கப் போவதில்லை

## கல்முனை நல்லிணக்கத்துக்கான மன்றத்தின் இணைப்பாளர் சுட்டிக்காட்டு

அம்பாறை, ஓக.22
அரசால் நியமிக்கப்பட்ட முக்கிய சில ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கே ஒன்றும் நடக்கவில்லை. இத்தகைய ஆணைக்குழுக்களின் முன் நாம் சென்று என்னதான் நடக்கப் போகிறது என்ற சலிப்பு பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு உள்ளது.
இவ்வாறு கல்முனையில் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற நல்லிணக்கப் பொறி முறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் வலய மட்ட அமர்வில் கல்முனை நல்லிணக்கத்துக்கான மன்றத்தின் இணைப்பாளர் எஸ்.எல்.அப்துல்அஸீஸ் கருத்துத் தெரிவித்தார்.
கல்முனை கிறிஸ்தவ இல்லமண்டபத்தில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு தமது அமைப்பின் சார்பில் பரிந்துரைகளைச் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
பரணகம ஆணைக்குழு போன்ற சில ஆணைக் குழுக்களின் முன் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெருநம்பிக்கையுடன் சாட்சியங்களை அளித்திருந்தனர்.
இத்தகைய ஆணைக்குழு பரிந்துரைகளின் பரவலான பொறிமுறை நடைமுறைப் படுத்தல் இடம்பெறாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவுமே நடக்க வில்லையே என்ற சலிப்பு பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.
இதனாலேயே இங்கு வருகை தந்து சாட்சியமளிக்க மக்கள் தயக்கம் காட்டுகின்றனர். மக்களின் நம்பிக்கையை வலுவூட்டும் செயற்பாடுகள் நடைபெற வேண்டும்.

**விழிப்பு வேண்டும்**

கடந்த கால கசப்பான சம்பவங்கள் தொடர்பில் ஞாபகார்த்த நிகழ்வுகள் இடம்பெறும்போது நல்லிணக்கம் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும்.
குறிப்பாக இத்தகைய ஞாபகார்த்த நிகழ்வுகள் மூலம் மக்களதுஉணர்வுகள் தூண்டப்பட்டு, இனக்குரோதம் வளரவோ, நல்லிணக்கம் சீர்குலையவோ இடமளிக்கப்படக்கூடாது.
இந்த வகையில் இத்தகைய ஞாபகார்த்த நிகழ்வுகளில் பங்குபற்றும் அரசியல்வாதிகள் நிலமைகள் உணர்ந்து, மக்கள் உணர்வுகளைத் தூண்டாத வகையில் உரைகளை ஆற்றுவதற்கு முன்வர வேண்டும்.

**பங்கம்**

சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச நிர்வாக உயரதிகாரிகள் கடமையில் தமிழ் தெரியாத பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படக் கூடாது.
அண்மித்த ஒரு காலப்பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் கல்முனைப் பிரதேச செயலகத்துக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.
இத்தகைய செயற்பாடுகள் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பாகவே அமையும்.
இதேபோல் அம்பாறை மாவட்ட செயலகத்துக்கு மிக நீண்ட காலமாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களே அரச செயலாளராக நியமனம் பெற்று வருகின்றனர்.
ஆனால் இன்று சேவை மூப்பும் தகுதியும் கொண்ட முஸ்லிம் ஒருவர் மேலதிக அரச செயலாளராகவே நியமிக்கப்பட்டு கடமையாற்றி வரும் நிலைமை உள்ளது. - என்றார்.
(ற-30)

# துணுக்காய் பிரதேச வயல்களில் கபில நிறத் தத்தியின் தாக்கம்

## விவசாய போதனாசிரியர்களின் ஆலோசனை பெறுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 22
முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேசத்தில் கபிலநிற தத்தியின் தாக்கம் பலவயல்நிலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. அது அறுவடையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். விவசாயிகள் விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பணிப்பாள பொ.அற்புதச்சந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
துணுக்காய் பிரதேசத்தில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் கபிலநிற தத்தியின் தாக்கம் அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளது.
இவ்வகை தத்திகள் நெற்பயிரின் அடித்தண்டிலிருந்து தாவரச்சாற்றை குற்றி உறிஞ்சுவதாலும், உறிஞ்சும்போது சில நச்சுத்தன்மையான பதார்த்தங்களை நெற்பயிர்களுக்குள் உட்செலுத்துவதாலும் நெற்பயிர் மஞ்சளாகி உலர்ந்து வயலில் ஆங்காங்கு எரிந்த நிலை போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும்.
விவசாயிகள் பயிரின் தண்டுப்பகுதியை அவதானித்தால் அங்கு அதிக எண்ணிக்கையிலான தத்திகளை அவதானிக்க முடியும். இந்தத் தத்திகள் கூட்டமாக இடம்பெயர்ந்து வயலில் பிறிதோர் இடத்தில் இதே போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும்.
பாதிக்கப்பட்ட வயலின் தோற்றம் சிறு சிறு இடங்களில் எரிந்தது போன்று காணப்படும். நீர் மட்டத்தில் வெள்ளை நிறச் செதில்கள் மிதக்கும். தண்டின் அடர்த்தியான பகுதியை பிரித்து அவதானிக்கும் போது அடியில் அநேக சிறிய தத்திகளைக் காணலாம். இளம் மஞ்சள் அல்லது கபில நிறமான பூச்சிகள் கைகளில் ஊர்வதை உணரலாம்.
உரிய முறையில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதவிடத்து விளைச்சலில் பெரும் வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிடும். மேற்கூறப்பட்ட அறிகுறிகள் வயல்களில் காணப்படுமாயின் அவசியம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அயலிலுள்ள விவசாயிகளை விழிப்படையச் செய்ய வேண்டும். விவசாய போதனாசிரியர்களைத் தொடர்பு கொண்டு உரிய தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.
(ற-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சிவகுரு அருளானந்தம்



தோற்றம் 30.05.1956 மறைவு 23.07.2016

கடந்த 23.07.2016 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (22.08.2016) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
(N 118) (12.17.18)
குடும்பத்தினர்.

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.07.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் மணியம் கேதீஸ்வரநாதன்

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் 24.08.2016 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
குடும்பத்தினர்.

20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மீனாம்பிகை நடராஜா

மலர்வு:- 01.04.1948 உதிர்வு:- 01.09.1996

திதி:- 22.08.2016

ஆறாத்துயரில் ஆண்டுகள் 20 ஆனாலும்
எம் விழிதனில் உங்கள் நினைவுகள் கண்ணீராய் வழிந்தோட
பாசக் கூட்டினில் நாம் வாழ்ந்தோம்
ஆனாலும் காலையில் பூத்து மாலையில்
வாடிடும் பூப்போல அம்மா! எங்களை விட்டுப் பிரிந்தீர்கள்
நிஜமாய்க் கண்ட உருவத்தை நிழற்படமாய் பார்க்கும்பொழுது
எம் நெஞ்சம் விம்முகிறது அம்மா! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எம்
உள்ளங்களில் வாழ்ந்திருப்பீர்கள் எங்கள் ஈர விழிகளுடன்

குடும்பத்தினர்
கணவர்:- சி.நடராஜா
பிள்ளைகள்:- உஷாநந்தினி - உதயன் (சுவிஸ்),
சாமினி ஜெனானன் (ஜேர்மனி), சாமினி - ஜெயந்தன்
உஷாபானு - அனுதரன் (லண்டன்),
நிஷாந்தினி - முருகானந்தவேல், அன்புப் பேரப்பிள்ளைகள்.
புலகயிரதவீதி அருகில், மல்லாகம்.
(11.18.)

# உரிமைகோரப்படாதசான்றுப்பொருள்களை பொறுப்பேற்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் யாழ்.பொலிஸாரால் சான்றுப் பொருள்கள் பாரப்படுத்தப்பட்டு உரிமை கோரப்படாதுள்ளவற்றை 6 மாத காலப் பகுதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சான்றுப் பொருள்களுக்கான உரிய ஆவணங்களை அலுவலக நேரத்தில் காண்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மன்றின் பதிவாளர் தெரிவித்தார்.

சான்றுப் பொருள்களாக 69902233, 69892887 (கறுப்பு நிறம்), 57163675, 69844708 (லுமாலா), B / 112060341 (AMAZON), 69580317 , A 1152 ஆகிய இலக்கங்களை உடைய 7 பெண்கள் சைக்கிள்களும் இலக்கமற்ற ஒரு பெண்கள் சைக்கிளும் 7150550 (கறுப்பு நிறம்), 69886250 ஆகிய இலக்கங்களையுடைய ஆண்கள் சைக்கிள்கள் இரண்டும் NPXC 0448 (சவாரி / திறப்பற்ற), NPMR.2782 (பசன் பிளஸ்), NPTC 8668, 500 2479 (சிவப்பு நிறம்), NPJP 6129 (பல்சர்), NPGY 9877, NPMO.9963 (கொண்டா) ஆகிய இலக்கங்களையுடைய 7 மோட்டார் சைக்கிள்களும் கறுப்பு மற்றும் நீலநிறங்களையுடைய 2 தலைக் கவசங்களும் U 19482 (லுமாலா), 5716524 (லுமாலா) ஆகிய இலக்கங்களை உடைய இரண்டு சைக்கிள்களும் NPAAA 7855 (கறுப்பு நிறம்) இலக்கமுடைய முச்சக்கர வண்டி ஒன்றும் பதிவு செய்யப்படாத ஓர் உழவு இயந்திரப் பெட்டி மற்றும் சங்கிலி என்பவற்றை உரிமையுடையவர்கள் உரிய ஆவணங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என மன்றின் பதிவாளர் அறிவித்தார்.

(ற)

ஈரவிழிகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
இராசரட்டினம் இராஜேந்திரா JP
(சுது மாமா)

தோற்றம் 27.03.1944 மறைவு 22.07.2016

கடந்த 22.07.2016 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

243, பலாலி வீதி,
கந்தர்மடம்.
(j 3969)(11.18)
குடும்பத்தினர்
சகோதர சகோதரிகள்.

# புதிய மலசலகூடம் பிரதேச சபையிடம் கையளிப்பு

கொடிகாமம் பஸ் நிலையத்தில் வேள்ட் விசன் லங்கா நிறுவனத்தால் 3 மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடம் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று வேள்ட் விசன் நிறுவன பிராந்திய இணைப்பாளர் சி.குகன் தெரிவித்தார்.

இந்தக் கட்டடம் விரைவில் கட்டணக் கழிப்பறையாக பொதுமக்களின் பாவனைக்கு விடப்படும் என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட பொது மலசலகூடம் உரியவாறு இல்லாதமை குறித்து பொது சுகாதார பரிசோதகரால் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து சாவகச்சேரி நீதிமன்றால் சபையின் தலைவரும் செயலாளரும் எச்சரிக்கை செய்யப்பட்டனர். மலசலகூடம் உரிய பராமரிப்பின்றி மக்கள் பயன்படுத்த முடியாதுள்ளது என்றும், பஸ் நிலையத்துக்கு வரும் பொது மக்கள் அங்கு நிற்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை அடுத்து அந்த மலசல கூடம் உடைக்கப்பட்டு வேள்ட் விசன் நிறுவனத்தால் புதிதாக நவீன வடிவில் நிர்மாணிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 19 . 08 . 1947



மறைவு 23 . 07 . 2016

தில்லையம்பலம் சுதந்திரபாலன்
(ஓய்வுநிலை பிரதம கணக்காளர்)

தில்லையம்பலம் பெற்ற செல்வமாய் தேனென தித்திக்கும் இன் சுவையாய்
வள்ளலாய் வாரியாய் வாழ்ந்த எம் தலைமகனே!
வணங்கித் துதித்து நிற்கின்றோம் மனிதனுக்கு மானத்திலும்
நேர்மையே பெரிதெனப் புகட்டி
நிமிர்ந்து நின்ற பெரியவரே; சிறப்பான வாழ்வுக்கு முடிவுகண்டோ - உடல்
கூட்டைத்திறந்து பறந்து ஓடினீர்கள் சிந்தையில் நிறைந்து நின்றாலும்
கண்களுக்குத் தெரியாத உருவாகி - கணமும்
மனக்கண்ணீர் உதிரும் வாழ்வாகி - உங்களை எண்ணி ஏங்கித் தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். இன்று (22.08.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
ஆடியபாத வீதி
(குளம்பியந்த வைத்தியசாலை முன்பாக), கொக்குவில் மேற்கு.
021 222 2314
(11.18.)

# கௌரவிப்பு

வரணி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பக்க மதிலை தனது சொந்த நிதியில் இருந்து கட்டிக் கொடுத்த குலசேகரம் பிள்ளை பாலச்சந்திரன் பிரதேச வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினரால் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்..

பிரதேச வைத்திய சாலை பொறுப்பதிகாரியும் நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவருமான மருத்துவர் வீ.கமலநாதன் தலைமையில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

(ற-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளங்களை அண்மித்த கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆரம்பம்

## மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரசிங்க கிளிநொச்சியில் நேற்று ஆரம்பித்தார்





கிளிநொச்சி, ஓக. 22
குளங்களை அண்மித்த கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப நிகழ்வு இரணைமடு, சாந்தபுரம் கிராமத்தில் நடந்தது. மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர திட்டத்தை ஆரம்பித்தார்.

அங்கு அமைச்சர் தெரிவித்ததாவது:
குளங்களை அண்மித்த கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பெரும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீன்பிடி சார்ந்த துறைகளை மேம்படுத்த முடியும். இந்தத் திட்டம் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் முன்னெடுக்கப்படும். 2018ஆம் ஆண்டு முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அனைத்துத் திட்டங்களும் அனைத்து மாவட்டங்களிலும் இன, மத பேதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிகழ்சித் திட்டம் இன்று (நேற்று) வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் இந்திய மீனவர்களுடன் பேச்சு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். அடுத்த மாதமளவில் இந்திய ஆளும் கட்சிகளுடன் முக்கிய கலந்துரையாடல் நடத்தவுள்ளோம். இந்த ஆண்டு எமது நாட்டிலிருந்து உலக சந்தைகளுக்கு அதிக மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன - என்றார்.

நிகழ்வில் இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு அமைச்சர் மீன்பிடி வலைகளை வழங்கினார்.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர், துறைசார் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-21,ரி3)

# இரணைமடு குள சீரமைப்பால் 300 மீனவர்கள் நிலை நிர்க்கதி

கிளிநொச்சி, ஓக.22
இரணைமடு குள சீரமைப்பால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட 300 மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

நேற்று கிளிநொச்சிக்குச் சென்ற மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் அவர்கள் இதுகுறித்து முறையிட்டனர்.

இரணைமடுக் குளத்தின் கீழான சாந்தமடு கிராமத்தில் மீன்பிடியை மட்டும் பிரதான தொழிலாகச் செய்து வருபவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்ததாவது:
2017ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவுக்குக் கொண்டு வரும் வகையில் கிளிநொச்சி இரணைமடுக்குளம் 5 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இரணைமடுக் குளத்தை முழுமையாக நம்பி தங்களது வாழ்க்கையை கொண்டுசென்ற சுமார் 300 பேர் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். குள அபிவிருத்தித் திட்டத்தால் முழுமையாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு எந்த வித நிவாரண ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

> “சுமார் 35 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் நன்னீர் கருவாடு உற்பத்தியில் ஈடுப்பட்டன. சுமார் 42 வியாபாரிகளும் இரணைமடு குளத்தை நம்பியே வாழ்க்கை நடத்தியவர்கள். இவர்கள் அனைவரினதும் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.”

இரணைமடுக் குளத்தை நம்பி கடந்த 35 வருடங்களாக நன்னீர் மீன்பிடியில் பல நூற்றுக்காணக்கான குடும்பங்கள் ஈடுபடுகின்றன. அவர்களால் வேறு தொழிலை மேற்கொள்ள முடியாது. நன்னீர் மீன்பிடியையும் அதனோடு இணைந்த தொழில்களையும் மேற்கொண்டு வந்தவர்கள்.

இரணைமடு மேற்குக் கரையில் சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 132 நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களும், குளத்தின் கிழக்குக் கரையில் சுமார் 85 தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் குளத்தை நம்பியே தங்களுடைய வாழ்க்கையைக் கொண்டு நடத்தியவர்கள். சுமார் 35 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் நன்னீர் கருவாடு உற்பத்தியில் ஈடுப்பட்டன. சுமார் 42 வியாபாரிகளும் இரணைமடு குளத்தை நம்பியே வாழ்க்கை நடத்தியவர்கள். இவர்கள் அனைவரினதும் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குளத்தில் நீர் இல்லை - என்றனர்.

மீனவர்களுடைய வாழ்வாதாரம் தொடர்பாக உடனடியாக உத்தரவாதம் அளிக்கும் நிலமை இல்லை. இரணைமடுவில் வசிக்கின்ற மீனவ குடும்பங்களில் விவசாய வேலைகள் செய்பவர்களும் உள்ளார்கள். மீன்பிடியை மட்டும் பிரதான தொழிலாக செய்துவருபவர்களின் விவரங்களைத் திரட்டி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம் - என்று அமைச்சர் அமரவீர தெரிவித்தார். (ற-2)



சூழல் மாசடைவதில் இருந்து சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்குடன் பரந்தன் - பூநகரி வீதியில் நடப்பட்ட பெறுமதி வாய்ந்த மரக்கன்றுகள் வயல்நிலங்களுக்கு வைத்த தீயால் அழிவடைந்துள்ளன. உரிய தரப்பினர் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-ரி7)

# ஓட்டோவில் வந்து வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஓக.22
ஓட்டோவில் வந்த இருவர் வாளால் வெட்டியதில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நேற்று நடந்தது. கிளிநொச்சி, கச்சேரியடியைச் சேர்ந்த செல்வரத்தினம் சுதாகரன் (வயது-34) என்பவரே படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 6 மணியளவில் பால் வாங்குவதற்குத் தனது வீட்டுக்கு முன்பாக நின்றபோதே வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்தவரின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் கூடிய போதும் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கரைதுறைப்பற்று சந்தைகளில் விளை பொருள்களுக்குக் கழிவு

## நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.22
முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தைகளில் மரக்கறிகளுக்கு கழிவு பெறப்படுகின்றது. விவசாயிகள் உரிய இலாபம் பெற முடியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
மழையிலும், வெயிலிலும் பாடுபட்டு விவசாயம் செய்கின்றோம். கடந்த காலங்களில் இயற்கை இடர்களால் விவசாயம் அழிந்து பெரும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருந்தன. அவற்றையும் மீறி எமது வாழ்வாதாரத்துக்காக விவசாயம் செய்து வருகின்றோம். விளை பொருள்களைச் சந்தை வியாபாரிகளுக்குக் கொடுத்தே வாழ்க்கையை நகர்த்துகின்றோம். சந்தைகளிலும் இப்போது எமது இலாபம் சுரண்டப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட தண்ணீர் ஊற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு போன்ற இடங்களில் உள்ள சந்தைகளில் எமது விளைபொருள்களைக் கொண்டு செல்லும்போது 10 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு பெறப்படுகின்றது. ஒரு கிலோ வெங்காயம் 150 ரூபாவாகும். தினமும் ஒரு கிலோ கழிக்கப்படும்போது எமக்குக் கிடைக்கும் இலாபம் இல்லாமலேயே போய்விடுகின்றது. நாம் கொண்டு செல்லும் அனைத்து விளை பொருள்களுக்கும் கழிவு பெறப்படுகின்றது.
விவசாய விளை பொருள்களுக்குக் கழிவு பெறக் கூடாது என்று வடக்கு மாகாண சபை அறிவித்திருந்தது. எனினும் அது பின்பற்றப்படவில்லை.
நெல் கொள்வனவிலும் இந்த நிலமை காணப்படுகின்றது. 70 கிலோ கொண்ட நெல் மூடைக்கு - காய்ந்த நெல்லாக இருந்தால் 72 கிலோ நெல்லும், காயாத நெல்லாக இருந்தால் 75 கிலோவும் அறவிடுகின்றனர். நாம் 35 ரூபாவுக்கு வாங்கும் உரப் பைக்குரிய பணமும் தரப்படுவதில்லை. 50 மூடை நெல் கொடுத்தால் எமக்கு 100 கிலோ நெல் இல்லை. உரப் பைக்கான ஆயிரத்து 750 ரூபாவும் இல்லை.
விவசாயிகளின் இக்கட்டான நிலையைப் புரிந்து கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர்.
தரையின் கீழ் விளையும் பொருள்களுக்கும், வாழைக் குலைத் தண்டுக்குமே கழிவு கழிக்கப்படுகின்றது. ஏனைய உற்பத்திப் பொருள்களுக்கு கழிவு பெறக் கூடாது என்று வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வேன்- என்று கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் சுபேசன் தெரிவித்தார்.
(ற-21,ரி7,500)

## தீயில் எரிந்து குடும்பப் பெண் உயிரிழப்பு

தென்மராட்சி, ஓக.22
எரி காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழந்தார். அவரது கணவன் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மதன்ராஜ் விஜயலட்சுமி (வயது-39) என்பவரே உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நாவற்குழி முந்நூறு வீட்டுத் திட்டத்தில் நடந்துள்ளது. இரவு 7 மணியளவில் வீட்டுக்குள் மனைவி தீப்பற்றி எரிவதைக் கண்ட கணவன் தீயை அணைக்க முயன்றார். அதில் கணவர் காயமடைந்தார். எரி காயங்களுக்குள்ளான நிலையில் மனைவியும், கணவரும் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மனைவி சிகிச்சை பயனின்றி நள்ளிரவு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசேட குழுவை நியமித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-[illegible])

## நல்லைக் குமரன் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் ஓக.22
நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் - 24 வெளியீட்டு விழா நாளைமறுதினம் முற்பகல் 9 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். மாநகர சபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான பொ.வாகீசன் தலைமையில் நிகழ்வு நடைபெறும். தலைமை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஏ. நடராஜனும் கலந்து கொள்வர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீட பீடாதிபதி சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யசுவாமிகள், துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (ற)

# இது எங்கள் நாடு என்ற எண்ணம் தமிழர்களிடம் இருக்க வேண்டும்

## வடக்கு பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக.22
இந்த நாடு எங்களுடையது. அரசு எங்களுடையது என்ற உணர்வு எமது மக்களிடம் உருவாக வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மத்திய அமைச்சர் இங்கு வந்து உதவிப் பொருள்களைத் தர வேண்டிய அவசியம் இல்லை.
இவ்வாறு வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார்.
கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர கலந்து கொண்டார். அங்கு உரையாற்றும்போது வடக்கு பிரதி அவைத் தலைவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
இது எங்களுடைய நாடு. நான் இங்கு முதலமைச்சரின் பிரதிநிதியாக வந்திருக்கின்றேன். அவருக்குச் சுகவீனம் காரணமாக கொழும்பு சென்றிருக்கின்றார், எனக்கு கடிதம் மூலம் தன்னுடைய பிரதிநிதியாக சென்று கலந்துகொள்ளுமாறு தெரிவித்தார்.
இது எங்களுடைய நாடு என்ற உணர்வு அனைவருக்கும் இருக்க வேண்டும். எங்களுடைய நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கிறது. ஆனால் அவை படிப்படியாகத் தீர்க்கப்படும். உருவாக்கப்படுகின்ற அரசியல் யாப்பில் எங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வாய்ப்பிருக்கிறது.

> “இது எங்களுடைய நாடு, எங்களுடைய அரசு என்ற உணர்வு எல்லோரிடமும் இருக்க வேண்டும். அது சிங்கள மக்களடமும் இருக்க வேண்டும், தமிழ் மக்களிடமும் இருக்க வேண்டும்.”

இது எங்களுடைய நாடு, எங்களுடைய அரசு என்ற உணர்வு எல்லோரிடமும் இருக்க வேண்டும். அது சிங்கள மக்களிடமும் இருக்க வேண்டும், தமிழ் மக்களிடமும் இருக்க வேண்டும். நாங்கள் இந்த நாட்டுக்குள் அடங்காது விட்டால் இப்படி அவர்கள் பொருள்களைக் கொண்டு வந்து தரவேண்டிய தேவையில்லை.
வேலைப்பளுவுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் அமைச்சர் மகிந்த அமரவீரவும், அவருடைய அமைச்சின் செயலாளரும் இங்கு வந்து இந்தப் பிரதேசத்தில் குளத்தை அண்டிய கிராமத்தின் அபிவிருத்தி எனும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தமைக்காக முதலமைச்சர் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.– என்றார். (ற-21)

## உரிமை கோராத வாகனங்கள் ஏல விற்பனை

சாவகச்சேரி, ஓக.22
சாவகச்சேரி நீதிமன்றில் முடிவடைந்த வழக்குகளில் சான்றுப் பொருள்களாக உள்ள மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விடப்படவுள்ளன. உரியவர்கள் அவற்றை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பதிவாளர் அறிவித்தார்.
ஏல விற்பனையில் விடப்படவுள்ள சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிளின் இலக்கங்கள் வருமாறு–
5009941, NPME5654, NPNB4885, 5002359, NPGZ4838, 2309525, NPHM7304, NPGQ9516, 1335655, NPHG0540, NPWG1733, NPXD1602, 1517703, NPJS6772, NPHZ0226, NPTH0968, NPMC9409.
இரு வாரங்களுக்குள் எவரும் உரிமை கோரப்படாதவிடத்து வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## நெற் செய்கை காணி பதிவு ஆரம்பம்

அளவெட்டி, ஓக.22
அளவெட்டி தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் தமது நெற்காணிகளை எதிர்வரும் 25ஆம் திகதி அளவெட்டி தெற்கு ஜே 219 கிராம அலுவலர் அலுவலகத்திலும் 26ஆம் திகதி கலைவாணி சனசமூக நிலையத்திலும் 29ஆம் திகதி அலுக்கை ஆசையப்பர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள மகிழ்வகத்திலும் காலை 9 மணிக்கு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பதிவு செய்வதற்குக் காணி உறுதி மற்றும் தேசிய அடையாள அட்டை, குத்தகை செய்கையாளராயின் குத்தகைப்பத்திரமும் கொண்டுவர வேண்டும் என கமக்கார அமைப்பின் சம்மேளனத்தலைவர் தெரிவித்தார். (ற-36)



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கோவில் வீதியில் உள்ள கம்பன் கோட்ட மண்டபத்தில் புத்தகத் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் 3ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் மாலை 3 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் நடத்தப்படும் புத்தகத் திருவிழாவில் மூத்த எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நூல்கள் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன. (ற-4)

## ஒரே சூலில் பிறந்த நான்கு குழந்தைகள் இறந்தன

கிளிநொச்சி, ஓக.22
கிளிநொச்சி உமையாள்புரத்தைச் சேர்ந்த தாயார் ஒருவர் நேற்று ஒரே சூலில் 4 குழந்தைகளைப் பிரசவித்தார். குழந்தைகள் சில நிமிடங்களில் இறந்தன என்று தெரிவிக்கப்பட்டது.
குறித்த தாய் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் பிரசவத்துக்காகச் சேர்க்கப்பட்டார். நேற்று அவருக்கு ஒரே சூலில் 4 குழந்தைகள் பிறந்தன.
நான்கு குழந்தைகளில் 2 ஆண் குழந்தைகளும் 2 பெண்பிள்ளைகளும் பிறந்தன என்றும் அவை சில நிமிடங்களில் இறந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு துரிதப்படுவது தமிழருக்குப் பலம்

## மாவை. சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம் ஓக. 22
வடக்கில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தற்போதைய ஆட்சியில் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றமை தமிழருக்குப் பலம்மிக்க ஒன்றாக அமைந்துள்ளது.
இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.
வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மக்களின் மீள்குடியமர்வை துரிதப்படுத்தும் வகையிலான நடமாடும் சேவைக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் நடைபெற்றது.
அதில் அவர் தெரிவித்ததாவது:-
எமது மக்களின் மீள்குடியமர்வு என்பது பலராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. அதற்கான சூழல் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. உங்களுக்கான தேவைகளை அரசின் ஊடாகவும், புலம் பெயர்ந்த இஸ்ஸாமிய அமைப்புகளுடன் தொடர்பு கொண்டும் நிறைவேற்றித் தருவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.
நாம் இன்று வரை தேசிய இனப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துவருகின்றோம். எமக்கான உரிமைகள் மத்திய அரசால் மழுங்கடிக்கப்பட்டு வருவது காலம் காலமாகத் தொடரும் அவலமாக இருக்கின்றது. எமது மண்ணின் உரிமைகளில் ஒன்றான மீள்குடியமர்வு என்பது எமக்கு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. எமக்கான தேவைகளைத் தற்போதைய சூழலை உரிய வகையில் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ளாவிடில் இதற்கான வாய்ப்புக்கள் பின்னர் இல்லாமல் போய்விடும்- என்றார்.
விசேட நடமாடும் சேவையில் வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மீன் மாகாண சபை உறுப்பினர் இமானுவெல் ஆனோல்ட் மக்கள் பணிமனை தலைவர் பி.எம்.எஸ் சுபியான் மௌலவி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அமைப்பாளர் அமீன் ஹாஜியார், யாழ். கிளிநொச்சி முஸ்லீம் சம்மேளனத்தின் தலைவர் ஜமால் முகைதீன், உப தலைவர் கே.எம் நிலாம் செயலாளர் ஆர்.கே.சுவர்ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-4)



# மத பிரிவினை ஊடுருவினால் தியாகங்கள் பயனற்றுவிடும்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு

மன்னார், ஓக. 22
மத பிரிவினையை கையிலெடுப்போமானால் நாம் இவ்வளவு காலமும் கொடுத்த விலைமதிப்பில்லாத தியாகங்களுக்கு எந்தப் பயனும் இல்லை.
இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
மன்னார் நானாட்டான், முசலி பிரதேசங்களுக்குட்பட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கான நடமாடும் கால்நடை வைத்திய சேவையின் தொடக்க விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
விவசாய, கால்நடை உற்பத்திகள் மூலமே தற்போது அதிக இலாபம் ஈட்டப்படுகின்றது. இதுவே சிறந்த வாழ்வாதாரமாகக் காணப்படுகின்றது. எம்மால் வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளில் நாம் இவ்வாறான திட்டங்களையே முன்னிலைப்படுத்துகின்றோம். எமக்கு உதவியாக இருக்கும் கால்நடை திணைக்கள அதிகாரிகள் மற்றும் வைத்தியர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.
இப்போது மத பிரிவினைவாதம் எம் மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ளது. அதனால், எமது இவ்வளவு வருடகால தியாகங்களும் பயனற்றதாகிவிடும். இந்தப் பிரிவினை வாதத்தை மக்கள் களையவேண்டும். எமது நடவடிக்கைகள் மூலம் அயலவர் மற்றும் சகோதர மதத்தவர்கள் மனம் நோகாது பார்த்துக்கொள்ள வேண்டும்- என்றார். (ற-21)

# சட்டவிரோத மின் உபயோகித்த இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஓக. 22
நீர்வேலி மற்றும் கல்வியங்காடு பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் உபயோகித்த இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த வாரம் கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளும், கோப்பாய் பொலிஸாரும் இணைந்து திடீர் நடவடிக்கை எடுத்தனர்.
அதில் மின்மானியைச் சேதப்படுத்தி மின்சாரம் பெற்றவரும், மின்இணைப்பு வயரை மாற்றி அமைத்து மின்மானியின் சுழற்ச்சியை நிறுத்தி மின்சாரம் பெற்ற ஒருவரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்திய போது நீதிவான் பிணையில் செல்ல அனுமதியளித்தார். (ற-107)

# அச்சுறுத்தும் தனியன் யானையை இடம் மாற்றுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.22
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகாமம், கூழாமுறிப்பு பகுதிகளில் அச்சுறுத்திவரும் தனியன் யானையை வெளியேற்ற வன ஜீவ ராசித் திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
ஒட்டுசுட்டான் பகுதியில் தனி யானை ஒன்று மக்களை அச்சுறுத்தி வருகின்றது. இது குறித்து பொதுமக்களால் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே பிரதேச செயலர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தப் பிரச்சினை உடனடியாக வன வளப் பாதுகாப்புத் திணைக்களத்தினதும், வன ஜீவராசிகள் திணைக் களத்தினதும் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர்கள் யானையைப் பெருங்காட்டுக்கு விரட்ட நடவடிக்கை எடுத்தனர். அது பயனளிக்கவில்லை. அடுத்த கட்ட நடவடிக்கையாக யானையைப் பிடித்து இடமாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
ஒரு பிரதேசத்தில் குழப்பம் விளைவிக்கும் யானைகள் காடு மாறும் போதும் இயல்புக்கு வருவது வழமை என்று திணைக்களத்தினர் தெரிவித்தனர். குறித்த யானையும் இடமாற்றப்படவுள்ளது. இந்த நடவடிக்கை இன்று அல்லது நாளை இடம்பெறலாம்- என்றார். (ற-101)

# தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடித்த இலுப்பைக்கடவை மீனவர்கள் கைது

மன்னார். ஓக.22
தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட மீனவர்கள் பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் கோத்தாபிட்டி துறையில் தொழிலை மேற்கொள்ளும் இலுப்பைக் கடவை சேர்ந்த மீனவர்களே.
இவ்வாறு பள்ளிமுனை கிராமிய கடற்தொழில் அமைப்பினர் தெரிவித்தனர்.
தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி தொழில் ஈடுபட்ட பள்ளிமுனையைச் சேர்ந்த 3 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடந்த 13ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியது. (ற-21)

# காயங்களுக்குச் சிகிச்சை பெறுவோரை கண்காணிப்புக்குட்படுத்த நடவடிக்கை

## சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்து அமைச்சின் செயலாளர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22
வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவு, விடுதி, சட்ட வைத்திய அதிகாரி பிரிவு என்பவற்றில் காயங்களுக்குச் சிகிச்சை பெறுவோரின் விவரங்களைப் பதிவு செய்வதுடன், அவற்றால் தொடர்ந்து ஏற்படக் கூடிய தாக்கங்களைக் குறைப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு சுகாதார போசனை மற்றும் சுதேச மருந்து அமைச்சின் செயலாளர் அனுர விக்கிரசிங்க அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அறிவித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
வாகன விபத்து, தாக்குதல், விலங்குக் கடி, குளவி கொட்டு போன்றவற்றுக்கு சிகிச்சை பெறுவோரை 24 பிரிவுகளில் பட்டியலிட்டு அனைத்து விவரங்களுடன் வைத்திய அதிகாரி அலுவலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளார் பிரிவில் உள்ள தொற்றா நோய் பிரிவு அலுவலகம், மத்திய சுகாதார அமைச்சு என்பவற்றுக்கு அனுப்ப வேண்டும்.
காயங்கள் தொடர்பாக சுகதார வைத்திய அதிகாரி பிரிவால் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு மேலும் பாதிப்புகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
குளவிகள், நாய், பூனை, நரி போன்றவற்றால் கடி காயங்களுக்கு இலக்காவோரின் விவரங்களைப் பெறும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து தொடர்புபட்ட விலங்குகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.
தேசிய காய கண்காணிப்பு நடைமுறை தொடர்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலை பொறுப்பதிகாரிகளுக்கான கூட்டம் கடந்த வாரம் வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இந்த நடைமுறை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரு ஆண்டுகளுக்கு முன்னரே நடைமுறையில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோசி சேனநாயக்க கொழும்பு மேயர்!

கொழும்பு, ஓக. 22
கொழும்பு மாநாகர சபையின் புதிய மேயராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க நியமிக்கப்படவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த நிலையில் ரோசி சேனநாயக்க பிரதமர் அலுவலகத்தில் தற்போது பணியாற்றுகின்றார்.
தற்போது கொழும்பு மாநாகர சபையின் மேயர் ஜே.எம். முஸம்மிலுக்குப் பதிலாக ரோசி சேனநாயக்க நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கொழும்பு மாநாகர சபையின் மேயராகப் பணியாற்றும் ஜே.எம்.முஸம்மில் மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
இது தொடர்பில் கருத்து வெளியிட்ட கொழும்பு மாநாகர சபையின் மேயராக பணியாற்றும் ஜே.எம்.முஸம்மில் மலேசியாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது. இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்றார். (ற-4)

# 64 இராணுவ முகாம்களை கிழக்கில் அகற்ற திட்டம்

கொழும்பு, ஓக. 22
கிழக்கு மாகாணத்தில் உள்ள 64 இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதுஎன்றுகூறப்படுகின்றது.
2016ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் 162 முகாம்கள் காணப்பட்டன. ஓகஸ்ட் 31ஆம் திகதி அவற்றை 98ஆக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
திருகோணமலை மாவட்டத்தில் 64 இராணுவ முகாம்கள் உள்ளன. இதன் எண்ணிக்கை 33 ஆக குறைக்கப்படவுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 69 இராணுவ முகாம்கள் உள்ளன. அவை 40ஆக குறைக்கப்படவுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் 31 இராணுவ முகாம்கள் உள்ள. அவற்றை 21ஆகக் குறைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.
இதுவரை நீக்கப்பட்டுள்ள முகாம்களின் மொத்த எண்ணிக்கை 30 ஆகும். இன்னும் 24 முகாம்கள் அகற்றப்படவுள்ளன. 100க்கும் குறைவான இராணுவத்தினர் உள்ள முகாம்களே அகற்றப்படவுள்ளன.
இது குறித்து பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:
குறிப்பிட்ட இராணுவ முகாம்கள் அமையப் பெற்றுள்ளவர்களுக்கு சொந்தமான காணிகளை வழங்குவதற்காக இந்த முகாம்கள் அகற்றப்படுகின்றன. பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் முகாம்கள் அகற்றப்பட்டு காணிகள் வழங்கப்படுகின்றன – என்றார். (ற-4)

# ரயில் மீது கல்லெறிந்தால் சூடு நடத்த நடவடிக்கை

கொழும்பு, ஓக.22
பயணித்துக் கொண்டிருக்கும் போது ரயிலுக்கு கல் எறிபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதற்காக ஒரு தொகை துப்பாக்கிகளை ரயில்வே பாதுகாப்புப் பிரிவுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே பாதுகாப்பு இராணுவத்தின் அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்தார்.
இந்தத் துப்பாக்கியால் சுமார் 15 மீற்றர் தூரத்தில் உள்ள ஒருவர் மீது சூடு நடத்த முடியும். வெலிசர கடற்படை முகாமி லிருந்து 25 துப்பாக்கிகள் பெறப்பட்டன.
ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் குறுந்தூர இலக்குக் கொண்ட துப்பாக்கிகளையே பயன்படுத்துகின்றனர்.
அந்த வகையான 192 துப்பாக்கிகள் தற்பொழுது திணைக்களத்தில் உள்ளன. புதிதாகப் பெற்றுக் கொண்டுள்ள துப்பாக்கிகள் ரயில்வே திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் பயன்படுத்தப் படவுள்ளன என்று பாதுகாப்பு அதிகாரி குறிப்பிட்டார்.
அண்மைய காலப் பகுதியில் பயணித்துக் கொண்டிருக்கும் ரயில் மீது கல் எறிந்து தாக்குதல் நடத்திய 12 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (ற-4)

# கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அரசின் வருமானத்தில் அதிகரிப்பு

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22
கடந்த 7 மாதங்களில் அரசின் வருமானம் 23 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் வருமான நிலையை ஆராய்ந்ததன் அடிப்படையில் கடந்த வருடத்தை விட வருமானம் அதிகரித்துள்ளது.
மூன்று திணைக்களங்களின் மூலம் குறித்த ஏழு மாத காலப்பகுதியில் கடந்த வருடம் 6 லட்சத்து 25 ஆயிரத்து 867 மில்லியன் ரூபாவாக இருந்த வருமானம் கடந்த ஏழு மாதங்களில் 7 லட்சத்து 69 ஆயிரத்து 752 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இதன்படி கடந்த வருடத்தை விட ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 885 மில்லியன் ரூபாவால் வருமானம் அதிகரித்துள்ளது என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (ற-4)


# கஞ்சா சுருட்டு வைத்திருந்தவர் கைது

கொழும்பு, ஓக. 22
பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விற்பனை செய்ய வீடொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது என்று கூறப்படும் மாத்திரைகள் மற்றும் ஒரு தொகை கஞ்சாச் சுருட்டு கைப்பற்றபட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கல்பிட்டி நகரைச் சேர்ந்த 50 வயதான ஒருவரும் கைது செய்யப்பட்டார்.
போதைப் பொருள் விற்று பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபா பணமும் குறித்த நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.
குறித்த மாத்திரைகளை விற்பனை செய்ய குறித்த அனுமதி பெற்றிருக்கவில்லை எனவும் ஒரு காலத்தில் அவர் மருந்து விற்பனை செய்யும் கடை ஒன்றை நடத்தி வந்தவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-4)

# பாதுகாப்பு மாநாடு அடுத்த மாதம்

கொழும்பு, ஓக.22
இலங்கை இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கொழும்பு பாதுகாப்பு மாநாடு அடுத்த மாதம் முதலாம், 2 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
மென் பொருள்களின் சக்தியும், சர்வதேசப் பிரச்சினைகளில் அதன் செல்வாக்கும் எனும் தொனிப் பொருளில் இந்த முறை மாநாடு நடத்தப்படும். அதில் தேசிய, சர்வ தேசிய பாதுகாப்புத் துறை சார்ந்த புத்திஜீவிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-4)

# 34 ஆயிரம் பேருக்கு டெங்கு



கொழும்பு, ஓக. 22
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 34 ஆயிரத்து 773 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது. கடந்த 8 மாதகாலப்பகுதியில் டெங்குத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்வடைந்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட சமூக வைத்திய நிபுணர் பிரஸிலா சமரவீர தெரிவித்தார்.
கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, காலி, குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் அதிகளவானவர்கள் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டது.
இந்த எண்ணிக்கையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்துள்ளது என்றும் அந்த பிரிவு சுட்டிக்காட்டியது.
டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ற-4)

# தனியார் பல்கலைகளில் இருந்தும் ஆசிரியர் நியமனம்

கொழும்பு, ஓக. 22
ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆள்களை இணைத்துக் கொள்ளும் போது அரச பல்கலைக்கழகங்களில் இருந்து மாத்திரமல்லாது தனியார் பல்கலைக்கழகங்களில் இருந்தும் ஆள்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.
இந்த நாட்டின் கல்வித் துறையை கட்டியெழுப்புவதற்காக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போது கல்வியமைச்சர் இவ்வாறு கூறினார். (ற-4)

# வெளிநாடு சென்றவர்களில் 600க்கும் மேற்பட்டோர் சாவு

கொழும்பு, ஓக.22
கடந்த வருடம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் 600க்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளிலேயே உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.
இது குறித்து தெரிவிக்கப்பட்டதாவது:
அவர்களில் 428 பேர் ஆண்கள். 180 பேர் பெண்கள். சுமார் 100 பேர் திடீர்ச் சாவடைந்தனர்.
367 பேர் நோய் வாய்ப்பட்டு இறந்தனர். 9 பேர் கொலை செய்யப்பட்டனர். 28 பேர் தற்கொலை செய்தனர். 109 பேரின் சாவுக்கு இதுவரை காரணம் அறியப்படவில்லை. உயிரிழந்தவர்களுக்காக இந்த நாட்டிலுள்ள உறவினர்களுக்கு கடந்த வருடத்தில் மாத்திரம் கிடைக்கப் பெற்ற நட்ட ஈட்டுத் தொகை 20 கோடியே 96 லட்சம் ரூபாவாகும். இதன் மூலம் 148 குடும்பங்களுக்கு அவை வழங்கப்பட்டன. வெளிநாட்டவர்களுக்காக பல்வேறு அறிக்கைகள், கடிதங்கள், சான்றிதழ்கள் என்பனவற்றுக்காக வெளிவிவகார அமைச்சின் கொன்சியுலர் பிரிவு கடந்த வருடத்தில் மாத்திரம் 12 கோடியே 47 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது – என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு எதிராக 5 ஆயிரம் முறைப்பாடுகள்

## பரணகம ஆணைக்குழுவிடம்

கொழும்பு, ஓக. 22

விசேட உயர் நீதிமன்றம் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஆகியவற்றை அமைக்க வேண்டும் என காணாமற் போனோர் தொடர்பிலான விசாரணைளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. கிடைத்த முறைப்பாடுகளில் படையினருக்கு எதிராக 5 ஆயிரம் முறைப்பாடுகள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி மக்ஸ்வல் பரணகம தலைமையில்பரணகமஆணைக்குழு நிறுவப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. பரணகம ஆணைக்குழுவின் பதவிக் காலம் கடந்த மாதத்துடன் நிறைவடைந்தது. கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 46 பக்கங்களைக்கொண்ட தனது இறுதி இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைத்தது.

ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையில் குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் இரண்டு வழியிலான உள்நாட்டுப் பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

குற்றவியல் குற்றங்களுக்கு உள்ளானவர்கள் நீதிமன்றங்களால் குற்றவாளிகளாக இனங்காணப்படாவிட்டால், அவர்கள் உண்மையைக்கண்டறியும்குழுவில்முன்னிலையாகவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குற்றம் இழைக்கவில்லை என நிராகரிக்கும் தரப்பினர் விசேட உயர் நீதிமன்றின் முன்னிலையிலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த விசாரணைப் பொறிமுறைமையும்உள்நாட்டு ரீதியானதாக அமைய வேண்டும்என்றும், உள்நாட்டுநீதிவான்களைவிசாரணைப்பொறிமுறையில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது.

முன்னாள் நீதிபதி மக்ஸ்வல் பரணகம தலைமையில் காணாமற் போனோர் ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் 2013ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி நியமிக்கப்பட்டது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதியறிக்கையில் முன்மொழியப்பட்ட பரிந்துரைக்கு அமையவே இந்தக் காணாமல் போனோர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

போரின் போதும், அதற்குப் பின்னரும் காணாமற் போனவர்கள் பற்றிய சாட்சியங்களைப் பதிவு செய்து அறிக்கை தயாரித்து ஜனாதிபதிக்கு வழங்குவதை இலக்காகக் கொண்டு இந்த ஆணைக்குழு செயற்பட்டது.

காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை செய்து ஆறு மாதங்களில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும் எனகுறித்தஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு சாட்சியப் பதிவுகளை அந்த ஆணைக்குழு முன்னெடுத்தது.

காலஅவகாசம் போதாத காரணத்தால் மேலும் ஒரு மாதத்துக்கு ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடிக்கும்படி கோரப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது.

2015ஆம்ஆண்டுஜனவரிமாதம் எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து குறித்த ஆணைக்குழுவின் முதலாவது இடைக்கால அறிக்கை 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை அல்லது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின்கீழ் நீண்டகாலம் சிறைவைக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளிகள் தொடர்பில் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தல், இராணுவ வசமிருக்கும் காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட முக்கியமான பரிந்துரைகளை பரணகம ஆணைக்குழு தனது முதலாவது இடைக்கால அறிக்கையில் முன்மொழிந்தது.

போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலும், அரச படையினர் பக்கத்திலும் தவறுகள் இழைக்கப்பட்டிருக்கின்ற என்றும், ஆனால் 40 ஆயிரம் பேர் உயிரிழக்கவில்லை, 10 ஆயிரத்துக்கும் குறைந்தவர்களே உயிரிழந்திருக்கலாம் என்றும் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில்தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் வெள்ளை வான் கடத்தல், ஈ.பி.டி.பி போன்ற அமைப்புக்களின் கடத்தல்கள் போன்றன தொடர்பிலும் ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பொது மக்கள் மீதான செல் தாக்குதல் தொடர்பில் பதிவாகிய சாட்சியங்கள் குறித்து விசாரணை தேவை என்பதையும் அந்த அறிக்கை வலியுறுத்தியது. ஒட்டுமொத்த 20 ஆயிரம் முறைப்பாடுகளிலும் ஐயாயிரம் முறைப்பாடுகள் இலங்கைப் படையினருக்கு எதிரானவை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் ஆயுட்காலம் ஜூலை. 15 ஆம் திகதி நிறைவுக்கு வந்தது. அதன் தலைவர் மக்ஸ்வல் பரணகம, மூன்றாவது இடைக்கால அறிக்கையைத் தயாரிப்பதற்கும், குற்றம் சுமத்தப்பட்ட இரண்டாம் தரப்பினரை விசாரிப்பதற்கும் காலஅவகாசம் இல்லாததால் ஆயுட்காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை ஜனாதிபதி வழங்காததனால் ஆணைக்குழு கடந்த மாதம் கலைக்கப்பட்டது. (ற-4)



பதின்நான்காம் நாள் உள்வீதியுலா

## பதினைந்தாம் திருவிழா

### மெய்யெழுத்துகளுடன் நல்லூர் முருகா!

அடியார் துயர் தீர்க்கும் ஞான சக்தி வேலா!
யாமிருக்க பயமேன் சங்கவதி மால் மருகா!
இடம் புலம் பெயர்ந்தோரின் சச்சரவு தீரா!
மாகாணங்களில் நிலவும் சஞ்சலம் தீர் வேலா!
மாணவ மணிகளுக்கு நல்வழி காட்டும் சட்டகுமரா!
பொருளாதார வளம் பெற்றுயர்த்தும்
நெற்றிக்கண் குமரா!
உண்டி உடை உறையுள் தரும் சித்தாந்த குமரா!
ஊழ்வினை அகற்றும் கந்த முருகேசா!
நல்லிரவில் அடியார் படை சூழவரும் சப்பற வேலா!
இராசதானி நல்லூரில் வலம் வரும் ஆறுமுக வேலா
பொய்யான உலகினில் மெய்ஞானச்சுடரொளியே!
தீயன கழிந்து நல்லன வர சீர் தரும் செம்மலே!
போதுமடா சாமி! முகாம் மீட்சி பெற அருள் வல்லோனே!
வேலையற்றோர் கதி தீர உரமூட்டும் திவ்விய வேலா!
இடம் பெயர்ந்தோர் சீர்பெற வாழ்வாதாரக்கந்தனே!
தொல்புகழ் இனம் நாள் தோறும் படுதுயர்
தூள் ஆக்கும் தீரா!
செல்லப்பன் யோகன் சித்து விளையாட்டிய
நற்கருணைவேலா!
யாழ்.வலிகாமம், தீவு, வட, தென் ஆட்சிகள் நலம் பெற
இன்னிசைதருவேலா!

தொகுப்பு வ.சி.ஶ்ரீஸ்கந்தராசா
ஆத்தியடி புலோலி

### முருகா நீ வா

முருகா நீ வா – முத்திக்கும் பத்திக்கும்
சித்திக்கும் முழு வல்லவனே
உருகா மனமேன் தந்தாய் – திருமால்மருகா
உவந்துவந்து சிவந்ததாளிணை
உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)

அறுமா முகனே யரனார் மகனே
குறுமாமுனிக்குப தேசஞ்சொன்ன
குருவே வருவாய் விரைவா யருள்வாய்
(முருகா)

சிவத்திரு யோகசுவாமிகள்

# குடிவரவுத் திணைக்களம் 29 அன்று இடம் மாறுகின்றது

கொழும்பு, ஓக. 22

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் பத்தரமுல்லவிலுள்ள இசுருபாய புதிய கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அன்று சேவைகள் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பு - 10 ஆனந்த ராஜபகருண மாவத்தையிலுள்ள 41 ஆம் இலக்க பிரதான காரியாலயத்தினதும், கண்டி, மாத்தறை, வவுனியா ஆகிய பிரதேசக் காரியாலயங்களினதும் 26 ஆம் திகதி இடம்பெறவிருந்த பொதுமக்கள் சேவை இடம்பெற மாட்டாது என திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்மாதம் 29 ஆம் திகதி சாதாரண கடவுச் சீட்டு விநியோக சேவை, வீசா விநியோக சேவை, வெளிநாட்டுக் கடவுச் சீட்டு சீர்திருத்தம், ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டதாகவே இடம்பெறும். கடவுச் சீட்டு விநியோகிக்கும் ஒருநாள் சேவை நடைபெற மாட்டாது எனவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற-4)

# நிஜாபுக்கு தடை விதிக்கும் ஆலோசனை நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 22

முஸ்லிம் பெண்கள் உடல் முழுவதையும் மறைக்கும் புர்கா மற்றும் நிஜாப் உடைகளை அணிவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரி ஒருவரே இந்த யோசனையை முன்வைத்தார். புலனாய்வுச் சேவை ஒன்றின் உயர் அதிகாரியின் ஆலோசனையின் பேரிலேயே பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி இந்த யோசனையை முன்வைத்துள்ளார். இந்த அதிகாரி முன்னைய அரசிலும் உயர் பதவியை வகித்தவராவார். புர்கா போன்ற முஸ்லிம்பெண்கள் அணியும்உடைகளை அணிந்து கொண்டு, சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கவே இந்த உடைகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று அந்த அதிகாரி கோரியுள்ளார்.

பிரதமர் இந்த யோசனையை நிராகரித்துள்ளார். தமது அரசுக்கு முஸ்லிம்கள் அளித்து வரும் ஆதரவை பாதித்து விடும் என்று அவர் இந்த திட்டத்தை நிராகரித்ததால் புர்கா மற்றும் நிஜாப் உடைகளுக்குத் தடை விதிக்கும் யோசனை கைவிடப்பட்டது என்று கூறப்படுகின்றது. (ற-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனாதிபதி வெளியிட இருக்கும் பயங்கர இரகசியங்கள் என்ன?

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும், அவர்களுடன் இணைந்த சில சிறுகட்சிகளைச் சேர்ந்தவர்களும் தனியாகவே இதுவரை காலமும் செயற்பட்டு வந்துள்ளனர். நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது பிரதமர் பதவிக்காகப் போட்டியிட்டு அதிலும் மகிந்த ராஜபக்ச தோல்வியுற்றதால் அவரை ஆதரிக்கும் பிரிவினர் தங்களைக் கூட்டு எதிர்க்கட்சியினர் என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

இந்த நிலமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் பதவி ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தக் கட்சியைச் சிதறிப் போகவிடாமல் பாதுகாத்துக் கொள்ள பெரும் பாடுபட்டு வந்துள்ளார். அதனால் ஒருசில தேர்தல் வாக்குறுதிகளையும் கூட அவர் தளரவிட்டு விட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் அவர் அதீத அக்கறை செலுத்த நேர்ந்ததால் தாம் பதவியில் அமர பெரும் பங்காற்றிய சிறுபான்மை மக்களின் முக்கிய சில பிரச்சினைகளிலும் கூட அவர் அதிக கரிசனை கொள்ளாமல் இருந்து வருகிறார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

கட்சியைப் பலப்படுத்துவதற்கு அதன் தலைவர் என்ற முறையில் அவர் பல வகையிலும் பாடுபடுவதானது அவருக்குரிய கடமை. அதனால் தமக்கு எதிராகச் செயற்பட்டு வரும் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் தொடர்பில் அவர் நீக்குப்போக்காகவும் விட்டுக் கொடுத்தும் செயற்பட்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவருடைய இந்த மென்மையான போக்கை அவரது பலவீனமாக அல்லது பயந்து போய்விட்டார் என்ற வகையில் கூட்டு எதிர்க்கட்சியினர் எடை போட்டிருப்பார்களானால் அது முற்றிலும் தவறு என்பதாக, அவர் இப்போது வெளிப்படுத்தியுள்ள சில கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எதிர்த்தரப்பினர்- குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு எதிராக மகிந்த ராஜபக்சவின் தலைமையில் பெரும் எடுப்பில் பேரணியொன்றை கண்டி யிலிருந்து கொழும்புவரை நடத்தி பதவியிலுள்ள இணைப்பரசுக்கு சவால் விட்டிருந்த நிலையில் கட்சிக் கோட்பாடுகளுக்கு மாறாகச் செயற்பட்டவர்களான நாடுமுழுவதிலும் ஏறத்தாழ 40 கட்சி அமைப்பாளர்களை அப்பதவிகளில் இருந்து நீக்கிவிட்டு கட்சி ஒழுங்கின்படி நடந்து கொள்பவர்கள் என்ற வகையில் புதியவர்களை நியமித்தார் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன. இதன் காரணமாக பொங்கி எழுந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன கட்சியை உடைத்துவிட்டார், கட்சி உடைக்கப்பட்டமைக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும் என்று அறிக்கைவிட்டார். அவர் தலைமையில் புதிய கட்சியொன்று உருவாக இருப்பதையே இது காட்டுகிறது என்று பலரும் கருதினார்கள், நம்பகமான செய்திகளும் வெளியாகியிருந்தன.

இவ்வாறான ஒரு நிலையில் தான், கடந்த வெள்ளிக் கிழமை மாத்தறையில் இடம்பெற்ற அரசின் ஒரு வருட நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில் ஜனாதிபதி சிறிசேன மிக அழுத்தமாக சில கருத்துக்களைவெளியிட்டுள்ளார். இதுவரை காலமும் வெளியிடப்படாத பல இரகசியங்கள் வெளியிடப்படும், அப்போது அவர்களின் தேசப்பற்றின் சாயம் வெளுத்துப் போகும் என்று குறிப்பிட்டுள்ள அவர், எம்மைக் கவிழ்ப்பதற்கும் புதிய கட்சி ஆரம்பிக்கப் போகிறார்களாம். இதுவரைகாலமும் மறைக்கப்பட்டு வந்துள்ள பல இரகசியங்கள் வெளியிடப்படும், அப்பொழுது அவர்களுக்கு வீதியில் செல்லவும் முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசில் அங்கம் வகிக்கும் இரண்டு பெரும் கட்சிகளின் உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்த ஒரு நிகழ்வில் ஜனாதிபதி கூறிய இந்த வார்த்தைகள் பார தூரமானவை. கூட்டு எதிர்க்கட்சியினரில் சிலர் மீது இதுவரை காலமும் நிதி - ஊழல் மோசடிகள் போன்றவை தொடர்பாக மட்டுமே விசாரணைகளும் வழக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் கூற்றுப்படி இவைகளை விடவும் இரகசிய விடயங் கள் பல இருக்கின்றன. அவை பகிரங்கமானால் புதிய கட்சி ஆரம்பிக்க விருப்பவர்களால் வீதியில் நடமாடக்கூட முடியா மல் போகும்.

அவ்வாறாயின் அந்த இரகசியங்களை ஜனாதிபதி இதுவரை காலமும் ஏன் வெளியிடாமல் இருந்தார் என்ற கேள்வி எழவே செய்கின்றது. கட்சியின் முக்கியஸ்தர்களின் பொட்டுக்கேட்டை வெளியிடுவது கட்சிக்கே இழுக்காகிவிடும் என்று அவர் எண்ணியிருக்கலாம். அல்லது சரியான சந்தர்ப்பம் வரவேண்டும் என்றும் காத்திருந்திருக்கலாம்.

எதுவானாலும் மகிந்த தரப்பினர் அவசரப்படுவதுபோல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பிளவுபடுத்தி புதியகட்சி ஒன்று ஆரம்பிக்கப்படுமானால், அவர்கள் பற்றிய பல இரகசியத் தகவல்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதியின் வார்த்தைகள் அவர்களுக்குப் பெரும் சவாலாகவே இருக்கப் போகின்றன.



1995 ஆம் ஆண்டு தனது போர் முகத்தையும், தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வையும் வெளிக் காட்டுவதற்கு அவர் தயங்கவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் தனது முக்கிய அமைச்சர் ஒருவரை வெறும் கண்துடைப்புக்காக யாழ்ப்பாணத்திலிருந்த விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கும் சந்திரிகா அனுப்பியிருந்தார். அப்போது யாழ். குடா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்தது.

மு.ஈழத்தமிழ்மணி

இலங்கை அரசியலில் மிக முக்கியமான தலைவர்களாக ஜனாதிபதி மைத்திபாலசிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, திருமதி சந்திரிகா குமாரதுங்க போன்றோரே மக்கள் மத்தியில் விளங்குகின்னறர். பிரதமரான ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராவார். ஏனைய மூவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த நாள், முன்னாள் தலைவர்களாவர்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றுத் தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் வரை ஆட்சி செலுத்திய மகிந்த ராஜபக்சவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட வைத்தவரும், பின்னர் மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவதற்கு மூலகாரணமாக இருந்தவருமான சந்திரிகா அம்மையார் மீண்டும் அரசியலில் தலை தூக்கியிருக்கின்றார்.

மகிந்த ஆட்சியின்போது மகிந்தவினால் கணக்கிலெடுக்கப்படாதவராகவே சந்திரிகா அம்மையாரின் வாழ்வு அமைந்திருந்தது. அவர் அரசியலில் தொடர்ந்து செயற்படமுடியாமல் அதலபாதாளத்தை நோக்கித் தள்ளப்பட்டிருந்தார்.

இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ரணில் தோற்றுப்போயிருந்தார். 2010 ஆம் ஆண்டு நாட்டில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடாவிட்டாலும் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் வன்னிப் போரை நடத்தி போர் வெற்றியை ஈட்டிக்கொடுத்திருந்த இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா போட்டியிட்டார்.

நாட்டின் அரசியலில் அன்றிலிருந்து சந்திரிகாவும் முக்கியமானவராகக் காணப்பட்டாலும் தென்னிலங்கையிலோ, தமிழ் மக்களாலோ மீண்டும் அவர் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சந்திரிகாவின் ஆட்சியானது எந்தவொரு தமிழ் மகனாலும் மறக்க முடியாதது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று முழக்கமிட்டவாறு 1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவரான சந்திரிகா அம்மையார் தம்மையொரு சமாதான தேவதையாகவும் தமிழர்களின் கண்முன் அடையாளம் காட்டிக் கொண்டவரானார்.

இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான சந்திரிகா அம்மையார் சமாதானத்தைக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருந்தது. தனது கணவர் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் போது சுட்டுக் கொல்லப்பட்டதையும், தமிழ் மக்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி இழைத்த கொடுமைகளையும், தாம் நன்குணர்ந்து கொண்ட பெண் என்றும் அதற்கும் மேலாகச் சென்று தானும் ஒரு விதவை என்றவாறும் கண்ணீர் மல்கியபடி ஈழத்தமிழர்களை நம்பவைத்தார்.

1995 ஆம் ஆண்டு தனது போர் முகத்தையும், த்மிழ் மக்களுக்கு எதிரான உணர்வையும் வெளிக் காட்டுவதற்கு அவர் தயங்கவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் தனது முக்கிய அமைச்சர் ஒருவரை வெறும் கண்துடைப்புக்காக யாழ்ப்பாணத்திலிருந்த விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கும் சந்திரிகா அனுப்பியிருந்தார். அப்போது யாழ். குடா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்தது.

1995 ஆம் ஆண்டு இரண்டு பகுதியினருக்கும் போர் நிறுத்தம் ஏற்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தையை சந்திரிகா மேற்கொள்ள விரும்பவில்லை. சமாதானத்தையும் விரும்பவில்லை. போர் நிறுத்தத்தை நீடித்து நீண்ட காலப் பிரச்சினையான தமிழரின் இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்ற எண்ணம் அவரால் துடைத்தெறியப்பட்டது.

1995 ஆம் ஆண்டு தமிழர்களின் போராட்டத்தை முறியடிப்பதற்காகவும் யாழ். மாவட்டத்திலிருந்து விடுதலைப் புலிகளை அழிப்பதற்காகவும் சந்திரிகா அரசில் பதவி வகித்த அவரது மாமன் முறையானவரான அனுருத்த ரத்வத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து போரை நடத்துவதற்கு உத்தரவிட்டிருந்தார்.

சந்திரிகாவின் ஆட்சி யாழ். குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்களை 24 மணிநேரத்துக்குள் வெளியேற்றவும், கடலிலே பலர் கொல்லப்படுவதற்கும் காரணமாகவும் இருந்துள்ளது.

சந்திரிகா போரைப் பிரகடனம் செய்து யாழ். குடாவை சூனியப் பிரதேசமாக்கினார். விடுதலைப் புலிகள் மீது போர்ப் பிரகடனம் செய்து கொண்டு யாழ். குடாவைக் கைப்பற்றுவதற்கான போரை ஆரம்பித்து இறுதியில் யாழ். குடாவைக் கைப்பற்றிக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனற்ற கருத்துக்களைத் தெரிவித்துவரும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

கொண்டார். சமாதான முயற்சியில் ஈடுபட்ட சந்திரிகா விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதிலும் குறியாக வேயிருந்தார். வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் புலிகள் இயக்கத் தலைமை பின்வாங்கிச் சென்றபின்னர் சந்திரிகா பல முனைகளில் வன்னியைக் கைப்பற்ற முயற்சித்திருந்ததார். அவை நிறைவேறவில்லை.

விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஓயாத அலைகள் என்ற படை நடவடிக்கை மூலமும் சந்திரிகாவின் போர் நடவடிக்கை தோல்வியடைந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஏற்படுத்துகின்ற கட்டாயம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டது.

பேச்சுக்கள் தமிழ் மக்களுக்குச் சாதகமானதொரு நிலையேற்படும் வேளையில் அதனைத் தடுத்து குழப்பியவர் சந்திரிகாவே. இவரின் ஆட்சியிலே செம்மணி மயானப் பகுதியில் கைதடியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவியான கிருசாந்தி குமாரசாமி படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகிய நிலையில் வெட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இவரது ஆட்சியில் குமார் பொன்னம்பலம் கொழும்பில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். ஊடகவியலாளர்கள் உட்பட பலர் சந்திரிகா அரசில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். சந்திரிகாவின் ஆட்சிக்காலப்பகுதி மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்ற காலப்பகுதியாகும்.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 147 பொது மக்கள் வரையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். நாகர்கோயில் பாடசாலையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சின்போது பல மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது கொல்லப்பட்டிருந்தனர். பழிவாங்கும் சம்பவங்களும் தாக்குதல்களும் நடந்திருந்தன.

இந்தச் சம்பவங்களுக்காக சந்திரிகா மன்னிப்புக் கேட்கவேயில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து ஆறுதலைத்தானும் கூறவில்லை. தமிழருக்கு தனது ஆட்சியின்போது இழைக்கப்பட்ட ஒரு சில சம்பவங்களைத் தவறு என ஒத்துக் கொண்டாலும் தமிழருக்கெதிரான தமது ஆட்சியில் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்திற்கும் பொறுப்புக் கூறவும் இல்லை. ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர் சந்திரிகா வடபகுதிக்கு சுமார் மூன்று நான்கு தடவைகள் அரசியல் ரீதியில் வந்துள்ளார்.

மகிந்த ஆட்சியின் போதும் ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ். குடாவுக்கு கடந்த வருடமும், இந்த வருடமும் வந்திருந்தார். சந்திரிகா தமிழ்மக்களின் பால் கொண்டுள்ள அனுதாபத்தின் காரணமாகவோ விரும்பியோ அவர் யாழ்ப்பாணம் வருவதில்லை. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு தமிழ்மக்கள் நீண்டகாலமாக பாரபட்சமாக நடத்தப்பட்டார்கள் என்றும் உரிமைகளைக் கோரினார்கள் என்றும் நியாயம் கூறியிருந்தார்.

தனது ஆட்சிக்காலத்தில் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்காது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது பழிசுமத்தி தனதுநியாயத்தை வெளிப்படுத்திக்கொண்டு தற்போது தமிழரின் பிரச்சினைகளை மகிந்த ஆட்சி தீர்க்கத்தவறிவிட்டது. தற்போதைய நல்லாட்சியில் தீர்வு கிடைக்கப் பாடுபடுவேன் என நீட்டி முழக்கமிட்டு வருவதை அண்மையில் யாழ்ப்பாணம் வந்தபோது வெளியிட்ட கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

தான் வரும்போது யாழ்ப்பாண மக்கள் தன்னை வரவேற்கின்ற நிலையில் என்றைக்குமேயிருக்க மாட்டார்கள் என்பதை அறிந்திருந்தார். அதேபோல் மகிந்தவுக்கும் இந்நிலையேற்படும் என்பதையும் அறிந்திருந்தார். இரு வருமே தமிழ் மக்களுக்கெதிரான போருக்கு உத்தரவிட்டவர்கள். சந்திரிகா 1995ஆம் ஆண்டு யாழ். குடாவைக் கைப்பற்றுகின்ற போருக்கு தனது மாமனாரான அனுருத்த ரத்வத்தைக்கு உத்தரவிட்டவர். மகிந்தவோ வன்னிப் பெருநிலப்பரப்பை முழுமையாகக் கைப்பற்றுவதற்கு 2006 இல் படைத்தளபதியான பொன்சேகாவுக்கு உத்தரவிட்டவர்.

> இவரது ஆட்சியில் குமார் பொன்னம்பலம் கொழும்பில் வைத்தே படு கொலை செய்யப்பட்டிருந்தார். ஊடகவியலாளர்கள் உட்பட பலர் சந்திரிகா அரசில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இன்று சந்திரிகா அம்மையார் நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிசெய்த எந்தவொரு அரசும் தமிழ் மக்களுக்கு உதவவில்லை. தமிழ் மக்கள் கோபப்பட்டார்கள். அரசுகள் மீது விரக்தியடைந்தார்கள். இதன் காரணமாகவே போரும் இடம்பெற்றிருந்தது தாமும் இதை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என ஒப்புச் சொல்லியிருக்கின்றார். தங்களால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக சிங்கள மக்கள் வெட்கமடைந்துள்ளனர் என்றும் வேலணையில் வைத்துக் கூறியிருக்கின்றார்.

சந்திரிகா, தனது ஆட்சியில் இடம்பெற்ற தமிழினத்துக்கெதிரான அத்தனை படுகொலைச் சம்பவங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் பகிரங்கமாகவே அதே நிகழ்வில் மன்னிப்பைக் கேட்டிருக்கலாமல்லவா? தனது ஆட்சியில் ஒன்றுமே நடக்கவில்லை என்பதுபோல் அவரது கருத்து அமைந்துள்ளது. சிங்கள மக்கள் வெட்கப்படுகின்றனர் என்பதைவிடுத்து சந்திரிகாதான், வெட்கப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்ற நாமத்தைச் சூட்டி சிங்கள மக்கள் மத்தியில் நச்சுக்கருத்துக்களையும் தமிழினத்துக்கு எதிரான கருத்துக்களையும் விதைத்து சிங்கள மக்களைத் தம்வசப்படுத்தி வைத்திருந்த சிங்களத் தலைவர்களில் சந்திரிகாவும் ஒருவராவார். அப்படிப்பட்டவர் நோர்வே நாட்டு உதவியுடன் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருந்தால் ஈழத் தமிழினத்துக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள் வரைக்கும் சம்பவங்கள் நிகழ்ந்திருக்காது. சந்திரிகாவின் நினைப்பு கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமா என்பது போலுள்ளது.

இந்த வருடம் ஜூன் மாதம் சந்திரிகா காணாமற் போதல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளும் படையினர் எவரும் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் தாம் குற்றமிழைத்ததை எந்தவொரு படையினரும் ஒத்துக் கொள்வார்கள் எனத் தான் நம்பவில்லை என்றும் அவர் கூறியிருந்தார். 11 ஆண்டுகள் ஆட்சி செய்தவர் அவரது ஆட்சிக் காலத்தில் போரை நீண்ட காலமாக நடத்தியிருந்தவர். படையினரின் இழப்புக்களை நன்குணர்ந்து கொண்டவர். படையினரின் உணர்வுகளை உணர்ந்து கொண்டதன் பயனாகவே இப்படிப்பட்டதொரு கருத்தை முன்வைத்திருந்தார். அவரது கருத்தும் படையினரை நல்லாட்சி அரசிலும் பாதுகாக்கின்ற எண்ணமுள்ளவராகவே காட்டுகின்றது.

வெறுமனே தமிழ் மக்கள் முன் வந்து தனது நீலிக் கண்ணீரை வடித்துவிட்டுப் போவதால் பயனொன்றுமில்லை. அவரால் கூறப்படுகின்ற கருத்துக்கள் அபிப்பிராயங்கள் எதுவும் தமிழ் மக்கள் மத்தியில் செல்லுபடியற்றவை.

தமிழ்மக்களின் தீர்வு என்ன? என்பது சந்திரிகாவுக்கு யாரும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் தெரிந்து கொண்டவர். இளைஞர்கள் ஆயுதம் தூக்கியதற்கும் தந்தை செல்வா தமிழீழக் கோரிக்கையை முன்வைத்ததற்கும் உள்ளகாரணங்களை அம்மையார் விளங்கிக் கொள்ளவேண்டும். இதனை உணர்ந்து கொண்டு சிங்களமக்கள் மத்தியில் தமிழர்களின் பிரச்சினைகளையும் அவர்களுக்கான தீர்வையும் விளக்குவதே மேலானது என்பதை உணர்ந்து சந்திரிகா அம்மையார் செயற்பட வேண்டும். அதுவே ஆரோக்கியமாகவும் பயனுள்ளதாகவுமிருக்கும்.

## மூத்த பிரசைகளுக்கான அரசின் வங்கிச் சலுகைகள் நடைமுறைப்படுத்தப்படுமா?

நாட்டிலுள்ள வங்கிகள் மூலம் மூத்த பிரசைகளது நலன் நோக்கில் அவர்களால் வைப்பிலிடப்படும் நிரந்தர வைப்புத் தொகை ரூபா ஒரு மில்லியன் வரைக்கும் வருடவட்டியாக 15 வீதத்தையும், மாத வட்டியாக 14.06 வீதத்தையும் வழங்க நல்லாட்சி அரசு ஏற்பாடு செய்திருந்தது. 2016ஆம் ஆண்டின் பாதீட்டில் நிரந்தர வைப்புத் தொகையின் உச்ச எல்லையை ஒரு மில்லியன் ரூபாவிலிருந்து ஒன்றரை மில்லியன் ரூபாவாக அதிகரித்ததுடன், ஏற்கெனவே இருந்த அதேவட்டிவீதத்தின் கணிப்பீட்டு அடிப்படையில் வட்டித் தொகையை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாதீடு 2016இல் தெரிவிக்கப்பட்டு 9 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் வங்கிகள் இதனை இன்னமும் நடைமுறைப்படுத்தாதுள்ளன. வங்கிகளில் இது பற்றி விசாரித்தால் இது தொடர்பான சுற்றறிக்கை இன்னமும் தமக்குக் கிடைக்கவில்லை என்கிறார்கள். என் போன்ற ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றவர்கள் தமக்குக் கிடைக்கப் பெற்ற தொகையை அதாவது ஒரு மில்லியனுக்கு மேலான தொகையை மேற்படி திட்டத்தில் வைப்பிலிடுவதன் மூலம் மாதாந்தம் பெற்றுக் கொள்ளும் வட்டித் தொகையைக் கூடுதலாகப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. ஏனெனில் நடைமுறையில் இருக்கும் உச்ச எல்லைத் தொகைக்கு மேலாக நிரந்தர வைப்பிலிட்டால், மேலாக இடப்பட்ட தொகைக்கு வருமான வரி செலுத்த வேண்டியேற்படும்.

நல்லாட்சி அரசு, மனிதநேய அடிப்படையில் மூத்த பிரசைகளின் நலன் நோக்கில் ஏற்படுத்தியிருக்கும் ஒன்றரை மில்லியன் ரூபாவை நிரந்தர வைப்பிலிட்டு வருமானவரி விலக்குப் பெறும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கி அதிகாரிகளோ அல்லது சமூக சேவை அமைச்சு அதிகாரிகளோ உதவமுன்வர வேண்டும்.

உதயனின் வாசகர் திருமுகம் பகுதிக்குத் தெரிவிப்பதன் மூலமாவது சம்பந்தப்பட்ட பகுதியினரை இந்த விடயம் சென்றடையாதா என்றொரு நப்பாசையில் இதனை எழுதியிருக்கிறேன். பலநூறு வாசகர் திருமுகங்கள் உதயனில் பிரசுரமாகி சமூகத்திற்கு பயன்பட்டிருப்பது கண்கூடு. அது போல இதுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கண்களுக்கு எத்துப்பட்டு எம் போன்ற மூத்த பிரசைகளுக்கு உதவ இதனைப் பிரசுரித்துதவுமாறு உதயனை வேண்டி நிற்கிறேன்.

பொன். விநாயகமூர்த்தி
வண்ணார்பண்ணை.

## ஏன் இந்த சீத்துவக்கேடு?

யாழ். –வயாவிளான் வழித்தட (764) மினிபஸ்ஸில் கடந்த 18ஆம் திகதி அன்று பிரயாணம் செய்தேன். அப்பொழுது எனக்கேற்பட்ட அனுபவத்தை உதயன் வாசகர்களுக்கும், யாழ். மாவட்டத்தின் பொறுப்பான அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றேன், பிற்பகல் 1.00 மணியளவில் யாழ். நகரிலிருந்து புறப்பட்ட மினிபஸ்ஸின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தேன், பணம் வாங்குவதற்காக என்னருகில் வந்த நடத்துனர் கையில் தனது கைபேசியை வைத் துக்கொண்டு மெதுவாக இரண்டுமுறை ஏதோ கூறினார், எனக்கு விளங்கவில்லை, என்னவென்று கேட்டேன்,எனது கைபேசி இலக் கத்தைத் தருமாறு மீண்டும் இரண்டுமுறை கேட்டார், நான் கொடுத்து விடுகிறேன் என்று எரிச்சலுடன் கூறிவிட்டு இறங்க வேண்டிய இடத்தில் இறங்கிவிட்டேன், சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க நடத்துனரின் இந்தச் செயல் சரியானதா ?

நான் ஒரு ஆசிரியை , ஐம்பது வயதை அண்மிக்கும் எனக்கே இந்தநிலை என்றால் இளம் பெண்களின் நிலை என்ன ? நான் செயற்கை அலங்காரம் எதுவும் இல்லாதவள் , எனது தோற்றத்தைப் பார்த்தே வயதைத் தெரிந்து கொள்ள முடியும் , இவ்வாறான நிலையில் சில மினிபஸ் நடத்துனர்கள் இளம்பெண்களிடத்திலே எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை எல்லோரும் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும், நான் எனக்காக இதனை எழுதவில்லை. ஆசிரியை என்ற வகையில் எனக்குள்ள சமூகப் பொறுப்பின் காரணமாகவே எழுதுகிறேன் ,

பொதுமக்கள் மற்றும் இளம்பெண்களின் நலன்கருதி உரியவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்,

பாதிக்கப்பட்ட பயணி


வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய்ச் சிறுவனுக்காக பதக்கத்தை புறக்கணித்தவர்

போலந்தைச் சேர்ந்த தட்டெறியும் வீரர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனைக் காப்பாற்ற தனது வெள்ளிப் பதக்கத்தை விற்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மலாச்செளஸ்கி என்ற வீரரே இவ்வாறு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அவர் தனது சமூக வலைத்தளத்தில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆரோக்கியத்துக்கு ஆதரவாக போராட வேண்டும். புற்று நோயினால் 3 வயதுச் சிறுவன் ஒருவன் பாதிக்கப்பட்டுள்ளான். கண்ணில் நோய்பாதிப்பு இருக்கின்றமையால், அவனது பார்வை பறிபோகும் வாய்ப்புள்ளது. மருத்துவச் செலவுகளுக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் டொலர்கள் செலவு ஆகும் என்பதால் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன். இதன் ஒரு பகுதியாகவே எனது பதக்கத்தை விற்கவுள்ளேன் என அந்த வீரர் குறிப்பிட்டுள்ளார். வீரரின் இந்த முயற்சிக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர். (ம-ரி4)






## அல்மாஸ் அயன்னா குற்றமற்றவர் ஒலிம்பிக் சம்மேளனம் அறிவிப்பு

எத்தியோப்பிய வீராங்கனை அல்மாஸ் அயன்னா மீது தொடுக்கப்பட்டுள்ள ஊக்கமருந்து குற்றச்சாட்டுகள் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தால் மறுக்கப்பட்டுள்ளது. அயன்ன 10 ஆயிரம் மீற்றர் தூரத்தை வெற்றிகரமாகக் கடந்து தங்கத்தை பெற்றதுமல்லாமல் சாதனையையும் படைத்திருந்தார். நெடுந்தூர ஓட்டத்தின் போது இவ்வாறான சாதனை முறியடிப்பு ஊக்கமருந்தின் பாவனை இன்றி இயலாது என சில ஒலிம்பிக் சம்மேளனங்கள் தெரிவித்த நிலையில், அல்மாஸ் மீது மீண்டும் சோதனை நடத்தப்பட்டு, அவரது சாதனை உறுதி செய்யப்பட்டுள்ளது. சாதனை படைப்பவர்கள் மீது ஊக்க மருந்து குற்றச்சாட்டு சுமத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என அல்மாஸ் கவலை தெரிவித்தார். (ம-ரி4)




## ஒலிம்பிக் கால்...
## முதல்முறை பி...

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கா... பந்தாட்டத்தில் தங்கம் வென்று வரலாற்று அடைவை பதிவுசெய்த... பிரேஸில். பிரேஸிலை எதிர்த்து ஜேர்மன் மோதியது. ஆட்டம்... பித்து 26 ஆவது நிமிடத்தில் பிரேஸிலின் நட்சத்... வீரரும், தல... மான நெய்மர் தனது அணியின் முதல் கோ... ப் பதிவுசெ... வேறெந்த கோல்களும் பதிவாகாமல் 1:0 என்ற பிரேஸிலின்... கத்துடன் முடிந்தது மு... கி. ஆட்டத்தின் 60 ஆவது நிமிடத்தில்... ன் பதிலடி கொடுத்தது. மாற்றங்கள் ஏற்படாமல் நிர்ணயிக்...




## கூடைப்பந்தாட்டத்தில் தங்கம்; இலகுவாக வென்றது அமெ.

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு கூடைப்பந்தாட்டத்தில் அமெரிக்காவுக்கு இலகுவாகத் தங்கப் பதக்கம் கிடைத்தது. தங்கப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து ஸ்பெய்ன் மல்லுக்கட்டியது. ஆரம்பம் முதலே அமெரிக்காவுக்கு ஸ்பெய்னால் எந்த அழுத்தங்களும் ஏற்படவில்லை. முடிவில் 101:72 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அமெரிக்கா ஒலிம்பிக் சம்பியனானது. ஸ்பெய்னுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் பிரான்ஸை எதிர்த்து சேர்பியா மோதியது. இதில் சேர்பியா 70:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று வெண்கலத்தைத் தனதாக்கியது. (ம-ரி4)

## 100 மீற்றர் அஞ்சலே...
## தங்கத்தை தக்கவை...

ஒலிம்பிக் தொடரில் நான்கு வீராங்கனைகள் பற்றுபற்று... சம்பியனாக வலம்வரும் அமெரிக்கா, ரியோ ஒலிம்பிக் தொட... அரையிறுதிப் போட்டியில் அஞ்சல் கோலை அமெரிக்கா கீ... செய்து, தனித்து ஓடி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற ... ஆகியோரை உள்ளடக்கிய அமெரிக்க அணி 41 செக்கன... அடைந்து தங்கத்தை வென்றது. ஜமைக்கா அணி 41 செக்க... அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், பிரிட்டன் அணி 4... இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்ற...



ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் சக வீராங்கனைக்கு உதவியமைக்காக நியூசிலாந்து வீராங்கனைக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம். (ம-ரி4)

## நகருக்கு குறுக்கான சைக்கிளோட்டம் தங்கத்தை வென்றார் சுவீடனின் ஜெனி

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு நகருக்குக் குறுக்கான சைக்கிளோட்டத்தில் சுவீடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

சுவீடனின் சார்பாகக் களமிறங்கிய ஜெனி ரிஸ்வேட்ஸ் ஒரு மணித்தியாலம், 30 செக்கன்கள், 15 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். போலந்தின் மஜா வொலஸ்கோவா ஒரு மணித்தியாலம், 30 செக்கன்கள், 52 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கனடாவின் கேத்ரின் ஒரு மணித்தியாலம், 31 செக்கன்கள், 41 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார். (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...்பந்தாட்ட வரலாற்றில்
# ...பிரேஸிலுக்குத் தங்கம்

...களுக்கா...தால் ...திவுசெய்துள்ளது ... ஆட்டம் ஆரம் ...ரும், தலைவரு ... பதிவுசெய்தார். ...ரஸிலின் ஆதிக் ...நிமிடத்தில் ஜேர் ம ...ர்ணயிக்கப்பட்ட


நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தங்கம் வென்றது பிரேஸில். பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் ரியோ ஒலிம்பிக் தொடருக்கான அந்த நாட்டு அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். ...வர் தலைமைத்துவத்தை ஏற்ற முதல் தொடரிலேயே ஒலிம்பிக் வரல...றில் பிரேஸில் தங்கம் வென்று வரலாற்று அடைவைப் பதிவுசெய்துள்ளது. (ம-ரி4)

# சரித்திரத்தில் நிலைத்திருப்பேன்; இறுதி உரையில் உசைன் போல்ட்

உலகில் தோன்றிய ஆகச் சிறந்த விளையாட்டு வீரர்களில் தனது பெயரும் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் என்று உசைன் போல்ட் தெரிவித்தார்.

100 மீற்றர், 200 மீற்றர், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியவற்றில் பிஜிங், லண்டன், ரியோ ஆகிய ஒலிம்பிக் தொடர்களில் தங்கம் வென்று ஹற்றிக்கில் ஹற்றிக் படைத்துள்ளார் போல்ட். ரியோ ஒலிம்பிக் தொடருடன் ஒலிம்பிக் தொடர்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள அவர் தனது இறுதி ஒலிம்பிக் உரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஓட்டப்பந்தயத்தில் களமிறங்கியபோது இந்தளவுக்கு சாதிப்பேன் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. எனது பயணம் மகத்தானது. கபடமற்றது. இதைச் சாதிக்க உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன். கால்பந்தாட்ட ஜாம்பவான் பிலே, குத்துச்சண்டை ஜாம்பவான் மொகமட் அலி ஆகியோருக்கு இணையாக எனது பெயரும் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்று உறுதியாக நம்புகிறேன். என்னை நினைத்து நான் பெருமைப்படும் தருணம் இது. எனக்கு முழுமையாக ஆதரவளித்த ஜமைக்காவுக்கு நன்றி என போல்ட் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)






# மகிழ்ச்சி!

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு பூப்பந்தாட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற சிந்துவுக்கு சுப்பர் ஸ்டார் ரஜனிகாந் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் தொடரில் இந்திய வீராங்கனை ஒருவர் வென்ற முதலாவது வெள்ளிப் பதக்கமாகவும், ஆகச் சிறந்த அடைவுமட்டமாகவும் சிந்துவின் வெள்ளிப் பதக்கம் உள்ளது. இந்த நிலையிலேயே ரஜனிகாந் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், தான் சிந்துவின் தீவிர ரசிகனாகி விட்டேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு சிந்துவும் மகிழ்ச்சி தெரிவித்தார். (ம-ரி4)

# ...சலோட்டத்தில் ...வைத்தது அமெ.

...ற்றுபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் உலகச் ...பிக் தொடரிலும் தனது தங்கத்தை தக்கவைத்துள்ளது. ...ரிக்கா கீழே போட்டிருந்த நிலையில், மேன்முறையீடு ... பெற்ற தியன்னா, அலிஸன், இங்கிலி, டோரி பூயி ...1 செக்கன்கள், 01 மில்லி செக்கன்களில் இலக்கை ...41செக்கன்கள், 36 மில்லி செக்கன்களில் இலக்கை ... அணி 41 செக்கன்கள், 77 மில்லி செக்கன்களில் ... வென்றன. (ம-ரி4)





# சீனாவுக்கு தங்கப் பதக்கம் பூப்பந்தாட்டத்தில் வென்றது

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் பிரிவு பூப்பந்தாட்டத்தில் சீனாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

சீனாவின் நட்சத்திர வீரரான சின் லோங், மலேசிய வீரரான லீ வெய்யை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி தங்கத்தைக் கைப்பற்றினார். மலேசிய வீரருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் சீனாவின் லின் டானை எதிர்த்து டென்மார்க்கின் விக்டர் அலெக்சன் மோதினார். 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்ற விக்டர் அலெக்சன் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான 5000 மீ. தங்கம் வென்றது கென்யா

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கென்யா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. சக வீராங்கனைக்கு உதவிய விவகாரத்தில் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்ட நியூசிலாந்து வீராங்கனையால் கடைசிக்கு முதலிடத்தையே பிடிக்க முடிந்தது.

கென்யாவின் சார்பாகக் களமிறங்கிய விவியன் 14 நிமிடங்கள், 26 செக்கன்கள், 17 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தை வென்றார். கென்யாவின் பிறிதொரு வீராங்கனையான கெல்லின் 14 நிமிடங்கள், 29 செக்கன்கள், 77 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், எத்தியோப்பிய வீராங்கனை அல்மாஸ் அயன்ன 14 நிமிடங்கள், 33 செக்கன்கள், 59 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (ம-ரி4)



# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? விருச்சிகம்

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப் பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை வரை

அந்த இடம் குருவிற்குரிய வீடு என்பதால் தன் வீட்டைத் தானே பார்க்கும் குருவை நீங்கள் முறையாக வழிபட்டால் ராஜயோகம் உங்களைத் தேடி வரும். தேக நலனும் சிறப்பாக இருக்கும். 4இல் கேது, 10இல் ராகு இருப்பதால் சர்ப்பச் சாந்திப் பரிகாரங்களை முறை யாகச் செய்தால் சந்தோசங்களை நாளும் சந்திக்க லாம்.

### குருபார்வை கொடுக்கும் பலன்கள்!

நவக்கிரகங்களில் சுப கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குருபகவான். அவர் இப்பொழுது லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் அவரது பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிகின்றது. அதன் பார்வை பதியும் இடங்களெல்லாம் அற்புதமான பலன்களை வழங்கும் என்பதால் தான் குரு பார்க்கக் கோடி நன்மை என்று சொல்லி வைத்திருக்கிறார்கள் முன்னோர்கள்.

குருபார்வையால் சகோதரம், சகாயம், சாமர்த்தியம், நட்பு, உடல்நலம், பிரயாணம், சொத்து சேர்க்கை, பணவரவு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு, வங்கிச் சேமிப்பு, வாழ்க்கைத் துணையால் நன்மை, கல்யாண வாய்ப்பு, புத்திரப்பேறு, தொழில் கூட்டாளிகளால் நன்மை ஆகியவற்றைக் குறிக்கும் இடங்களெல்லாம், குரு பார்வையால் நல்ல பலன்களை வாரி வாரி வழங்கப் போகின்றது.

எனவே தற்சமயம் பெயர்ச்சியான குரு சகோதரர்களால் நன்மையை உருவாக்கும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணப் புழக்கம் அதிகரிக்கும். தூர தேசத்திலிருந்து வரும் செய்திகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்க வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் உண்டாகும்.

பஞ்சம ஸ்தானத்தைக் குரு பார்த்தால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து ஆச்சரியப்பட வைக்கும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

சப்தம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். பூப்புனித நீராட்டு விழா முதல் புத்திரப்பேறு வரை இல்லத்தில் இனிதே நடைபெறும் நேரமிது. அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் உங்களுக்கு அனுகூலம் ஏற்படும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து போற்றும் வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க முன்வருவர். பொதுவாழ்வில் புகழ் கூடும். செல்வ விருத்தியும் அதிகரிக்கும். மேலும் நற்பலன்களைப் பெற யோகபலம் பெற்ற நாளில் உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகத்திற்குரிய பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

குரு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): தொழில் வளர்ச்சி மேலோங்கும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். ராஜாங்க அனுகூலம் உண்டு. குலதெய்வ வழிபாடு கூடுதல் முன்னேற்றத்தை வழங்கும். வியாபார விருத்தி உண்டு.

குருபகவான், சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது, (20.9.2016 முதல் 24.11.2016 வரை): உறவினர்களின் உதவி கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

(தொடரும்)

அருந்தவம்

# நஞ்சற்ற கீரையை உள்ளெடுப்போம்



எமது அன்றாட வாழ்வுக்குத் தேவையான, முழுமையான உணவைப் பெற்றுக் கொள்வதற்கு கீரையைக் கட்டாயமாக உட்கொள்ள வேண்டும். எம் உடலுக்கு வேண்டிய விற்றமின்களையும் கனியுப்புக்களையும் மலிவாகப் பெறுவதற்கு கீரைகளே சிறந்தன.

இன்று பெரும்பாலான விவசாய விளைபொருள்கள் விவசாய இரசாயனங்களால் நஞ்சூட்டம் பெற்றே சந்தைக்கு வருகின்றன. இவற்றில் கீரைகளே அதிகம். இவை விவசாய இரசாயனம் பிரயோகிக்கப்பட்டு விளைவிக்கப்படுவதாக நுகர்வோரில் பலர் ஐயம் தெரிவிக்கின்றனர்.

கீரைவகைகளை வீட்டிலேயே விளைவித்து உண்பது சாலச்சிறந்தது. ஆனால் எல்லோராலும் வீட்டில் கீரை பயிர்செய்வதென்பது இயலாத காரியமாகும். எனவே தரமான கீரையைப் பார்த்து வாங்குவதுடன் கீரையை நஞ்சு போகும் படியாகச் சுத்தம் செய்து சமைக்கும் கலையையும் நாம் அறிந்து பின்பற்றினால் எமது உடலை நாமே பாதுகாத்துக் கொள்வதாகவும் அமையும்.

### ஆரோக்கியமான கீரையைப் பார்த்து வாங்குவோம்

எப்போதும் நாம் வாங்கும் கீரை வாடாத புதிதாகப் பிடுங்கப்பட்ட கீரையாக இருப்பது சாலச் சிறந்தது. குறித்த கீரை இனத்துக்கே உரிய பருமனான இலைகளைக் கொண்டிருப்பவையே சிறந்தவை. பெரியதாகவும் மிகவும் கவர்ச்சியானதுமான இலைகளைக் கொண்டிருப்பின் இவை விவசாய இரசாயனங்களால் விளைந்தவையாக இருக்கலாம். கீரைகளை வாங்கும்போது நோய் பீடைத் தாக்கமற்ற ஆரோக்கியமான இலைகளைக் கொண்டவைகளைப் பார்த்து வாங்க வேண்டும்.

வெள்ளை அல்லது துரு போன்ற புள்ளிகளோ, இதே நிறத்தில் துகள்களோ இருப்பின் இவை பங்கசுக்களாகவோ அல்லது பங்கசு வித்திகளாகவோ இருக்கலாம். இவை பூச்சிகளின் முட்டைகளாகக் கூட இருக்கும். இவற்றைப் பார்த்து வாங்குவதுடன் இப்புள்ளிகள் துகள்கள் உள்ள இடங்களை நீக்கி விடுவதும் சிறந்ததாகும்.

### இரசாயனங்களைக் கழுவி அகற்றுவோம்

கீரைகளின் மேல்பகுதியில் இருக்கும் இரசாயனங்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமானது. சில செயன்முறைகளின் மூலம் இரசாயனங்களின் பெரும் பகுதியை அகற்றிவிட முடியும்.கீரைகளை வாங்கியதும் கட்டை பிரித்து நன்கு சுத்தமான நீரில் கழுவுதல் வேண்டும். பின்னர் உப்பு நீரில் இரண்டு மூன்று முறைகள் நன்கு அலசின் அதிகளவு நஞ்சை அகற்றிவிட முடியும். இதற்கு 100 மில்லிலீற்றருக்கு 2 கிராம் எனும் அளவில் சாதாரண உப்பைக் கலந்து பயன்படுத்தலாம்.

இரண்டு அல்லது மூன்று மேசைக்கரண்டி வினிகரை 2லீற்றர் நீரில் கலந்து 15 தொடக்கம் 20 நிமிடங்கள் ஊறவைத்த பின்னர் நன்கு கழுவிச் சமைக்கலாம்.

கீரையை நன்கு கழுவிய பின்னரே சிறிது சிறிதாக வெட்ட வேண்டும் வெட்டிய பின் கழுவினால் அதிலுள்ள போசாக்குகளை இழப்பதற்கு வாய்ப்புண்டு.

இன்றைய பொருளியல் உலகில் நாம் உடலியலைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். எம் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நஞ்சூட்டப்பட்ட விளைபொருள்களை உள்ளே அனுப்பிவிட்டு அவற்றை வெளியேற்ற அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நல்ல உணவே மருந்து, தவறான உணவே நோய். இயற்கை வேளாண்மையில் விளைந்த நஞ்சற்ற உணவை உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்.

**இன்று பெரும்பாலான விவசாய விளைபொருள்கள் விவசாய இரசாயனங்களால் நஞ்சூட்டம் பெற்றே சந்தைக்கு வருகின்றன. இவற்றில் கீரைகளே அதிகம். இவை விவசாய இரசாயனம் பிரயோகிக்கப்பட்டு விளைவிக்கப்படுவதாக நுகர்வோரில் பலர் ஐயம் தெரிவிக்கின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலருக்குப் பயனளித்த மகரந்தச் சேர்க்கை பயிற்சிப் பட்டறை

■ தென்னவன்

நாங்கள் இறந்தால் உங்களையும் எங்களுடன் அழைத்துச்சென்று விடுவோம் என்பது மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் உயிரினங்களின் வேண்டுகோளாகும்.

மனித இனமானது தரமான உணவுப் பொருள்களை உண்பதற்கு மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் உயிரினங்களே காரணமாகின்றன.அந்த வகையிலான உயிரினங்களைப் பாதுகாக்காமல் அழிக்க முற்பட்டால் மனித இனமும் அழிந்து போகும் அபாயம் ஏற்படும்.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையிலான பயிற்சிப் பட்டறை கடந்த 19 ஆம் திகதி மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடைபெற்றது. 'எமது பிரதேசத்தில் மகரந்தக் காவிகளை அறிந்து கொள்வோம்' என்னும் தலைப்பில் மகரந்தக் காவிகளைப் பாதுகாப்பதற்காக அவற்றின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சிப் பட்டறையே நடத்தப்பட்டது.

யாழ். பல்லைகக்கழக விலங்கியல் துறையைச் சேர்ந்த கலாநிதி திருமதி இ.ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமைச் செயலகப் பணிப்பாளர் திருமதி பத்மா அபயக்கோன், அமைச்சின் ஆராய்ச்சி அலுவலர் ஹேமமாலி ஹேரத் மற்றும் விலங்கியல் துறையில் நான்காம் ஆண்டு கற்கும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மகரந்தச் சேர்க்கைகளை மேற்கொள்ளும் உயிரிணங்கள் பணம் பெறாமல் எமக்குத் தெரியாமல் பல்வேறு உதவிகளைப் புரிவதால் நாம் தரமான உணவுப் பொருள்களைச் சாப்பிட முடிகிறது .பூக்கும் தாவரங்களில் இந்த மகரந்தச் சேர்க்கையாளர்கள் மேற்கொள்ளும் உதவிகளினால் நாம் நல்ல கனிவகைகளையும் மரக்கறி வகைகளையும் தானிய வகைகளையும் பெறுகின்றோம். மகரந்தச் சேர்க்கையாளர்கள் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிகளை நடத்தி அவற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கையில் ஈடுபடும் உயிரினங்கள் பற்றிப் பொது மக்கள் தெரிந்து கொள்ளச் செய்வதால் அசேதனப் பசளைகள் மற்றும் கிருமிநாசினிகளின் பாவனையைக் குறைத்து தரமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவுக்கும் ஒரு தாவரத்திலிருந்து மற்றொரு தாவரத்திற்கும் இடம்பெறும் மகரந்தச் சேர்க்கையானது, தினமும் மகரந்தச் சேர்க்கையாளர்களால் எமக்குத் தெரியாமல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தன் மகரந்தச் சேர்க்கை அயன் மகரந்தச்சேர்க்கைஎன்னும்செயற்பாடுகளை மகரந்தச் சேர்க்கையாளர்கள் மேற்கொள்வதால் நாம் தினமும் தரமான உணவுப் பொருள்களை உண்பதுடன் மீண்டும் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய தரமான விதைகளையும் பெற முடிகிறது.

2 லட்சத்து 85 ஆயிரத்திற்கு மேற்பட்ட பூக்கும் தாவரங்கள் தமது வாழ்க்கை வட்டத்தில் பழங்கள் மற்றும் விதைகளைத் தோற்றுவிப்பதற்கு மகரந்தச் சேர்க்கையும் கருக்கட்டலும் இன்றியமையாத காரணிகளாக உள்ளன. தமது உணவுத் தேவைக்காகத் தாவரங்களை நாடும் பூச்சிகளில் தேனீக்கள் மிகவும் சிறப்பானதாகவும் நெருக்கமானதுமான ஓர் பந்தத்தைப் பூக்கும் தாவரங்களுடன் கொண்டுள்ளன. மகரந்தச் சேர்க்கை பூக்கும் மரங்களில் இடம்பெறாவிட்டால் தாவரத்தில் எந்த வித பயனும் பெறமுடியாது போய்விடும். கூர்ப்புக் கொள்கைக்கமைய பூமியில் பூக்கும் தாவரங்களின் தோற்றம்



இற்றைக்கு 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக இடம்பெற்றதாக நம்பப்படுகின்றது. குளவிகளின் தொகையில் சில குறித்த தொகையிலானவை ஊன் உண்ணும் வாழ்க்கை முறையிலிருந்து தாவரவுண்ணி வாழ்க்கை முறைக்குப் படிப்படியாக மாற ஆரம்பித்தன .இவ்வாறாக தம் வாழ்க்கைக் கோலத்தை உணவுக்காக மாற்றி பூக்கள் மற்றும் பூக்கும் தாவரங்களை நாடிய இந்தச் சிறப்பை அடைந்த பூச்சி இனங்கள் தேனீக்கள் என அழைக்கப்பட்டன.

தேனீக்கள் தம்மிடையே ஒரு வியாபித்த சமூக ஒழுங்கமைப்பில் அமைந்த வாழ்க்கை முறையைக் கொண்ட அங்கிகளாக உள்ளன. அவை தனிமையான வாழ்க்கை முறைமை முதற் கொண்டு அதிகளவில் ஒழுங்கமைப்பிற்குள்ளான ஆயிரத்திற்கு மேற்பட்ட தனியன்களை உள்ளடக்கிய குடித்தொகையைக் கொண்டவையாக உள்ளன. இவ்வாறான ஒழுங்கமைப்பில் காணப்படும் தேனீக்களில் தேன் சுரக்கும் தகவுள்ள தேனீக்கள் பூக்களிலிருந்து அமுதத்தை அருந்தி அவற்றைத் தேனாக மாற்றுகின்றன. தேனீக்கள் உலகெங்கம் பரந்து வாழும் அங்கிகளாக உள்ளன. இலங்கையில் சாதாரண தேனீ, கொக்கன் தேனீ, மலைத் தேனீ என மூன்று வகையான தேனீக்கள் காணப்படுகின்றன.

மலைத் தேனீக்கள் ஒப்பீட்டளவில் மிகப்பெரிய தோற்றம் உடையனவாகக் காணப்படுவதுடன் இவை மலைகளில் கற்பாறைகளில் பெரிய மரங்கள் மற்றும் பாவனையில்லாத கட்டடங்கள் போன்ற இடங்களில் தனியாக தேன் கூடுகளை அமைக்கின்றன. இவற்றை கூடுகளில் வளர்ப்பது கடினம்.

கொக்கன் தேனீக்கள் ஓரளவு இருட்டான இடங்களில் காணப்படும் மரக் கிளைகளில் தனி வதைகளாலான கூடுகளை இடத்திற்கு இடம் அலைந்து திரிந்து அமைக்கின்றன. இந்தத் தேனீக்கள் மக்கள் பாவனைக்கான சிறந்த தேனை உற்பத்தி செய்கின்றன. சாதாரண தேனீக்களைப் பொறுத்த வரையில் செயற்கையான தேனீ வளர்ப்பிற்கு உகந்ததாக உள்ளன.

தேனீ வளர்ப்பிற்கு உபயோகமான பல்வகையான மரங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. முதிரை, விளா, இலுப்பை, புளி, தென்னை, காட்டாமணக்கு, இறப்பர், வீரை, கூழா, வேங்கை, சாகை, கருவாகை, பூவட்டை மற்றும் சகல அவரை இனத் தாவரங்களும் தேனீ வளர்ப்பிற்கு உகந்தவையாகும்.

ஒரு தேனீ வதையிலிருந்து ஒன்றரைக் கிலோ தொடக்கம் இரண்டு கிலோ தேனை உற்பத்தி செய்யமுடியும். எனினும் மிகச் சிறந்த பரிபாலனத்தின் மூலம் ஆறு கிலோ தொடக்கம் எட்டுக் கிலோ வரை தேனை உற்பத்தி செய்ய முடியம்.

அண்மைக் காலமாக குளவிகளால் தாக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால் அவற்றை அழிக்க பலர் முயற்சி செய்கின்றனர். இருப்பினும் குளவிகளை அழிக்கக் கூடாது என அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அநேக கிராமங்கள் உள்ள போதிலும் மறவன்புலவு கிராமத்தைத் தெரிவு செய்ததற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இங்குள்ள மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான ஆற்றல்மிக்க மக்களைக் கொண்ட கிராமத்தில் இயற்கையாகவே காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழக விலங்கியல் துறையினரால் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் இப் பகுதியில் உள்ள 50 குடும்பங்களைத் தெரிவு செய்து வறட்சிக் காலத்தில் மேற்கொள்ளக்கூடிய பயிர் வகைகளை உற்பத்தி செய்வது தொடர்பாக நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை மற்றும் செய்முறைகள் மூலம் கிடைத்த அனுபவத்தை மக்கள் உரிய முறையில் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர். அதனால் மகரந்தக் காவிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டி கிராமத்தில் தேன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவே இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. இவர்களுக்கு அடுத்த மாதம் திருநெல்வேலியில் தேனீ வளர்ப்புத் தொடர்பான வளர்ப்பு முறைகள் மற்றும் தேனீக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தேனைப் பெற்றுக் கொள்வது தொடர்பான செய்முறைப் பயிற்சியும் வழங்கி யாழ். மாவட்டத்தில் தேன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கமாகக் காணப்பட்டது ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


# வரலாற்றில் இன்றைய தினம்

1827 – பெரு நாட்டின் ஜனாதிபதியானார் ஜோஸ் டி லாமார்.
1845 – இரண்டாம் மெக்ஸிக்கோ சமஷ்டி குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.
1848 – அமெரிக்கா நியூ மெக்ஸிக்கோவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
1864 – ஜெனிவா உடன்படிக்கையில் 12 நாடுகள் ஒப்பமிட்டன.
1902 – கடிலாக் மோட்டார் கம்பனி உருவாக்கப்பட்டது.
1932 – பி.பி.ஸியின் முதலாவது பரீட்சார்த்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடங்கப்பட்டது.
1934 – ஆஷஷ் தொடரை இரண்டுமுறை கைப்பற்றிய கிரிக்கெட் அணித் தலைவரானார் ஆஸ்திரேலியாவின் பில்வூட்புல்.
1941 – லெனின் கிராட்டை ஜேர்மனியப் படைகள் முற்றுகையிட்டன.
1942 – பிரேஸில், ஜேர்மனி மற்றும் இத்தாலி மீது போர்ப்பிரகடனம் செய்தது.
1944 – சோவியத் யூனியனால் றோமேனியா கைப்பற்றப்பட்டது.
1961 – பேர்லின் சுவரைக் கடக்க முயன்ற இடாஷேக்மன் உயிரிழந்தார்.
1962 – பிரான்ஸ் ஜனாதிபதி சாள்ஸ் டி கோல் மீதான படுகொலை முயற்சி தோல்வியடைந்தது.
1972 – இன ஒதுக்கல் கொள்கை காரணமாக றொடீஷியா சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.
1985 – மான்செஸ்டர் விமான நிலையத்தில் வர்த்தக விமானமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 55பேர் உயிரிழந்தனர்.
2006 – புலிகளுக்கு ஆயுதம் வாங்க முயன்றனராம். அமெரிக்காவில் 8 தமிழர்கள் கைது. பிணையில்லா விளக்கமறியல். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்.

## நேரம் நிற்குமா?

துள்ளி எங்கே போகிறீர்
பள்ளிக்கூடம் போகிறோம்
பையிலென்ன உள்ளது?
பாடப்புத்தகம் உள்ளது
நின்று போனால் என்னவாம்
நேரம் சும்மா நிற்குமா?
இன்று நாங்கள் போகிறோம்
இன்னொரு நாள் பேசுவோம்





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# சிறகு முளைத்த சிங்கம்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அந்தச் சிங்கத்துக்கு வேட்டையாடுவது என்றாலே அலுப்பாக இருந்தது. அடர்ந்த காட்டுக்குள் இரை எங்கே இருக்கிறது எனக் காற்றின் திசையில் மோப்பம் பிடித்து, அந்த இடத் துக்குச் செல்ல வேண்டும். இரை அசரும் வரை காத்திருந்து, பாய்ந்து தாக்க வேண்டும். பறவைகளுக்கு அப்படி யில்லை. அவை வானில் பறப்பதால், இரை இருக்கும் இடம் எளிதில் தெரிந்துவிடும். நமக்கும் அப்படி சிறகுகள் இருந்தால் எப்படி இருக்கும்?' என நினைத்தது. கடவுளை நினைத்துத் தவம் செய்தது. கடவுளும் வந்தார். சிங்கத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சொன்னார். சிங்கத்துக்கு, அழகான தங்க நிறச் சிறகுகள் முளைத்தன. ஆனால், அதன் உடல் சுருங்கிப்போனது. வானில் மகிழ்ச்சியோடு பறந்தது. இத்தனை நாளும் இந்த அனுபவத்தைத் தவறவிட்டுவிட்டோமே என எண்ணியது. காட்டைச் சுற்றிச்சுற்றிப் பறந்து வந்தது.


சற்று நேரத்தில் அதற்குப் பசி எடுத்தது. கீழே பார்த்தது. ஒரு பக்கம் வரிக்குதிரைகள் மேய்ந்துகொண்டிருந்தன. இன்னொரு புறம் காட்டெருமைகள் கூட்டம். மான்கள், நதிக்கரையோரம் நீர் அருந்திக்கொண்டிருந்தன. ஒரு மான் மட்டும் அசட்டுத் தைரியத்தில், தனியாகப் புற்களைக் கடித்துக்கொண்டிருந்தது. கொழுத்த வேட்டைதான் என எண்ணியபடி சிங்கம் அதன்மீது பாய்ந்தது. சிங்கம் தாக்கினால், மான் நிலைதடுமாறிக் கீழே விழுந்துவிடும். அது, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயலுமே ஒழிய எதிர்த்துப் போராடாது. இப்போதோ, மான் எதிர்த்துப் போராடுகிறது. மற்ற மான்களும் உதவிக்கு ஓடிவருகின்றன. கர்ஜித்து அவைகளைப் பயமுறுத்த நினைத்து, வாயைத் திறந்தது சிங்கம். ஆனால், சேவல் போன்ற ஒலிதான் வந்தது. தன் உடல் மட்டும் சுருங்க வில்லை. தனது பலமும் குறைந்துபோனதை உணர்ந்துகொண்டது சிங்கம்.

பயந்துபோய், ஒரு மரத்தின் மீது அமர்ந்துகொண்டு, மீண்டும் கடவுளை அழைத்தது. "நான், பறக்க சிறகுகள் வேண்டும் என்றுதானே கேட்டேன். ஏன் என் உடல் சுருங்கியது?" எனக் கேட்டது சிங்கம்.

"உடம்பு கனமாக இருந்தால், எப்படிப் பறக்க முடியும்? அதனால்தான், உடம்பைச் சுருக்கினேன்" என்றார் கடவுள்.

"நான் கர்ஜித்தால் காடே அதிரும். இப்போது ஏன் இப்படி?" எனக் கேட்டது. அப்படி கர்ஜித்தால், அந்த அதிர்வில் சிறகுகள் உதிர்ந்துபோகாதா? அதனால், குரலை மாற்றினேன்" என்றார் கடவுள்.

"மான்களே என்னை எதிர்த்துப் போராடுகின்றன. அப்படியானால், புழு, பூச்சிகளைத்தான் சாப்பிட வேண்டுமா? ஒரு சிங்கம், புழுவைச் சாப்பிட்டு உயிர் வாழ்வது அசிங்கம்" என்றது சிங்கம். கடவுள் சிரித்தார். "நீதானே பறவைபோல இருக்க விரும்பினாய். எல்லா உயிரினங்களுக்கும் பலமும் அதற்கேற்ப பலவீனமும் இருக்கும். காட்டுக்கே ராஜாவான நீ, பறவைகள் போல இருக்க ஆசைப்பட்டாய். ஓர் அனுபவமாக இருக்கட்டும் என வரம் கொடுத்தேன்" என்றார் கடவுள். புரிந்துகொண்ட சிங்கம், பழைய உருவத்தையே பெற்றது. உடம்பைச் சிலுப்பிக்கொண்டது. அந்தச் சிலுப்பில், அதன் சோம்பேறித்தனமும் தூசாகப் பறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களைக் குறிவைக்கும் கொடிய போதைப்பொருள்களை விட்டு வைக்கலாமா?

குடாநாட்டை இலக்கு வைத்து நகர்த்தப்படும் போதைக் கலாசாரம் தமிழ் மக்கள் மத்தியில் பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. கடந்த காலங்களில் புற்றீசல் போல முளைத்திருந்த போதைப்பொருள் கடத்தல் கலாசாரம் தற்போது குடா நாட்டை அதிகமாக ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறது. தமிழர்களின் எதிர்கால இருப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் மீதான தாக்கத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் கஞ்சா கலாசாரம் வேகமாகப் பரவி வருகின்றதை வெளிப்படையாக அவதானிக்க முடிகிறது.

கஞ்சா மற்றும் போதைப் பொருள் கடத்தல் முயற்சிகளை முறியடிக்க பெரிய கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டிருப்பதாக நல்லாட்சி அரசு அடிக்கடி அறிக்கைகள் ஊடாகக் கொக்கரித்து வந்தாலும், கொழும்பில் இருந்தபடி அவசர வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாகப் பிரதமரும் ஜனாதிபதியும் அரச ஊடகங்களில் புகைப்படங்களுக்காகத் தமது முகங்களை அதிகமாகக் காட்டி வந்தாலும் அவர்களால் நிறுவப்பட்டு இருப்பதாகக் கூறப்படும் கட்டமைப்பின் பலவீனங்களைக் கடத்தல் கும்பல்கள் சாதகமாகப் பயன்படுத்தித் தமது வேலைகளை வலு இலகுவாகச் செய்து வருகின்றனரா என்ற சந்தேகமும் தவிர்க்க முடியாமல் எழுகின்றது.

இந்தச் சந்தேகங்களின் கோணங்களினூடக மேலும் நிலமையை ஆராயும் போது கடத்தல் கும்பல்களுக்கும் அரச ஆசிர்வாதக் கட்டமைப்புக்கும் இடையில் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கின்றதா என்ற சந்தேகமும் மக்களின் மனதில் தவிர்க்க முடியாத ஒன்றாகிறது.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதரைக் கடித்த கதையாக இந்தக் கலாசாரம் தமிழ் மாணவ சமுதாயத்தையும் சீரழிக்கத் தொடங்கியிருப்பதைக் குற்றப்பதிவுகளில் இருந்து அவதானிக்க முடிகின்றது.

வடக்கின் மூளை என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களை இலக்கு வைத்து அண்மையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கஞ்சாக் கடத்தல் முயற்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியது. அந்தச் சத்திய வேள்விக்காகப் பல மாணவர்கள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த வரலாறுகளும் உண்டு. பொங்கு தமிழின் வெற்றிக்காக சங்கே முழங்கு எனப் பொங்குதமிழ் மேடைகளில் சங்கு முழங்கிய பெருமையும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களைச் சாரும். இத்தகு சிறப்பு வாய்ந்த மாணவ சமுதாயத்தின் வரலாற்றில் ஒரு கறையை ஏற்படுத்தும் அளவுக்கு இச்செய்தி அமைந்திருப்பது பலரின் மனவேதனையை அதிகமாக்கியிருக்கிறது, அத்துடன் பாடசாலை மாணவ சமுதாயத்தை இலக்கு வைத்து நடத்தப்படுவதாகக் கூறப்படும் மாவா போன்ற போதை வியாபாரத்தின் மீதும் கவனம் செலுத்த வேண்டிய தேவையும் எழுந்திருக்கிறது. உரிமைக் கோரிக்கைகளுக்கான களத்தை நசுக்குவதான கட்டமைப்பும் மறைமுகமாக இயங்கி வருகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. பெரியளவிலான கடத்தற் செயற்பாடுகள் முறியடிக்கப்படுகின்ற போதிலும் வடக்கில் நகரத்தை அண்டிய பகுதிகளில் சிறியளவில் இந்தப் போதைப்பொருள் வியாபாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன, இவை பொலிஸாருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று கூற முடியாது, பொலிஸாரும் இதைக் கண்டு கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டும்.

போதைப் பொருளைப் பயன்படுத்தினால் அல்லது அது எம்மிடம் இருக்கின்றது என்று பிறருக்குக் காட்டினால் தாம் 'கெத்து' உள்ளவர்கள் என்று பல இளைஞர்கள் எண்ணுகின்றார்கள், இது ஏனைய இளைய சமுதாயத்தையும் கூண்டோடு அழித்து விடுகின்றது. இந்தப் போதைப் பொருளுக்கு எவர் அடிமையாகின்றார்கள் என்று பார்த்தால் 90 வீதமானவர்கள் இளைஞர்களாகவே உள்ளனர். எனவே இது வடக்கில் இளைஞர்கள் மத்தியில் திட்டமிட்டுத்தான் பரப்பப்படுகின்றது என்பதை ஓரவவுக்கு ஊகிக்க முடிகின்றது. எதிர்காலத் தூண்களான மாணவ சமுதாயம் மீது பெரியளவில் கவனத்தைப் பெற்றோர் செலுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. பெண் பிள்ளைகளின் மீதான கவனத்தை விட ஆண் பிள்ளைகள் மீதும் தமது கவனத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் போதைக்கு எதிராக எந்தவித விட்டுக்கொடுப்பும் அற்ற இறுக்கமான பணியைச் சட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவினரும் முன்னெடுக்கவேண்டும்.





உடுவிலூர் கலா

# கைபேசிக்கு அடிமையாகாதீர்கள் பெண்களே...

செல்லிடப் பேசிப்பாவனையால் செல்லரித்துப்போய் நிற்கின்றனர் பெண்கள். செல்லிடப்பேசி இல்லாத கரங்களே இல்லை. அடிப்படைத் தேவையாய் கைபேசிகள் மாறி விட்டன. பயண நெரிசல்களில் கைபேசி உரையாடல்கள், படுக்கைகளில் நீண்ட நேர உரையாடல், மோட்டார் சைக்கிள் ஒட்டும் போது தலைக்கவசத்தின் இடையே கைபேசி செருகப்பட்டு உரையாடல், கடவுளைக் கும்பிடும்போது குறுக்கே அழைக்கும் குறும் செய்தி இவ்வாறு கைபேசியின் செயற்பாடு பெண்களை அடிமைப்படுத்தி ஆளுமை செய்கின்றது.

முன்னேறத்துடிக்கின்ற பெண்கள் வாழ்வில் கைபேசி பெரும் சேவை செய்கின்றது. தொழில் சார்ந்த தொடர்புகளுக்கு கைபேசி கட்டாய தேவை. காரணமின்றி எதுவித முன்னேற்றமுமின்றி பணத்தை மீள்நிரப்பி வேண்டாத உரையாடல்களில் ஈடுபடுவதும் நேரத்தை வீணடிப்பதும் இதனால் வேண்டாத உறவுகளைத் தொடர்வதும் பெண்களின் வாழ்க்கைக்கு ஆப்பாக மாறுகின்றது. இன்றைய குற்றச் செயல்கள் யாவுக்கும் கைபேசியே காரணமாவது எவரும் அறிந்ததே. இன்றைய பெண்களின் கைபேசிப்பாவனை எல்லையை மீறியுள்ளது. தெரு ஓரங்களில் உரையாடியபடியே செல்வதும், அழைப்பு வந்து விட்டால் செய்த வேலை எதுவாக இருந்தாலும் அதை நிறுத்திக் கைபேசியைத் தொடர்வதும், பெற்றோருக்குப் பொய் சொல்லி கைபேசிப் பாவிப்பது, வீட்டில் ஒரு சிம் அட்டை பாவிப்பதும் வழக்கமாகி விட்டன.

உணவில்லாமல் பெண்கள் இருப்பார்கள். கைபேசி இல்லாமல் இருக்கமாட்டார்கள். அந்த அளவுக்குக் கைபேசியின் அடிமைகளாகி விட்டனர் பெண்கள். எதுவும் அளவோடு இருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள். பெண்கள் பல வழிகளிலும் சாதிக்கிறார்கள். சாதிக்கவேண்டும் என்கிற வெறியோடு எதையெல்லாம் செய்கிறார்கள். அவர்களுக்கு மாறாக கைபேசிக்கு அடிமையான பெண்களும் உள்ளனர். பெண்களுக்கு இயற்கையாகவே கூச்சம், பயம் புரிந்துணர்வு உண்டு. இவையே. பெண்மையை மேன்மைப்படுத்துகின்றன. ஆனால் பெண்களில் ஒருசாரார் இவ்வுணர்வுகள் கொஞ்சமேனும் இல்லாதவர்களாக சனநெரிசல் என்றால் என்ன வழிபாட்டிடம் என்றால் என்ன? பாடசாலை என்றால் என்ன? பெரியோர் முன்னிலை என்றால் என்ன? என்பதை அறியாது கைபேசி உரையாடலில் களிகூர்ந்து வாழ்கிறார்கள்.

பெண்களின் பழக்க வழக்கங்கள் சில சமூகத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றன. சில பாரதூரமான விளைவுகளுக்குப் பெண்களின் நடத்தைப் பிறழ்வுகளே காரணம் என முன்மொழியப்படுகின்றது. கைபேசியைக் காரணமின்றி அளவுக்கதிகமாகப் பயன்படுத்துவதே யாவுக்கும் காரணம். பெண்கள் வளர்ச்சியடைய வேண்டும். முன்னேற்றத்தை நோக்கி ஓடிக் கொண்டே இருக்கவேண்டும். வேண்டாத கைபேசிப்பாவனை எந்த முன்னேற்றத்தையும் தரப்போவதில்லை. பொது இடங்களில் நின்று கைபேசியில் உரையாடும் பெண்களைப் பெண்களாகிய எங்களாலேயே காணச் சகிக்க முடிவதில்லை.

கைபேசிப் பாவனையைப் பெண்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடியில் கைபேசி மீள் நிரப்பலுக்கான பணம் பற்றி ஒவ்வொரு பெண்ணும் சிந்திக்க வேண்டும். அத்தோடு பொன்போன்ற நேரமும் அநியாயமாக வீணடிக்கப்படுகின்றது. கைபேசிப் பாவனையால் தப்பான வாழ்க்கையைத் தெரிவு செய்து விட்டு விவாகரத்தை வேண்டி நீதிமன்ற வாசலில் எத்தனையோ இளம் பெண்கள் நிற்பதை நாம் அறிவோம். அதுமட்டுமல்ல அளவுக்கதிகமான கைபேசிப் பாவனையால் செவிப்புலன் பாதிப்படைகிறது. கேட்கும் கருவியைப் பொருத்திப் பாட்டுக் கேட்டுக்கொண்டு சென்று ரயில் கடவையில் உயிரை பறிகொடுத்த பெண்பிள்ளைகளை ஒரு தடவை சிந்தித்துப்பாருங்கள்.

பெண்களே! நேர் கொண்ட சிந்தனையோடு வாழ்வை நோக்கி ஓடுங்கள். வாழ்க்கையே பெரும் போராட்டம். இதில் கைபேசியோடு நாளாந்தம் போராடுவதா? கைபேசிக்கு அடிமை ஆவதால் உங்களது பொன்னான நேரம் காவு கொள்ளப்படுகிறது. உறவுகளை விட்டுத் தூரவிலகுகிறீர்கள். பொய்மையையும் களவையும் கற்றுக் கொள்கிறீர்கள். பதற்றமான மனநிலையோடு வாழும் நிலையை உருவாக்குகிறீர்கள். பெற்றோர் ஏக்கமான வாழ்க்கை வாழும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். ஆகவே பெண்களே உங்களை நீங்களே உணர்ந்து வாழுங்கள். தேவைக்கு மட்டும் கைபேசியைப் பயன்படுத்துங்கள். கைப்பேசிப்பயன்பாடு உங்கள் சாதனைக்கு உறுதுணையாக இருக்குமானால் பயன்படுத்துங்கள். அதுவே உங்கள் வாழ்வை சீரழிக்குமானால் தூர வீசுவதே சிறந்தது. சிந்தியுங்கள் பெண்களே..

செல்லிடப்பேசி உன்வாழ்வை
செல்லரித்திடும் உணர்ந்திடு
அநாமதேய அழைப்புக்களால்
அழிவு நிச்சயம் உனக்குண்டு
களவும் பொய்யும் கற்றிடுவாய்
கன்னியே வாழ்வை சிந்தித்திடு
செந்தமிழிச்சி நீயென்று
செப்புகிறேன் நானுனக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



எவண்டா சொன்னது பேரீச்சம்பழத்தில
இரும்புச் சத்து இருக்கெண்டு... நானும்
காந்தத்தை வைத்து அரை மணி நேரமா
ஒட்டவச்சுப் பார்க்கிறன் ஒட்டவே
மாட்டேங்கிது...

குனிஞ்ச தலை நிமிராத பொண்ணு வேணுமெண்
டேன்..!
புரோக்கர் போட்டோ அனுப்பியிருக்காரு..!





"எனக்கென்னவோ அந்த முள்ளு இரண்டு
மூன்று தடவை
சுத்தி வந்ததுபோல இருந்ததுப்பா...!"




# பிடிவிறாந்து


இயக்குநர் சேரன் நீண்ட நாள்களாக எந்த ஒரு படத்தையும் இயக்கவில்லை. இவர் குடும்பப் பிரச்சினைகளில் இருந்து தற்போது தான் மீண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் இவர் சினிமா டு ஹோம் என்ற நிறுவனம் ஒன்றை நடத்தினார். இதன் மூலம் புதுப்படங்களை சி.டியி லேயே பார்க்கலாம் என்பதுதான். இதன் இயக்குநராக இவருடைய மகளே செயற் பட்டார். இதில் பங்குதாரராக இருந்த ஒரு வர் அதிலிருந்து விலகி, தான் முதலீடு போட்ட ரூ4லட்சத்திற்கான செக்கை வாங்கி, வங்கிக்குக் கொண்டு சென்றுள்ளார்.

ஆனால், அந்த செக் ஏற்கனவே கையாளப் பட்டுள்ளது. இதை நீதிமன்றத்திற்கு அவர் எடுத்துவர, சேரனின் மகளை நீதி மன்றில் முன்னிலையாகும்படி கூறி யுள்ளனர்.

கடைசி வரை அவர் முன்னிலையாகாத காரணத்தால் அவர் மீது பிடிவிறாந்தை பிறப்பித்துள்ளனர்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** செயல்களில் கவனச் சிதறல் ஏற் படலாம். மனைவியின் ஆலோசனை நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தில் இலா பம் சுமாராக இருக்கும். வெளியூர்ப் பயணம் பயனறிந்து மேற்கொள்வது நல்லது.

**இடபம்:** பேச்சு, செயலில் விவேகம் நிறைந்தி ருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**மிதுனம்:** நல்லோரின் நட்பால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். ஆதாயம் உயரும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாண வர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**கடகம்:** உங்களின் சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம்.தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். வருமா னம் சுமார். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க் கவும். நண்பர்களால் உதவி உண்டு.

**சிங்கம்:** பணிகளில் மட்டும் கவனம் செலுத் தவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூல தனம் போதும். இலாபம் மிதமான அளவில் இருக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள் வீர்கள்.

**கன்னி:** செயலில் தைரியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறை யும். இலாபம் படிப்படியாக உயரும். கடனில் ஒருபகுதி செலுத்துவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**துலாம்:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் வரு மானம் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி வளரும்.

**விருச்சிகம்:** உங்களை சிலர் குறை சொல்ல நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு மனநிம்மதிக்கு வழிவகுக்கும்.

**தனுசு:** பிறரது பரிகாசத்தைப் பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி நிறைவேற தாமதமாகலாம். வருமானம் சுமார். தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் எதிரிக்கும் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் வருமானத்திற்கு குறை விருக் காது. அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**கும்பம்:** திகைப்பு தந்த பணியும் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வரு மானம் உயரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி கிடைக்கப் பெறுவர்.

**மீனம்:** பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்தி ருக்கும். உறவினர் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரத்தில் வருமா னம் உயரும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.



ஒரு காலத்தில... சாரி இப்ப இருக்கிற காலத்தில ஒரு ஆணும் ஒரு பெண்ணும் விவாகரத்துக் கேட்டுக் கோர்ட்டுப் படிய மிதிச்சாங்கலாம்.

பெண்: "யுவர் ஆனர் என் குழந்தையை 10 மாதம் வலியோடு சுமந்து, பெத்து, பாலூட்டி, வளர்த்து ஆளாக்கினவள் நான். அதனால் குழந்தை எனக்குத்தான் சொந்தம்" என்றாள், நீதிபதி இப்போது ஆணின் பக்கம் திரும்பி "நீங்க",

ஆண்: "நீதிபதி ஐயா எனக்கு ஒரு சந்தேகமுங்க, எ.ரி.எம் மெசின்ல கார்ட உள்ளேவிட்டு எடுத்தேன். பணம் வந்தது. இப்போ அந்தப் பணம் மெசினுக்குச் சொந் தமா? எனக்குச் சொந்தமாங்க?"

நீதிபதி: "கோர்ட்டு கலைக்கப்படுகிறது."

கோழியின் கிறுக்கல்!!

கோபத்துக்கான காரணம் மறந்த பின்னும், கோபம் மட்டும் நிலைத்திருக்கிறது நம்மில் பலருக்கு!

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | 6 | | | | 3 |
| | 7 | | 1 | | | | | 9 |
| 5 | | | | 3 | | 1 | 6 | |
| | | 9 | 7 | | | | 1 | |
| | 4 | | | | | | 9 | |
| | 5 | | | | 3 | 7 | | |
| | 3 | 7 | | 1 | | | | 5 |
| 2 | | | | | 5 | | 3 | |
| 1 | | | | 2 | 4 | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 1 | 7 | 3 | 2 | 9 | 8 |
| 8 | 1 | 2 | 5 | 6 | 9 | 7 | 3 | 4 |
| 3 | 9 | 7 | 4 | 2 | 8 | 5 | 6 | 1 |
| 1 | 6 | 5 | 8 | 4 | 2 | 3 | 7 | 9 |
| 7 | 3 | 8 | 9 | 5 | 1 | 4 | 2 | 6 |
| 2 | 4 | 9 | 6 | 3 | 7 | 8 | 1 | 5 |
| 9 | 2 | 1 | 3 | 8 | 4 | 6 | 5 | 7 |
| 6 | 7 | 4 | 2 | 9 | 5 | 1 | 8 | 3 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 6 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாறுகரை கொண்ட பட்டு வேட்டிகள் அறிமுகமாகியுள்ளன. தூய பட்டில் உருவான வேட்டிகளில் மாறுகரைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 2 ஆயிரத்து 300 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. முன்னதாக பருத்தி வேட்டியில் மாறுகரைகள் விற்பனை செய்யப்பட்டன.

**இது புதுசு**

## நாளை

ஆவணி-07
செவ்வாய்க்கிழமை
-23.08.2016
திதி: ஷஷ்டி பி.இ.04.00
நட்சத்திரம்: அச்சுவினி
மா.06.59
ராகுகாலம்:
03.05-04.35 வரை
சுபநேரம்:
10.35-12.05 வரை



## அரிசி அல்வா

**தேவையான பொருள்கள்**

பச்சரிசி – 1 கப்
சீனி – 1 கப்
கடலைப் பருப்பு – 1/4 கப்
தேங்காய் – 1/2 மூடி
ஏலக்காய் – 3
நெய் – 2 தேக்கரண்டி

**செய்முறை**

- அரிசியை 2 மணி நேரம் ஊறவைத்து பின் 1 கப் தண்ணீர் சேர்த்து இட்லி மாவு பதத்திற்கு நன்றாக மைய அரைத்துக் கொள்ளவும்.
- கடலைப் பருப்பை 1/4 மணி நேரம் ஊறவைத்து பின் வேகவைத்துக் கொள்ளவும்.
- சீனியைத் தூளாக்கி வைக்கவும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும். ஏலக்காயைத் தட்டிக் கொள்ளவும்.
- ஒரு பாத்திரத்தில் 1 தேக்கரண்டி நெய் ஊற்றி அரைத்து வைத்துள்ள அரிசி மாவைப் போட்டு நன்றாக கிளறி வேகவிடவும்.
- மிகவும் கட்டியாக இல்லாமல் இருக்கு வேண்டுமானால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும்.
- அரிசிமாவு முக்கால் பதம் வெந்ததும் அதில் சீனி மற்றும் வேகவைத்துள்ள கடலைப் பருப்பைச் சேர்த்து கிளறவும்.
- சீனி நன்றாகக் கரைந்து அரிசிமா சேரும் வரை இடையிடையே கிளறிவிடவும்.
- சீனி கரைந்து வாசனை போன பிறகு துருவிய தேங்காய் மற்றும் ஏலக்காயைப் போட்டு 3 நிமிடம் வேகவிடவும்.
- ஒரு தட்டில் மீதம் உள்ள 1 தேக்கரண்டி நெய்யைத் தடவி அதில் செய்து வைத்துள்ள அல்வாவை ஊற்றி ஆறவிடவும்.
- சிறிது நேரம் ஆறிய பிறகு வேண்டிய வடிவத்தில் வெட்டி பரிமாறவும்.
- இப்பொழுது சுவையான அரிசி அல்வா தயார்.

## மிக்ஸி பராமரிப்பு




- குறைந்த மின்னோட்டம் இருந்தால் மிக்ஸியை உபயோகிக்கக் கூடாது. மோட்டார் கெட்டு விடும்.
- ஜாரில் 3ல் 2 பங்கு தான் நிரப்ப வேண்டும். அதிகம் போட்டால் விரைவாக பழுது ஏற்படும்.
- அரிசி மாவு கெட்டியாகத் தேவைப்படும் போது அரிசியைக் கெட்டியாக அரைப்ப தாலும் மிக்ஸி கெட்டுவிடும்.
- ஜாரில் போட்டு அரைத்ததும் உடன் அதில் தண்ணீர் ஊற்றி வைத்து அலம்பித் தனியாக எடுத்து வைக்கவேண்டும். பாத்திரம் கழுவும்போது பாத்திரத்தோடு கழுவலாம் எனப் பாத்திரத்தோடு சேர்த்துப் போடக்கூடாது.
- மிக்ஸி பிளேடுகளை சாணை வைக்கவேகூடாது. மிக்ஸி பிளேடுகள் மோட்டாரின் வேகத்தைப் பொறுத்தே நைசாக அரைக்கும்.
- மிக்ஸியின் பிளேடுகள் மழுங்கி விட்டால் கல் உப்பை ஒரு கை எடுத்து மிக்ஸியில் போட்டு ஓரிரு நிமிடங்கள் ஓட்டவும். பிளேடுகல் கூர்மையாகிவிடும்.
- ஜார்களில் அடிப்பகுதி ரிப்பேர் ஆகி அடிப்பகுதியில் தண்ணீர் கசிவு இருந்தால் உடன் ஜாரை சரி பார்க்க வேண்டும். இல்லையென்றால் தண்ணீர் மோட்டாரில் இறங்கி மிக்ஸியில் பழுது ஏற்பட்டுவிடும்.
- சூடான பொருள்களை மிக்ஸியில் அரைக்கக் கூடாது.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 400–600 | 700 | 800 | 600 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 350 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500–600 | 600 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 600 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | – | 800 | 1000 | 700 | – |
| சீலா | 300 | 400 | 350 | 600 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 500 | – | 600 | 500 | 450 | 420 |
| முரல் | 300 | 400 | 400 | 500 | 300 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | – | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 400 | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 300 | 150 | 300 | 200 | 380 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 250 | 120 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 200 | 300 | – | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 200 | 400 | 350 | 200 | 300 |
| கொய் | 100 | 150 | 100 | 70 | 80 | 200 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 600 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 400 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 80 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 60 | 100 | 80 | 60 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 200 | 140 | 100–120 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 100 | 80 | 80 | 60–70 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 60 | 40 | 100 | 50–60 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 80 | 180 | 100 | 120 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | 140 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 50 | 40 | 60 | 50 | 50–60 | 80 | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 40–50 | 60 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 80–100 | 40 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 150 | 300 | 120 | 120–140 | 200 | 400 | 160 |
| புடோல் | 40 | 40 | 50 | 50 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 100 | 90 | 160 | 140 | 100–120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 30 | 50 | 60 | 60–80 | 80 | 70 | 50 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 180 | 140–160 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30 | 25–30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 100 | 90–100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 200 | 120 | 140 | 120–140 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 150 | 200 | 160 | 140 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 120 | 50 | 80 | 120 | 200 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

வணிகம்

# “செலான் மணி மார்க்கெட்” அறிமுகம்




செலான் வங்கி அதன் புத்தம் புதிய சேமிப்புக் கணக்கான “செலான் மணி மார்க்கெட்” அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கணக்கு, குறுகியகால முதலீடு மற்றும் நேரடி வருமானத்தை உறுதிப்படுத்தும் சிறந்த நிதி முகாமைத்துவத் திட்டம் ஒன்றினை நாடும் நிதி முகாமையாளர்களுக்கும் கம்பனிகளுக்கும் பெரும் பயனாக அமையவுள்ளது.

“குறுகிய காலத்தில் கூடிய வருமானம்” என்ற வாக்குறுதியை வழங்கும் “செலான் மணி மார்க்கெட்” சேமிப்புக் கணக்கு, வாடிக்கையாளர்கள் தமது குறுகியகால முதலீடுகளைத் தமது வசதிக்கேற்ப நிர்வகிப்பதற்கு இடமளிக்கிறது என வங்கி கூறியுள்ளது.

தமது வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளை உணர்ந்து செலான் வங்கி மீண்டுமொருமுறை குறுகிய கால நிதியை நிர்வகிக்க முறையான கட்டமைப்புடைய நிதிக் கருவியை அறிமுகப்படுத்தியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

செலான் வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுவதன் மூலம் அவர்களின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப நிதித் தீர்வுகளை வழங்குகின்றது.

ஆரம்ப வைப்பாக ரூபா 500,000 மூலம் ஆரம்பிக்கப்படக்கூடிய “செலான் மணி மார்க்கெட்” சேமிப்புக் கணக்கின் வட்டி வீதங்கள் வாரந்தோறும் பரிசீலிக்கப்படும். மேலும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கணக்குக்கான தொடர்பு இன்ரர்நெற் வங்கிச் சேவை மூலம் உடனடியாக வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கணக்கு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த செலான் வங்கியின் சந்தைப் படுத்தல் மற்றும் பிரத்தியேக வங்கியியலுக்கானப் பிரதிப் பொது முகாமையாளர் டிலான் விஜயசேகர, குறுகியகால முதலீடுகள் மூலம் கூடிய வருமானத்தைப் பெற முயற்சிக்கும் பாரிய கூட்டமைப்புக்கள் மற்றும் தனிநபர் வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதி சேர்க்கும் முகமாகவே “செலான் மணி மார்க்கெட் சேமிப்புக் கணக்கு” அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

குறுகிய கால மீள்கொள்வனவுப் பத்திரங்கள் மற்றும் கடன் முறிகள் ஆகியவற்றில் தமது முதலீட்டு நிதிகளைப் பலர் முதலிடுகின்றனர். அவர்களது தேவை களை நிறைவேற்ற செலான் வங்கியின் சாதாரண வட்டி வீதங்களை விட அதிக வருமானம் வழங் கும் செலான் மணி மார்க் கெட் போன்ற தொரு சேமிப்புக் கணக்கு சாமர்த்திய மான முதலீட்டாளர்கள் மத்தியில் முக்கிய நிதிக் கருவியாகத் தொழிற்படும் என்பதில் ஐயமில்லை–என்றார். (த)



# கொமர்ஷல் வங்கி- டிமோ லீஸிங் உடன்படிக்கை

கொமர்ஷல் வங்கியும் டிமோவும் செய்து கொண்ட பிரத்தியேகமான வணிக ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றின்படி மேர்சிடிஸ் பென்ஸ் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்குத் தள்ளுபடிகளையும் ஏனைய அனுகூலங்களையும் வழங்குவதெனத் தீர்மானித்துள்ளன.

வாகனங்கள் இருப்பில் இருக்கும் வரை, முதலில் வருவோரை முதலில் கவனித்து குத்தகைப் பெறுமதியில் குறைந்த வருட வட்டி வீதமான 13 சதவீதத்தில் விசேட வாகனக் காப்புறுதி விருப்பத் தேர்வில் கொமர்ஷல் வங்கியிலிருந்து லீசிங் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைப் பணிப்பாளர், பிரதம நிறைவேற்றதிகாரி ஜெகன் துரைரட்ணம் இந்தத் திட்டம் பற்றி தெரிவிக்கையில்,

மேர்சிடிஸ் பென்ஸ் சொகுசு, தரம், வடிவமைப்பு ஆகியவற்றைத் தெளிவாக வரையறை செய்வதுடன் தனது சொந்த சக்தியில் இயங்கும் ஒரு வாகனமாகும். எமது லீசிங் வாடிக்கையாளர்கள் இத்தகைய மதிப்பான வாகனம் ஒன்றைத் தமது சொந்தமாக்கிக் கொள்ள ஒரு வாய்ப்பை வழங்குவதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இரண்டு முன்னோடி நிறுவனங்கள் இந்த வழங்கலில் ஒன்றிணைவதால் வாடிக்கையாளர்களுக்குத் தரம், நம்பகமான சேவை ஆகியன குறித்து உத்தரவாதம் செய்யப்படுகிறது– என்றார்.

டிமோ குழுப் பிரதம நிறைவேற்றதிகாரி குஹநாத் பண்டிதகே கருத்து தெரிவிக்கையில், மேர்சிடிஸ் பென்ஸில் நாம் தினமும் சந்தையில் வழங்கப்படக் கூடிய அதிசிறந்த அனுகூலங்களையே வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம் என்பதையும் டிமோவுக்கும் கொமர்ஷல் வங்கிக்குமிடையிலான இந்தக் கூட்டு முயற்சி இரண்டு நிறுவனங்களினதும் அதிசிறந்த அனுகூலங்களை எமது வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகிறது என்று கூறினார். (த)

## அநுராதபுரத்தில் புதிய காட்சியறை திறந்து வைத்த மெட்ரோபொலிடன்

வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கும் நோக்குடன், மெட்றொபொலிடன் நிறுவனம் அண்மையில் அநுராதபுரம் நகரில் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்திருந்தது. இந்தத் திறப்பு விழாவில் அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் புதிய கிளையில் நவீன தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள், கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஸ்கேனர்கள் மற்றும் பல்தீர்வு சாதனங்கள், தொலைநகல் இயந்திரங்கள் போன்ற அலுவலகத் தன்னியக்க உற்பத்திகள் விற்பனை செய்யப்படவுள்ளன. மேலும் வளிச் சீராக்கிகள், ஜெனரேட்டர்கள் மற்றும் லைட்டிங் முறைமைகள் போன்றன பொறியியல் உற்பத்தி தெரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்த வட மத்திய மாகாணத்துக்கும் சேவைகள் மற்றும் விற்பனை செயற்பாடுகளை வழங்கும் நோக்கில் இந்த அநுராதபுரக் கிளை திறக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, நாம் வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு தகவல் தொழில்நுட்ப உற்பத்தித் தெரிவுகளை வழங்கும் வகையில் காட்சியறையினுள்ளேயே சில்லறைக் கொள்வனவுகளுக்கான பிரிவையும் ஆரம்பித்துள்ளோம் என மெட்றொபொலிடன் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.பி.ஜி.நிலந்த தெரிவித்தார்.

இலங்கையின் முன்னணி தொழில்நுட்ப திட்டங்களுக்கான தொழில்நுட்பங்களை வழங்கி இலங்கையின் தகவல் தொழில்நுட்பம், பொறியியல், அலுவலகத் தன்னியக்கம், தொடர்பாடல் வளர்ச்சியின் முன்னோடியாக மெட்றொபொலிடன் திகழ்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

# அனைத்து வாடகை வாகனங்களுக்கும் மீற்றர்

முச்சக்கர வண்டி உட்பட அனைத்து வாடகை வாகனங்களுக்கும் மீற்றர் கட்டணச் செயற்றிட்ட முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

மீற்றர் செயற்றிட்ட முறை அடுத்த வருடம் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாடகை வாகனங்களுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய, இந்தத் திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேல் மாகாணத்தில் மாத்திரம் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் செயற்றிட்டம் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



## நுட்பம்

# செல்பிக்காகவே வந்த கைபேசி

செல்பிக்காகவே கைபேசிகளை தயாரிப்பதில் ஒப்போ (Oppo) நிறுவனம் தனி முத்திரை பதித்து வருகிறது.

ஏற்கனவே எவ் 1 மற்றும் எவ்1 பிளஸ் என இரண்டு கைப்பேசிகளை வெளியிட்ட நிலையில் தற்போது புதியதாக செல்பி பிரியர்களுக்காகவே தயாரிக்கப்பட்ட எவ் 1 எஸ் என்ற புதிய மொடல் கைப்பேசியை வெளியிட்டுள்ளது.




16 மெகாபிக்சல் செல்பி எடுக்கும் கமெராவும், 13 மெகாபிக்சல் பின்பக்க கமெராவும் பல போட்டோ பில்டர்கள் என கமெரா மிகவும் சிறப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

5.5 inch Screen, 3 GB RAM mt6750 Octo Core 64dbit Processor, Dual Sim, 1280 720 Pixel என அட்டகாசமாக காட்சி அளிப்பதுடன், மெமரியை 128 ஜிபி வரை அதிகரித்துக் கொள்ளக் கூடியவாறு வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கைபேசிக்கே உரிய கூடுதல் வசதியாக இதில் ஆள்காட்டி விரலைக் கொண்டு தொட்டால் கமெரா அப்ளிகேசன் மற்றும் மோதிரவிரல் வாட்ஸ் அப்பைத் திறப்பது என மிகச் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக ஒப்போ எவ் 1 எஸ் போனில் விரலுக்கு ஏற்றாற் போல் பல வசதிகள் உள்ளன. (த)



## புதிய முயற்சியில் அப்பிள்

ஐபோன்கள், ஐபேட்கள், மடிக்கணினிகள் உட்பட மேக் கணினிகள் எனப் பல்வேறு இலத்திரனியல் சாதனங்களை அறிமுகம் செய்து மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்ற நிறுவனமாக அப்பிள் திகழ்கின்றது.

இவ்வாறான நிலையில் எதிர்காலத்தில் சிறந்த தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்யும் நோக்கிலும், மேலும் பல புதிய சாதனங்களை வடிவமைக்கும் நோக்கிலும் புதிய முயற்சியில் அந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இதன்படி ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்ட துணை நிறுவனம் ஒன்றை இவ்வருட இறுதிக்குள் சீனாவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தகவலை அப்பிள் நிறுவனத்தின் தலைமை அதிகாரியான டிம் குக் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

அண்மையில் அவர் சீனாவுக்குப் பயணம் செய்திருந்தபோதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார். ஆனால் இதுவரை அதற்கான எந்த ஆரம்பப் பணிகளும் இடம்பெறவில்லை.

எனினும் விரைவில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும், அது தொடர்பான மேலதிக தகவல்களும் எதிர்காலத்தில் வெளியாகலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அணியினருக்கு எதிர்காலத்தில் மக்களே தக்க பாடம் புகட்டுவார்கள்

## அமைச்சர் கயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22
லிப்டன் சுற்று வட்டத்தில் போராட்டம் செய்வோரையா அல்லது தங்களுக்காக சபையில் குரல் கொடுப்போரையா எதிர்காலத்தில் தெரிவு செய்வது என்பது தொடர்பில் மக்கள் தீர்மானிப்பார்கள். இவ்வாறு ஊட கத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.



கண்டியில் சமய வழிபாடுகளின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் நாடாளுமன்றத்தில் கருத்துக்களை முன்வைத்தார்கள். மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு விவாதத்தில் கலந்து கொள்ளும்படி சபாநாயகர் அழைப்பு விடுத்தபோதிலும், அதில் கலந்து கொள்வதற்கு பெரிதும் ஆர்வம் காட்டவில்லை. சபா மண்டபத்தில் கூடி பாடல்களைப் பாடி, கவிதைகளை வாசித்து மிகவும் கீழ்த் தரமாகவே செயற்பட்டனர். நாட்டிலுள்ள அனைவரும் இதனைக் கண்டார்கள்' – என்றார்.

நாடாளுமன்றத்தில் இவ்வாறு தொடர்ச்சியாக அவமதிப்பு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அரசிலும், நாடாளுமன்றத்திலும் முக்கிய பொறுப்பை வகிக்கும் நீங்கள் இதனைத் தடுப்பதற்கு என்ன வகையிலான நடவடிக்கை எடுப்பீர்கள் என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் வினவினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக, நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்குப் பங்கம் ஏற்படும் வகையில் ஆளும்தரப்பில் எவரும் செயற்படுவதில்லை. ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எனக் கூறப்படும் சிறிய குழுவொன்று இவ்வாறு செயற்படுகிறது. நாட்டிலுள்ள வாக்காளர்கள் மிகவும் புத்திசாலிகள். லிப்டன் சுற்று வட்டத்தில் போராட்டம் செய்வோரையா அல்லது தங்களுக்காக சபையில் குரல் கொடுப்போரையா தெரிவு செய்வது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் மக்களே தீர்மானிப்பார்கள்' – என்றார்.

(வ–5)

# ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு தொடர்பில் பொய்யான பரப்புரை

## அமைச்சர் ரிசாத் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஓக. 22
நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதிவிசாரணை ஆணைக் குழுவின் அழைப்புத் தொடர்பில் பொய்யான பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. அதுபற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவசர கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

> ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, கடந்த அரசில் சதொச நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பில் கடந்த ஒரு வருடமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றது. சதொச நிறுவனம் தற்போது அமைச்சர் ரிசாத்தின் அமைச்சுக்குள்ளேயே உள்ளடங்கியுள்ளது.

அமைச்சரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற மோசடிகளையும், முறைகேடுகளையும் விசாரிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழு, கடந்த அரசில் சதொச நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பில் கடந்த ஒரு வருடமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றது.

2010 ஜனவரி 10ஆம் திகதி தொடக்கம் 2015 ஜனவரி 10 ஆம் திகதிவரை இடம்பெற்ற ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பிலேயே இந்த ஆணைக்குழு, தனது விசாரணைகளை நடத்தி வருகின்றது. தற்போதைய அரசில் சதொச நிறுவனம் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அமைச்சின் கீழ் வருவதனால் இது தொடர்பில் அமைச்சரின் கருத்தை அறிய ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு அழைப்புக் கடிதமொன்றை அவருக்கு அனுப்பியது.

கடந்த 19ஆம் திகதி ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச என்பவரால் கையெழுத்திடப்பட்ட அழைப்புக் கடிதம் வெள்ளிக் கிழமை மாலையே அமைச்சரின் கைக்குக் கிடைக்கப்பெற்றது. ஆனால், இதற்கு முன்னையதினம் 18ஆம் திகதி பத்திரிகை நிறுவனங்களுக்கு அமைச்சர் மீது அபாண்டங்களைச் சுமத்தி, அழைக்கப்பட்ட நோக்கம் திரிபுபடுத்தப்பட்டு, அமைச்சரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

அமைச்சரின் அரசியல் எதிரிகளின் ஊடகங்களினூடாக ஆணைக்குழுவின் அழைப்பு தொடர்பிலான திரிபுபடுத்தப்பட்ட அவதூறான செய்தியுடன் இந்தக் கடிதம் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் கையொப்பமிடுவதற்கு முன்னரே அழைப்புத் திகதியும் எவ்வாறு ஆணைக் குழுவிலிருந்து ஊடகங்களுக்குச் சென்றடைந்தது என்பது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–5)

# தனியார் மருத்துவ பல்கலையை மூடுமாறு வலியுறுத்தி போராட்டம்

கொழும்பு, ஓக. 22
மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தை மூடுமாறு வலியுறுத்தி மாணவர்களுக்குப் பதிலாக அவர்களது பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்திற்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்பில் மட்டுமல்லாது கம்பஹா, பதுளை உள்ளிட்ட நகரங்களிலும் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சர்ச்சைக்குரிய மாலபே தனியார் பல்கலைக் கழகத்திற்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதிலும், இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் விசனம் வெளியிட்டனர். (வ–5)

# விபத்தில் மூவர் சாவு

கொழும்பு, ஓக. 22
கொழும்பு–கதிர்காமம் முதன்மை வீதியின் திஸ்ஸமகாராம 8 ஆம் தூண் பிரதேசத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்தனர்.

பேருந்தும், முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம் பெற்றது என்றும், முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களே உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். விபத்துத் தொடர்பில் திஸ்ஸமகாராம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(வ–5)

# தேயிலைச் சபை நிதி விவகாரத்தில் நவீன் – ரவி சொற்போர்

கொழும்பு, ஓக. 22
தேயிலைச் சபையின் நிதி விவகாரத்தால் பெருந்தோட்டத் கைத்தொழிற்றுறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவுக்கும், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்குமிடையில் கடும் சொற்போர் மூண்டது.

இது விடயத்தில் நிதி அமைச்சர் தன்னிச்சையாகச் செயற்படுகிறார் என்று அமைச்சர் நவீன் திஸாநாயக்க சீறிப்பாய்ந்தார். பெருந்தோட்டத்துறை அமைச்சர் விவரம் அறியாது கதைக்கின்றார் என்று ரவி கருணாநாயக்க பதிலடி கொடுத்தார்.

தேயிலை ஏற்றுமதியின்போது, ஒரு கிலோவுக்கு தீர்வை வரிக்குப் புறம்பாக 4 ரூபா செஸ் வரியும் வியாபாரிகளால் செலுத்தப்படும். செஸ் வரியால் பெறப்படும் இலாபம், தேயிலை விற்பனை மேம்படுத்தல், ஆராய்ச்சி உள்ளிட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

இந்த நிதியை தனது அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க முயற்சிக்கிறார் என்று அமைச்சர் நவீன் திஸாநாயக்க குற்றம் சுமத்தினார். இதனையடுத்தே இருவருக்குமிடையில் கருத்து மோதல் ஏற்பட்டு, அது தற்போது உக்கிரமடைந்துள்ளது.

குறித்த நிதியை, நிதி அமைச்சு எடுத்தால் தான் பதவி விலகுவார் என்று எச்சரித்திருந்த நவீன் திஸாநாயக்க, அரநாயக்க பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலும் இதுபற்றி பேசியுள்ளார்.

"மேற்படி நிதி திறைசேரிக்குச் சென்றால், அது எவ்வாறு முகாமை செய்யப்படும் என்பது எவருக்கும் தெரியாது. அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி சுமுகமாகவும், இணக்கப்பாட்டுடனும் தான் முடிவுகள் எடுக்கப்படவேண்டும். இது விடயத்தில் தன்னிச்சையாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனால் மன வேதனை அடைகிறேன். இவ்வாறான அணுகுமுறைகளால்தான் மகிந்த அரசிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. எது எப்படியிருந்தபோதிலும் மேற்படி நிதி, நிதி அமைச்சுக்கு வழங்கப்படாது' என்றார் நவீன்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அரசமைப்பின் 148 ஆம் சரத்துக்கமைய மேற்படி நிதியை கூட்டு நிதியத்தால் எடுக்க முடியும். அது பிரச்சினைக்குரிய விடயமல்ல. பொது விடயத்துக்கு வந்த பின்னர் பிரித்து அனுப்பலாம். எனவே, அமைச்சர் ஏன் குழப்பமடைகிறார் எனத் தெரியவில்லை. கதைப்பதற்கு முன்னர் சிந்திக்க வேண்டும். நான் தன்னிச்சையாகச் செயற்படவில்லை. ஜனாதிபதி, பிரதமருடன் பேசப்பட்டே முடிவு எடுக்கப்படுகிறது – என்றார். (வ–5)

6 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
பொன்னையா செல்லையா

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
அப்பா!
ஆறவில்லை எம் துயர்
அப்பா!
உங்கள் நினைவுகள்
தினம் தினம் எமை வாட்டுது அப்பா!
என்றும் பிரியமுடன் வாழ்ந்த நாளை
நினைத்து நினைத்து ஏங்குகின்றோம்
அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில்
16.03.1942

விண்ணில்
30.08.2010

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
சிற்றம்பலம்வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(Gஉ/3071) (11,17,18,)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிச்சையாகச் செயற்படுகிறார் கூரே; குற்றம் சுமத்துகிறார் விக்கி

வடக்கு மாகாண ஆளுநர் கூரே தன்னிச்சையாகச் செயற்படுவதாகக் குற்றம் சுமத்துகிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

யாழ். செயலகத்தில் இன்று இடம்பெறும் முதலீட்டாளர் சம்மேளன ஆரம்பநிகழ்வில் கலந்துகொள்ள முடியாது எனவும் குறிப்பிட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் கூரேக்கு கடந்த வாரம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கடிதத்திலேயே, வடக்கு மாகாண முதலீட்டாளர் சம்மேளனம் தொடர்பில் ஆளுநர் தன்னிச்சையாகச் செயற்படுவதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான முதலீட்டு மாநாடு நடத்துவதற்கு முன்னர் துறைசார்ந்த நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து இருக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, கொழும்பில் நடைபெறும் கொழும்பு அரசின் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளதாலேயே இன்றைய நிகழ்வில் முதலமைச்சர் பங்குபற்றவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## குடாநாட்டில்

லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தத் திருவிழாக்களில் கலந்துகொள்ள வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் சட்டம் ஒழுங்கை சீராக மேற்கொள்ளும் வகையில், முன்னெச்சரிக்கை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எதுவிதமான குற்றச் செயல்களும் இடம்பெறா வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

குற்றச் செயல்கள் நடைபெற்றால் உடனடியாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அதிவேக நடவடிக்கை எடுப்பதற்காக உடனடியாக யாழ்.பிரதி பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் அல்லது யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கட்டுப்பாட்டில் பறக்கும் பொலிஸ் படையணி ஒன்றை உருவாக்கிச் செயற் படுத்த வேண்டும்.

குற்றச் செயல்கள் இடம்பெறுகின்ற இடத்திற்குத் துரிதமாக பொலிஸார் பறக்கும் படையணியாக விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்த நடவடிக்கை அவசியமாகியிருக்கின்றது.

குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்தல், குற்றச்செயல்கள் இடம்பெறா வண்ணம் தடுத்தல், குற்றம் புரிபவர்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல் ஆகிய நடவடிக்கைகளில் இந்தப் படையணி விரைந்து செயற்பட முடியும். இந்த நடைமுறையைப் பொலிஸார் கையாள வேண்டும்.

விரைவுச் செயற்பாட்டுப் பொலிஸ் படையணியானது, யாழ். குடாநாட்டின் எந்தப் பொலிஸ் நிலையப் பிரதேசமாக இருந்தாலும் பிரதி பொலிஸ்மா அதிபர் அல்லது மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலில் அங்கு பறக்கும் படையாகச் செயற்பட வேண்டும். சந்தேக நபர்கள் வேறு மாவட்டத்துக்கோ வேறு நாட்டுக்கோ தப்பிச் செல்ல இடமளிக்கக் கூடாது. நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்று சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேறாத வண்ணம் விமான நிலையத்தில் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடல் வழியாகச் சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல முடியாதவாறு கடற்படையைத் தயார் நிலைக்குக் கொண்டுவர வேண்டியது பொலிஸாரின் பொறுப்பாகும்.

குற்றச்செயல்களில் ஈடுபடுகின்ற சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு கிராம அலுவலர்களின் உதவிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த 3 மாத காலமாக அமைதி நிலவியதைத் தொடர்ந்து, யாழ். குடாநாட்டு மக்கள் பொலிஸார் மீது வைத்திருந்த நம்பிக்கையை கடந்த ஒரு வாரமாக இடம்பெற்ற சில சம்பவங்கள் சீர்குலைத்து விட்டன என்று நீதிபதி தெரிவித்தார்.

இதன்போது. அதற்கேற்றவாறு துரிதமாகப் பொலிஸார் செயற்படுவார்கள் என்றும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். என்று, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நீதிபதியிடம் உறுதியளித்தார். (வ-4)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
சந்திரவதனா சந்திரராசா

தோற்றம் 30.08.1960
மறைவு 21.07.2016

கடந்த (21.07.2016) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி சந்திரவதனா சந்திரராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதமாக வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

செருக்கப்புலம் வீதி, கொக்குவில்.
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

கார்த்திகேசு சுப்பையா



இணுவில் கிழக்கு, அங்களப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுப்பையா நேற்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் கணவரும் காலஞ் சென்றவர்களான பெரியபிள்ளை, அம்மா, செல்லாச்சி, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரனும் கனகம்மா (கனடா) காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, பரமசிவம் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுந்தரலிங்கம், நாகராசா, இந்திராணி ஆகியோரின் மாமனும் சுகந்தன், சுகந்தினி, முகுந்தன், சிவநந்தன், விக்கினேஸ்வரன், அபிராமி, ஐங்கரன், சிவசக்தி, சிவகுமாரன், சுரேஸ்குமார், தாஸ், வினோதினி, லோஜினி, கஜித்தா, காஞ்சனா சன்றல், திருப்பதிநாதன் ஆகியோரின் பேரனும் பிரீத்தி, சுதேசன், சபேஸ், சந்தோஷ், அசான், அன்சியா, ரியா, கீரன், ஓவியா, ஆர்யா, கோபிசன், கோபிகா, ராகுல், விசாலினி, வைசாலிகா, றோசி, பிரியா, கஜனன், தர்சனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

## சங்குவேலிக்...

மூத்த பொலிஸ் அத்தியட்சகர் முன்னர் தெரிவித்தார். சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே நேற்று சன்னா குழுவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மூத்த பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பை ஏற்படுத்தியபோதும் அவரின் தொடர்பு கிடைக்கவில்லை. (வ-4,106)

## ரூ. 7000

குருநகரில் 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் துறைமுகம் அமைக்கப்படவுள்ளது. ஆனால் அதன் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது முடிவு செய்யப்படவில்லை.

காரைநகரில் படகு கட்டுமானத் தொழிற்சாலைக்கு இன்று அடிக்கல் நடப்படும். 17 அடி நீளமான படகுகளை உற்பத்தி செய்வதில் அரசு உடன்பாடில்லை. ஏனெனில் அத்தகைய படகுகளால் கரையோரங்களில் மாத்திரமே மீன்பிடியில் ஈடுபட முடியும். கரையோரங்களில் மீன்கள் குறைவாக இருப்பதனாலும், 17 அடி நீள படகுகளை உற்பத்தி செய்வதில் அரசு கொள்கையளவில் உடன்படவில்லை. அதனால் அங்கு 55 அடி நீளமான ஆள்கடல் மீன்பிடிப் படகுகளை உற்பத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மீனவர்களுக்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபா செலவில் ஆள்கடல் படகுகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதனை 50 வீத மானிய அடிப்படையில் பெற்றுக் கொடுக்கவும் முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி மீனவர்கள் 65 லட்சம் ரூபா செலுத்தினால் அரசு மிகுதி 65 லட்சம் ரூபா செலுத்தி படகைப் பெற்றுத் தரும்.

ஆனால் அத்தகைய படகுகளை கொள்வனவு செய்தாலோ, அதனை காரைநகரில் உற்பத்தி செய்தாலோ, அவற்றை நிறுத்துவதற்குரிய துறைமுகம் வேண்டும். அதற்காகவே பருத்தித்துறைத் துறைமுகம் சீர்ப்படுத்தி விரிவாக்க 7 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது - என்றார்.

இதேவேளை மயிலிட்டித் துறைமுகத்தை விடுவிக்க வேண்டும், அங்கு தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும் என்று மக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். இந்த நிலையிலேயே பருத்தித்துறையில் பெரியளவிலான துறைமுகம் அமைக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. (வ-4)

## அமைச்சர்....

கோள்கள் எம்மிடம் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் கடற்படையினருடன் நாங்கள் பேச்சுக்கள் நடத்தி வருகின்றோம். இருப்பினும் இதில் சில சிக்கல்கள் இருப்பதாகக் கடற்படையினர் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு பாரப்படுத்தியிருக்கின்றோம். விரைவில் இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என பதிலளித்தார் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர. (வ -101)

## ஏழுமலையானை...

ஜனாதிபதி, அதிகாலை 3 மணிக்கு நடந்த சுப்ரபாத பூசையில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வருகைக்காக, திருப்பதி முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (வ-5)

## வடக்கு...

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களை சொந்த இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுப்பேன் எனத் தெரிவித்தார். அந்தக் கால அவகாசம் 8 மாதங்களைக் கடந்துள்ளது. (வ-101)

## பிள்ளையானின்...

இது தொடர்பாக விசாரணை செய்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர், விசாரணையை அம்பாறை குற்றத்தடுப்பு பிரிவினரிடம் வழங்கினர்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்களான திருக்கோவில் தம்பிலுவில் முனையக்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த மனோகரன், தம்பிலுவிலைச் சேர்ந்த க.கமலநாதன் (மதி) மற்றும் இனியபாரதியின் முன்னாள் வாகனச் சாரதியான தம்பிலுவில் ஆர்.டி.ஏ. வீதியைச் சேர்ந்த ஆ.யுவராஜ் ஆகியோரை நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அம்பாறை குற்றத்தடுப்பு பிரிவினர் கைதுசெய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

இதேவேளை, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களான ஹரன், யூட் ஆகிய இருவரை விசாரணைக்காக குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்திருந்தனர். (வ-5)

## வட மாகாண...

முதலீட்டாளர்கள், துறைசார் ஆர்வலர்களும் கலந்துகொள்கின்றனர் என அறிவிக்கப்பட்டது. (வ-5-ரி7)

## பெரிய...

கிராம் பெரிய வெங்காயத்திற்கான இறக்குமதி வரி 25 ரூபா வில் இருந்து 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

உள்நாட்டு வெங்காய உற்பத்தியாளர்களை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்தது. (வ-5)

## கிளிநொச்சியில்...

கண்டித்து இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி யில் பேரணி இடம்பெறவுள்ளது. ஆனையிறவில் இருந்து யு.என்.எச்.சி.ஆர் அலுவலகம் வரை இந்தப் பேரணி நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டிலேயே இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

இந்தப் பேரணிக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தெரிவித்தது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேவைகள் குறித்து நாளை கொழும்பில் கூட்டம்

கொழும்பு, ஓக.22
வடக்கு மாகாணத்தின் தேவை தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெறுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர்களில் ஒருவரான பாஸ்கரலிங்கம் தலைமையில் நிதியமைச்சின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகிறது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலதரப்பினரும் இதில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது . (வ-5)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முறைகேடு

யாழ்ப்பாணம், ஓக. 22
மாத்தளை வில்கமுவ நுககொல்ல பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இடம்பெற்றதாக கூறப் படும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நாடு முழுவதும் நேற்று இடம்பெற்றது. இதன் போதே முறைகேடு இடம் பெற்றதாகப் பரீட்சைத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பரீட்சை வினாத்தாள்களை வழங்கிவிட்டு தாம் சொல்லும் வரை விடையளிக்க வேண்டாம் என்றும், வினாத்தாளில் மாணவர்களது அனுமதி இலக்கத்தை மட்டுமே எழுதும்படியும் வினாத்தாள்களை விநியோகித்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதனால் வினாக்களுக்கு விடையளிக்காமல் மாணவர்கள் வினாத்தாள்களையே திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. பரீட்சை முடிய 20 நிமிடங்கள் இருக்கும் போது மற்றொரு அதிகாரி, பரீட்சை முடிய இன்னும் 20 நிமிடங்கள் இருப்பதாகவும், எனவே விரைவாக வினாக்களுக்கு விடையளிக்குமாறும் அறிவித்தார்.

இதனையடுத்தே மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிக்க ஆரம்பித்ததாகவும் இதனால் வினாத்தாளின் பல கேள்விகளுக்கு மாணவர்களால் விடை எழுத முடியாமல் போயுள்ளதாகவும் மாணவர்கள் கவலை வெளியிட்டனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு முறைப்பாடு செய்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக வலயக் கல்வி பணிப்பாளர்களிடம் அறிக்கை கோரியுள்ளதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார தெரிவித்தார்.

மேலும், புலமைப்பரிசில் பரீட்சைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும், இதன் பெறுபேறுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-5)

# சீசெல்ஸ் பயணத்துக்கு ரூ. 100 மில்லியனை செலவிட்டார் மகிந்த

கொழும்பு, ஓக. 22
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சீசெல்ஸ் பயணத்துக்காக 100 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.


பதவியில் இருந்த காலத்தில் மகிந்த ராஜபக்ச இரண்டு தடவைகள் சீசெல்ஸிற்கு மேற்கொண்ட பயணத்துக்காகவே இந்தத் தொகை செலவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவும், அவரது புதல்வர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட பிரதிநிதிகள் சீசெல்ஸிற்கு மேற்கொண்ட பயணத்துக்கு 50 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு மீளவும் அப்போதைய ஜனாதிபதியாக பதவியிலிருந்த மகிந்த ராபஜக்ச 97 பிரதிநிதிகளுடன் சீசெல்ஸிற்கு பயணம் சென்றார்.

இலங்கை வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்றவற்றின் கிளைகளை ஆரம்பித்து வைக்க இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது முன்னாள் அமைச்சர் விமல்வீரவன்ச அவரது மனைவி ஆகியோரும் சென்றிருந்தனர். இதற்கான பயணத்துக்காக 50 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி துரைசிங்கம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மயிலுவீதி, ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி துரைசிங்கம் நேற்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும்காலஞ் சென்றவர்களான தம்பித்துரை - துரையம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்ற துரைசிங்கத்தின் பாசமிகு மனைவியும் துசீந்தனின் (துசி/தம்பி) அன்புத்தாயும் மோகனாவின் அன்புமாமியும் நாகம்மாவின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, சின்னக்கிளி, துரைராஜா மற்றும் நாகேஸ்வரி (சகுந்தலா), இரத்தினராஜா (கனடா), தேம்பாமலர், தெய்வராணி (ராணி), இந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலு வீதி,
ஆறுகால்மடம்.

தகவல்
குடும்பத்தினர்
077 3357857

## மரண அறிவித்தல்

### கந்தையா குலசிங்கம்

(இளைப்பாறிய பொறியியலாளர்,சிமெந்துக் கூட்டுத்தாபனம், புத்தளம் - மின்வலு நிலையம்,ஆஸ்திரேலியா.)



அளவெட்டி தெற்கு, தம்பலாவத்தையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் நேற்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிவகங்கை தம்பதிகளின் அன்பு மகனும் சிவநாயகியின் (ஓய்வு பெற்ற அதிபர், புத்தளம் பார்த்தீமா கல்லூரி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான Dr.சுந்தரம்பிள்ளை- நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, ஆறுமுகம், பாக்கியலட்சுமி, செல்வி ஞானலட்சுமி மற்றும் தனலட்சுமி, குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்,இராசமலர், அரசரட்ணம், மகேந்திரலிங்கம், அருள்நாயகி மற்றும் ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற Dr.கணேசனின் சகலரும் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ஸ்ரீதேவி, ஜெயதேவி, ராகினி, காலஞ்சென்ற வத்சலா மற்றும் மாலதி, சுமதி, றவீனா, சூரியகுமார், துஷியந்தன், தர்ஷனன், ஜீவானி, அனுஷா ஆகியோரின் அன்பு மாமனும் அர்ச்சுனன், நகுலா ஆகியோரின் பெரியப்பாவும் மோகன்ராஜ், அனுருத்திரன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.08.2016 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

"ஸ்ரீ கைலாஸ்"
வட்டுக்கோட்டை.

தகவல்: பேறாமகன்,
கி.முருகதாசன்
(இளைப்பாறிய பதிவாளர்)
ஸ்ரீதேவி மாணிக்கவாசகர் (மருமகள்)
(வெள்ளவத்தை, கொழும்பு)

0776232908,0061298633441,
0061402158706 (ஆஸ்திரேலியா),
011 2552610 (கொழும்பு)

### அம்பலம் திருநாவுக்கரசு

தோற்றம்
17 . 05 . 1932



மறைவு
21 . 08 . 2016

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் (மல்லாவி 3ஆம் யுனிற், யோகபுரம்) கொண்ட அம்பலம் திருநாவுக்கரசு நேற்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் பேரின்பநாதன் (SAS லொறி), மோகனேஸ்வரன்(பிரான்ஸ்), கருணராசன், பிரபாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனேஸ்வரி, சாந்தினி, சகுந்ததி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் பிரியந்தன், டுஷ்யந்தினி, ரஷிந்தினி, கஜானி, றொசானி, கஜானன், கானுஜன், பபிஜன், கயூரினி, கிசானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரிக்கம்பரை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6653089

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரோஜினிதேவி பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி பஞ்சலிங்கம் நேற்று (21.08.2016) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி சோமசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் இலகுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் பஞ்சலிங்கத்தின் பாசமிகு மனைவியும் கம்ஷவாகினி (UK), திருவரன் (Colombo) ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராஜா (UK), தர்மராஜா (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ராசாத்தி, சாந்தினி ஆகியோரின் மைத்துனியும் தனஸ்காந்தனின்(UK) அன்பு மாமியும் அஜிந்த், அசாந்த் (UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.08.2016) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி - பி.ப. 1.30 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பஞ்சலிங்கம் (கணவர்)

### திருமதி கற்பகம் செல்லமுத்து



போதரமடம், துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கற்பகம் செல்லமுத்து நேற்று (21.08.2016) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சி.செல்லமுத்துவின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் ஸ்ரீநிவாஸன் (இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர்-கிளிநொச்சி), ஜகநாதன், இராஜேஸ்வரி, இராஜயோகானந்தம், விவேகானந்தம்(கனடா), மனோன்மணி, இந்து, இரகுநாதன் (கனடா),சிவயோகம்(ஜேர்மனி), காலஞ்சென்ற சிவஞானம், சிவலிங்கம், லலிதா(மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல்சியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போதரமடம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
077 3931256

### திருமதி சின்னம்மா இராமர்



நீர்வேலி மேற்கு, கரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இராமர் நேற்று (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவரான கந்தையா இராமரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்னலிங்கம் நடராசாவின் அன்பு சகோதரியும், ரஞ்சினி (லண்டன்), அகிலேஸ்வரன் (அகிலன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராசா (லண்டன்), பிரதீபா (தீபா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவாகர், சிவாஜினி, ராகுலன், ரஜிந்தா (லண்டன்), கிருஷணா, திவானிகா, கஜானன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியுளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
கரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 608 4422

(J/3972)
(11,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறையற்ற பந்துகளை கணிக்க வருகிறது புதிய தொழில்நுட்பம்

கிரிக்கெட்டில் வீசப்படும் முறையற்ற பந்துகளை கணிக்க புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மைதான நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது என்ற நிலைமை இந்த தொழில்நுட்பம் மூலம் மாற்றப்படும் என்று கருதப்படுகிறது.

வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துப் பரிமாற்றங்களில் நடுவர்கள் முறையற்ற பந்துகளைக் கணிப்பதில் சில தவறுகள் விடுவதுண்டு. இதனால் சில தீர்ப்புக்கள், சில ஆட்டங்களின் முடிவையே மாற்றும்படியாக அமைந்த வரலாறுகள் உள்ளன. இந்த நிலையில் இந்த தொழில்நுட்பம் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் விதமாக அமைந்துள்ளது.

கைக்கடிகாரத்தின் வடிவில் உள்ள ஓர் உபகரணம், மைதான நடுவர் கையில் கட்டப்பட்டிருக்கும். பந்து வீச்சாளர் எல்லையைத் தாண்டி பந்து வீசும் போது குறித்த சாதனம் அதிர்வலையை ஏற்படுத்த முறையற்ற பந்துகள் துல்லியமாக கணிக்கப்பட்டு அறிவிக்கப்படும். இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து, பாகிஸ்தான் தொடரில் இந்த முறைமை பரிசோதித்து பார்க்கப்படவுள்ளது. (ம)



## ஓய்வுபெறும் எண்ணம் இல்லை; தெரிவித்தார் மிஸ்பா உல் ஹக்

வாய்ப்புக் கிடைத்தால் இன்னும் சில ஆண்டுகள் பாகிஸ்தான் அணிக்காக விளையாடத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார் அந்த அணியின் டெஸ்ட் தலைவரான மிஸ்பா உல் ஹக்.

பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மிஸ்பா இவ்வாறு தெரிவித்தார். டெஸ்ட் ஆட்டத்தில் அவசரப்பட்டு ஓய்வெடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. வாய்ப்புக் கிடைத்தால் இன்னும் சில காலம் ஆடுவேன். அணியில் சமநிலைத் தன்மையை கட்டியெழுப்ப சில இளம் வீரர்களை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது. எனது பணிகள் அனைத்தும் சிறப்பாக நிறைவடைந்தது எனக் கருதும் பட்சத்தில் எனது ஓய்வு முடிவை அறிவிப்பேன். சில வேளைகளில் 50 வயது வரை விளையாடவேண்டியும் வரலாம் என மிஸ்பா மேலும் தெரிவித்தார். (ம)







## இப்ராகிமோவிக் அசத்தல் ஆட்டம்; வென்றது மன்செஸ்டர் யுனைற்ரெட்

ஐரோப்பிய கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் பிறீமியர் லீக் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்ட மொன்றில் மன்செஸ்டர் யுனைட்ரெட் அணி இலகு வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் யுனைற்ரெட்டின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அந்த அணியை எதிர்த்து செளதாம்டன் மோதியது. ஆட்டத்தின் முதல் 36 நிமிடங்கள் வரை எந்த அணியாலும் கோலைப் பதிவு செய்ய முடியவில்லை. 36 ஆவது நிமிடத்தில் மைதானத்தில் முனையிலிருந்து ரூனி வாய்ப்பை வழங்க நட்சத்திர வீரரான இப்ராகிமோவிக் அதைக் கோலாக மாற்றினார். யுனைற்ரெட்டின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. ஆட்டத்தின் 52 ஆவது நிமிடத்தில் இப்ராகிமோவிக் யுனைற்ரெட்டின் இரண்டாவது கோலைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் செளதாம்டனை வீழ்த்தியது. (ம)



## எனது ஆட்டமிழப்புக்கள் வருத்தத்தைத் தருகின்றன
### சிமித் கவலை

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தனது ஆட்டமிழப்புக்கள் தேவையற்ற விதத்தில் அமைந்ததாகத் தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் அணித்தலைவர் சிமித். மூன்று டெஸ்ட் ஆட்டங்களின் ஆறு இன்னிங்ஸிலும் 5 தடவைகள் கேரத்திடம் சிமித் வீழ்ந்தார். இதனால் ஆசிய ஆடுகளங்களில் சிமித் சரிப்பட்டு வரமாட்டார் என்ற கணிப்பை அவர் உறுதி செய்ததாகவே கருதப்படுகிறது. இந்த நிலையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார். விடுதியில் தங்கியிருக்கும்போது என்னுடைய ஆட்டமிழப்புக்களை நான் மீண்டும் பரிசீலனை செய்து பார்த்தேன். ஏராளமான தவறுகளை நான் செய்ததாக உணர்கிறேன். நான் வருத்தப்படுகிறேன். குறிப்பாக கேரத்தின் பந்துவீச்சில் இரண்டு முறை நான் போல்ட் செய்யப்பட்டமை வருத்தத்தைத் தருகிறது. ஏனென்றால், இந்தத் தொடருக்காக நான் நீண்ட நேரம் வலைப் பயிற்சியில் ஈடுபட்டேன். ஆசிய ஆடுகளங்களில் எம்மால் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நினைத்திருந்தேன் என்று சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

## பூப்பந்தாட்டத் தொடரில் மன்னார் வீராங்கனை கிண்ணம் வென்றார்

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையால் நடத்தப்பட்ட பூப்பந்தாட்டத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தஎஸ்.நடாசம்பியனானார்.

மன்னார் உள்ளரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்டத்தை நடா மற்றும் நவ்வால் இருவரும் பலப்பரீட்சை நடத்தினர். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 21:15, 21:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நடா 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றார். மூன்றாமிடத்தை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சலோ

## இன்றைய மோதல்கள்

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் பி அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து ஞானமுருகன் ஏ அணியும் மோதவுள்ளன. (ம-422)

## தொடர்கிறது மழை

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின மூன்றாம் நாளும் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள இந்தியா அந்த இடத்தைத் தக்கவைக்க இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. ஆட்டம் சமநிலையில் முடிந்தால் பாகிஸ்தான் முதலிடம் பிடிக்கும். இந்த நிலையில் மழை இந்தியாவுக்கு பெரும் சோதனையாக வந்தமைந்துள்ளது. (ம)

## பூப்பந்தாட்டத் தொடரில் வவுனியா வீரர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 22

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையால் நடத்தப்பட்ட பூப்பந்தாட்டத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். அபிசேக் சம்பியனானார்.

மன்னார் உள்ளரங்க விளையாட்டுத்திடலில் தொடர் நடைபெற்று வருகிறது. இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ரதீசனும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். அபிசேக்கும் பலப்பரீட்சை நடத்தினர். 3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் செற்றை 21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அபிசேக் கைப்பற்றினார். இரண்டாவது செற்றை 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் ரதீசன். தற்போது நிலைமை 1:1. இறுதி செற்றில் வெற்றிபெறுபவரே சம்பியன் என்ற நிலையில், அந்த செற்றை 21:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய அபிசேக் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார். மூன்றாமிடத்தை யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மயூரன் கைப்பற்றினார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி. மாவட்ட பாடசாலைகள் அணி வவு. மாவட்ட அணியை வீழ்த்தியது

யாழ்ப்பாணம், ஓக. 22
பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அணி வவுனியா மாவட்டப் பாடசாலைகள் அணியை வீழ்த்தியது.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுபெடுத்தாடிய வவுனியா மாவட்டப் பாடசாலைகள் அணி 49.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக இம்கான் 16 ஓட்டங்களையும், தனுசன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அணியின் சார்பில் தனுசன் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அணி 38 பந்துப் பரிமாற்றங்களில் இரு இலக்குகளை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்தது.
அதிகபட்சமாக ஜசிக் குமார் 55 ஓட்டங்களையும், யுவேந்திரன் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வவுனியா மாவட்டப் பாடசாலைகள் அணியின் சார்பில் நிவேதிகன், ரோஜர் இருவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம-422)



# வவு. மாவட்ட பொது வைத்தியசாலை துடுப்பாட்டத்தில் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 22
வவுனியா மாவட்டத் திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலை அணி சம்பியனானது.
வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலை அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட நில அளவைத் திணைக்கள அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பவிராஜ் 57 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்து வீச்சில் வவுனியா மாவட்ட நில அளவைத் திணைக்கள அணியின் சார்பில் நிருசன், கஜித், அருசாந் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.
83 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட நில அளவைத் திணைக்கள அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்தபோதிலும் 79 ஓட்டங்களையே பெற்று மூன்று ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
அதிகபட்சமாக தரங்க பண்டார 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சார்பில் சுரேஸ், கவிராஜ் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம-23)

## சாவகச்சேரி நகரசபை மைதானம் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

சாவகச்சேரி, ஓக. 22
சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானம் 400 மீற்றர் தடத்தைக் கொண்ட மைதானமாகப் புனரமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் கிராம ஒருங்கிணைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழேயே இந்தப் புனரமைப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது.
சாவகச்சேரி தனங்களப்புப் பகுதியில் உள்ள இந்த மைதானம் கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்வாங்கப்பட்டிருந்தது. உரிய வசதிகள் இல்லாத காரணத்தால் 2010 ஆம் ஆண்டின் பிற்பாடும் இந்த மைதானத்தைப் பயன்படுத்துவதில் சிக்கல் நிலை இருந்தது.
இந்த நிலையில் மைதானப் புனரமைப்பு பணிக்காக சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் 2 மில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.
இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, நகரசபை மைதானம் கடந்த பல வருடங்களாக அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தது. விடுவிக்கப்பட்ட பின்னரும் வளப்பற்றாக் குறையால் பாவனைக்கு உகந்ததாக இருக்கவில்லை.
எனவே பலரது வேண்டுகோளுக்கு இணங்க மைதானத்தைப் புனரமைக்கத் திட்டமிட்டுள்ளோம். ஒரு விசேட குழு அமைத்து அந்தக் குழுவின் திட்டங்கள், பரிந்துரைகள், ஆலோசனைகள் மூலம் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (ம-9)

## இன்றைய மோதல்


யாழ்ப்பாணம், ஓக. 22
இலங்கை கிரிக்கெட் சபை நடத்திவரும் 15 வயதுக்கு உட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டமொன்றில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதவுள்ளது. (ம-23)



உயிரிழை அமைப்பால் நடத்தப்பட்ட முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டப் போட்டி வவுனியா நகர சபையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ம-23)

## சாய்னாவுக்கு அறுவைச்சிகிச்சை

இந்திய நட்சத்திர பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவாலுக்கு முழங்காலில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
முழங்காலில் ஏற்பட்ட காயத்துடன் ரியோ ஒலிம்பிக் தொடரில் களமிறங்கிய சாய்னா நேவால், முதல் சுற்றுடன் தோல்வியடைந்து வெளியேறினார். இவரது தோல்விக்குக் காயம் பிரதான ஒரு காரணமாகச் சொல்லப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த காயத்துக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு சாய்னா ஓய்விலிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. எனவே நடப்பு வருடத்தில் ஏனைய ஆட்டங்கள் அனைத்திலிருந்தும் சாய்னா விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. (ம)



## வடமராட்சி கால்பந்தாட்ட சங்கத்தின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 22
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வடமராட்சி, மன்னார், மட்டக்களப்பு லீக் அணிகள் வெற்றிபெற்றன.

**வடமராட்சி – முல்லைத்தீவு**

கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடர் இடம்பெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக் அணியும் முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் முழுப்பகுதியையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த வடமராட்சி அணி 8:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
பீமா மற்றும் துசி இருவரும் தலா மூன்று கோல்களையும் விஸ்ணு காந் இரு கோல்களையும் பதிவுசெய்தனர்.

**மன்னார் – மூதூர்**

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் மாவட்ட லீக் அணியும் மூதூர் லீக் அணியும் மோதின. ஆட்டம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த மன்னார் லீக் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சிந்துயன் மற்றும் றெக்சன் இருவரும் தலா மூன்று கோல்களையும் சுரேஸ் ஒரு கோலையும் பதிவுசெய்தனர்.

**மட்டக்களப்பு – தீவகம்**

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு லீக் அணியும் தீவக லீக் அணியும் பலப்பரீட்சை நடத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல்களின் அடிப்படையில் மட்டக்களப்பு லீக் வெற்றிபெற்றது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பிராந்திய அணி சம்பியன்; அம்பலாங்கொடயை வீழ்த்தியது

யாழ்ப்பாணம், ஓக. 22
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய தொடரில் சாந்தனின் ஹற்றிக் கோல்களின் உதவியுடன் அம்பலாங்கொட பிராந்திய அணியை வீழ்த்தி சம்பியனானது யாழ். பிராந்திய அணி.

களனி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். பிராந்திய அணியை எதிர்த்து அம்பலாங்கொட பிராந்திய அணி மோதியது.

ஆட்டத்தின் 1? ஆவது நிமிடத்தில் யாழ். பிராந்திய அணியின் சாந்தன் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவுசெய்தார். 32ஆவது நிமிடத்தில் றெம்சன் மூலம் யாழின் இரண்டாவது கோல் பதிவானது. வேறெந்த மாற்றமும் இல்லாமல் 2:0 என்ற யாழின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.

ஆட்டத்தின் 55ஆவது, 75ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்து ஹற்றிக் படைத்தார் சாந்தன். அம்பலாங்கொடயின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைய 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வாகை சூடியது யாழ். பிராந்திய அணி. (ம-23)



## மிச்செல் ஸ்ராக் புதிய சாதனை



பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் விரைவாக 100 இலக்குகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ராக்.

இலங்கை – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் ஆட்டத்தில் தனஞ்சய டி சில்வாவை வீழ்த்தியதன் மூலமே ஸ்ராக் இந்த மைல்கல்லை எட்டினார். பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்தாக் 53 ஆட்டங்களில் 100 இலக்குகளை வீழ்த்தியமையே இதுவரை சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையையே ஸ்ராக் தற்போது தகர்த்துள்ளார். 100 இலக்குகளை அடைய ஸ்ராக்குக்கு 51 ஆட்டங்களே தேவைப்பட்டது. (ம)

## 200 மீற்றர் படகோட்டத்தில் பிரிட்டன் தங்கம் வென்றது

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 200 மீற்றர் படகோட்டத்தில் பிரிட்டனுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

பிரிட்டனின் சார்பாகக் களமிறங்கிய லியாம் கேத் 35 செக்கன்கள் 19 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார். பிரான்ஸ் வீரர் மக்சிமி பேமார்ன்ட் 35 செக்கன்கள் 36 மில்லி செக்கன்களிலும், ஸ்பெய்ன் வீரர் சோல் ரிவெரோ, ஜேர்மன் வீரர் றொனால்ட் இருவரும் 35 செக்கன்கள் 66 மில்லி செக்கன்களிலும் இலக்கை அடைந்தனர். (ம)

## நியூசிலாந்து – தெ.ஆபிரிக்கா மழையின் குறுக்கீடு அதிகம்



தென்னாபிரிக்கா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று மழை குறுக்கிட ஒரு பந்துகூட வீசப்படாமல் ஆட்டம் கைவிடப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 263 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக அம்லா 53 ஓட்டங்களையும், பவுமா 46 ஓட்டங்களையும், குயின்டன் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் வாக்நெர், போல்ட் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், சான்நெர் இரு இலக்குகளையும், சவுத்தி, பிரேஸ்வெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 15-2 என்ற நிலையில் இருந்த போது இரண்டாம் நாள் முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றையதினம் மழை குறுக்கிட ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் முடிவு கண்டது. (ம)

## ஆஸி. பதட்டமில்லாத வெற்றி; மத்தியூஸ் சொதப்பல் ஆட்டம்

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் மத்தியூஸ் சகல துறைகளிலும் சொதப்பித்தள்ள 3 இலக்குகளால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே குசல் பெரேராவை போல்ட் செய்து இலங்கைக்கு நடுக்கத்தை ஏற்படுத்தினார் ஸ்ராக். டில்சான், மெண்டிஸ் இணை சிறிது தாக்குப்பிடித்த போதிலும் பந்துப்பரிமாற்றத்துக்கு மூன்று ஓட்டங்கள் என்றவாறாகவே சராசரி சென்றது. இதுவும் ஒரு விதத்தில் பின்னடைவைக் கொண்டுவந்தது. டில்சானை வீழ்த்தினார் ஹென்றிக்ஸ். அரைச்சதம் கடந்த மென்டிசை வீழ்த்திய பல்க்நெர் அதே பந்துப்பரிமாற்றத்தில் மத்தியூசை ஓட்டமெதனையும் பெறவிடாது இருக்கைக்குத் திருப்பினார். சந்திமல் ஒரு முனையில் நிதானத்தை வெளிப்படுத்தினாலும் மறுமுனையில் எவரும் நீண்டு நிலைபெறவில்லை. 79 பந்துகளை எதிர்கொண்டு அரைச்சதம் கடந்தார் சந்திமல். திசர பெரேரா சிறிது அடித்தாடி 21 ஓட்டங்களைச் சேர்த்தார். முடிவில் இலங்கை 227-8.



பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக பல்க்நெர் 4 இலக்குகளையும், ஸ்ராக் 3 இலக்குகளையும், ஹென்றிக்ஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு அதன் அதிரடி வீரரான வோர்ணர் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து தடுமாற்றம் காட்டினார். ஆனால் பதட்டத்தைக் குறைக்க அதிரடியைக் கையிலெடுத்தார் பின்ஞ். அரைச்சதத்தைக் கடக்க பின்ஞ்சுக்கு 37 பந்துகளே தேவைப்பட்டன. டில்சான், மத்தியூஸ் இருவரதும் பந்துப்பரிமாற்றங்களில் சிக்சர்களும் பதிவாகின. 56 ஓட்டங்களுடன் பின்ஞ்சை வீழ்த்தினார் அபொன்சோ. அணியை வழிநடத்திச் சென்றார் சிமித். சிமித் 13 ஓட்டங்களில் ஆட்டமிழக்க வேண்டியவர், மத்தியூஸ் பிடியெடுப்பைத் தவறவிட்டதால் அரைச்சதம் கடந்தார். வேட், பெய்லி இருவரும் சிமித்துடன் சிறந்த இணைப்பாட்டங்களை அவ்வப்போது அரங்கேற்றியிருந்தனர். இறுதிக்கட்டத்தில் சிமித் ஆட்டமிழந்தாலும் அளவுக்கு அதிகமான பந்துகள் மீதமிருந்ததால் ஆஸ்திரேலியா நிதானமான வெற்றியைப் பதிவுசெய்தது.

பந்துவீச்சில் இலங்கையின் சார்பில் எம்.கே. பெரேரா மூன்று இலக்குகளையும், சண்டகன் இரு இலக்குகளையும், திசரபெரேரா, அபொன்சோ இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## குத்துச்சண்டையில் ரஷ்யாவுக்குத் தங்கம்

ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 8? கிலோ எடைப்பிரிவு குத்துச் சண்டையில் ரஷ்யா தங்கப்பதக்கத்தை ந் தன தாக்கியது. தங்கப்பதக்கத் து க்காக இடம்பெற்ற போட்டியில் ரஷ்ய வீரர் அப்துல்ராசிட், துருக்கி வீரர் செலிம் யாசர் இருவரும் மோதினர். செலிம் யாசரை வீழ்த்தி தங்கம் வென்றார்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி மூலமான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 27.08.2016
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
முன்பதிவின் அடிப்படையில் இன்னும் சிலசில இடங்களே உள்ளன!
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

MCSE-USA என்ஜினியரிங் கற்கைநெறி முழுக்கட்டணம் Rs.18,000 மட்டுமே.
MTA என்ற கற்கைநெறியில் உள்ள Fundamental Modulesஆன Network, Server, Security, Windows, Database, Html, SQL போன்ற 7 Modulesஉடன் MCSE கற்கைநெறியில் 410,411,412,413,414,415,416 போன்ற 7 Modulesகளையும் செய்முறையுடன் கற்று பரீட்சைக்கு தோற்றி சித்தியெய்த 21 நாட்களில் Microsoft USAன் நேரடி சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
***MTA 7 Modules பரீட்சை எடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.***
பதிவுகளுக்கு: கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS

FLC
FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர்: MR. V. J. (Trained in France - 2007)
DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.
இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09.16 Mon@ 3.30 pm
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org